# தமிழரசு

16-11-1991 ரூ.1





# இந்த இதழில்...


சென்னையில்
மேதகு குடியரசுத் தலைவர் ... 2

— புதுடில்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை ... 4

அறியாமை இருள் அகற்றிட அரிய பணிகள் ... 7

கூட்டுறவால் கோடி நன்மை (கவிதை) ... 9

மகளிர் நலம் ... 11

சமுதாய வளத்துக்கு சமுதாயக் காடுகள் ... 13

தமிழ்நாடு கூட்டுறவுப் பட்டு உற்பத்தியாளர் இணையம் ... 15

தருமபுரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 17

நீலப்புரட்சி ... 21

சேலம் அரசு அருங்காட்சியகம் ... 24

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 27

எயிட்ஸ் நோய் — ஓர் அறிவுரை ... 29

வெண்மைப் புரட்சியில் பால்வளத்துறை ... 33

இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி ... 37

பெரியார் மாவட்டத்தில் கூட்டுறவு ... 40.

மழைக்கால நோய்கள் ... 41

நானிலம் காத்த நேருவின் நடுநிலைக் கொள்கை ... 45



## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022
ஐப்பசித் திங்கள் - 30
மலர்:22 16-11-1991 இதழ்:10


38-வது அகில இந்தியக் கூட்டுறவு வார விழாவினை யொட்டி, கூட்டுறவு தொடர் பான கட்டுரைகள், கவிதைகள் இந்த இதழில் இடம் பெறுகின்றன.



மக்கள் சமூகம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும். இதற்கு மக்கள் தயாராகிவிட வேண்டும். சுயநலத்தை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். பலருடைய நன்மை ஒன்றே கருதி வாழ்வில் இறங்கவேண்டும.

—தந்தை பெரியார்



கூட்டுறவு என்ற சொல்லில் 'கூட்டு', 'உறவு' என்று இரண்டு சொற்கள் அடங்கியுள்ளன. 'கூட்டு' மட்டும் என்றால் இலாபம் மட்டும் என்று தான் பொருள்படும். உறவு கூட்டுடன் சேர்ந்தால்தான், தோழமை யின் அடிப்படையான இலாபமற்ற நோக்கம் தெளிவாகிறது.

—பேரறிஞர் அண்ணா



கூட்டுறவு என்பது மனிதனுக்கு மனிதன் தகுதியை உணர்வது மட்டு மல்ல-தரத்தை மட்டுமல்ல-அவர் களை மதிக்கக் கூடிய பணியைப் பெறுவது மட்டுமல்ல-தங்களுக்கு முடிவதை- பிறர் இயலாமையை எண்ணி அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய அந்த எண்ணமே கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை மூலதனமாகும்.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.




# சென்னையில் மேதகு குடியரசுத் தலைவர்

**மே**தகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் தமது துணைவியாருடன் இரண்டு நாள் பயணமாக 9.11.91 அன்று காலை சென்னை வந்தார். சென்னை விமான நிலையத்தில் குடியரசுத் தலைவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா, சட்டப் பேரவைத் தலைவர் திரு.சேடப்பட்டி ஆர்.முத்தையா, துணைத் தலைவர் பேராசிரியர் க.பொன்னுசாமி, அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் குடியரசுத் தலைவருக்கு மாலை அறிவித்து வரவேற்றனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் குடியரசுத் தலைவருக்குப் பொன்னாடை போர்த்திச் சந்தன மாலை அணிவித்தார்.

விமான நிலைய வரவேற்புக்குப் பின் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் ஆளுநர் மாளிகைக்குப் புறப்பட்டுச் சென்றார். பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆளுநர் மாளிகைக்குச் சென்று மேதகு குடியரசுத் தலைவர் அவர்களைத் தனியாகச் சந்தித்துப் பேசினார்.

அன்று மாலை சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் வைர விழாவினை, மேதகு குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில்,

''இப்போது மேற்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான் முதலிய நாடுகளின் வேகப்பந்து வீச்சாளர்களின் சவாலை இந்தியா எதிர் கொண்டிருக்கிறது. இந்த விஷயத்தில் மேலும் அதிக வலுவூட்டப்பட வேண்டும். வளர்ந்து வரும் சவால்களைச் சந்திப்பதற்காக வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்குவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. எனவே, காலப்போக்கில் இந்தியாவிலும் வேகப்பந்து வீச்சாளர் அணி வரிசை உருவாகும்'' என்று நம்பிக்கை தெரிவித்தார். தமிழ்நாட்டில் கிரிக்கெட் விளையாட்டுக்காக எம்.ஏ. சிதம்பரம் ஆற்றிய தொண்டினை மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் பாராட்டிப் பேசினார்.

விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் தலைமையேற்றுப் பேசுகையில், 'டெஸ்ட்' போட்டியாக இருந்தாலும், ஒரு நாள் ஆட்டமாக இருந்தாலும் ஏராளமான வரவேற்பைப் பெரும் அளவுக்குக் கிரிக்கெட் இப்போது மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறது. சர்வதேசப் போட்டிகளை நடத்தும் அளவுக்கு விளையாட்டு வசதிகளைப் பெருக்கும் திட்டங்களுக்கு முதல்வர் ஆதரவு காட்டி வருகிறார்' என்று கூறினார்.

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் வைரவிழா மலரை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டுப் பேசுகையில்,

''நான் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் என்பதை அறிவதில் உங்களுக்கெல்

லாம் மகிழ்ச்சியாக இருக்கும். கிரிக்கெட் விளையாட்டில் நம் நாட்டின் பெண்களிடம் ஏராள மான திறமை இருக்கிறது. இதை நாம் ஊக்குவிக்க வேண்டும். இந்தியக் கிரிக்கெட் அரங்கில் தமிழகம் பல ஆண்டுகளாகப் பெரும் பங்கு ஆற்றியுள்ளது. தமிழக வீரர்கள் கடுமையாக உழைத்து இந்திய அணி யில் இடம் பெற்றுள்ளனர். விளை யாட்டுத் துறையில் தகுதி வாய்ந்த இளைஞர்களைக் கண்டுபிடித்து, ஊக்கம் அளிக்கத் தமிழக அரசு ஆர்வம் கொண்டுள்ளது. மாநிலம் முழுவதும் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டங் களின் உதவியுடன் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை முயன்று வருகிறது.



**நமது உழவர்களை விஞ்ஞான முறையில் வேளாண்மைத் தொழில் செய்ய ஈடுபடுத்த வேண்டும். அதை நாம் எவ்வாறு செய்வது? கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக இதை மிக எளிதாகச் செய்ய முடியும். வேறு அணுகுமுறை எதுவும் எனக்குத் தோன்றவில்லை.**

''விளையாட்டு அரங்கில் உன்னத நிலையை எட்ட விரும்பும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற இளைஞர்களின் விருப்பத்தை அரசு நிறைவேற்றி வைக்க முடியும் என நம்புகிறேன். விளையாட்டுத் துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் தமிழ கத்தை முன்னுக்குக் கொண்டுவரும் பணியை அரசு ஏற்கெனவே ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் போன்ற விளையாட்டு அமைப்புகளுக்குத் தமிழக அரசு ஆதரவு கொடுக்கும். அதே நேரத் தில் எந்த ஒரு திறமை வாய்ந்த வீரரோ, வீராங்கனையோ விளை யாட்டுத் துறையில் முன்னேற்றம் காண, அரசு தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும், ஊக்கத் தையும் அளிக்கும்'' என்று கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், வைரவிழா மலரின் முதல் பிரதியை வெளியிட, அதை மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச் சரும், இந்தியக் கிரிக்கெட் கண்ட் ரோல் போர்டின் தலைவருமான திரு. மாதவ்ராவ் சிந்தியா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கிரிக்கெட் அரங்கில் புகழ்பெற்று விளங்கிய பழம் பெரும் வீரர் களான சி.ஆர்.பட்டாபிராமன், எம்.ஜே.கோபாலன், ஏ.ஜி.ராம்சிங், எஸ்.ஸ்ரீராமன் ஆகியோருக்கு ஆளுநர் நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

முன்னதாக, தமிழ்நாடு கிரிக் கெட் சங்கத்தின் தலைவர் திரு. ஆர்.பாலு அழகனன் வரவேற்புரை நிகழ்த்தினார். சங்கச் செயலர் யு.பிரபாகர்ராவ் நன்றி கூறினார்.

தமது மூன்று நாள் தமிழ்நாடு பயணத்தை முடித்துக் கொண்டு குடியரசுத் தலைவர் அவர்கள் *10.11.'91* அன்று விமானப்படை தனி விமானம் மூலம் புதுடெல்லி புறப்பட்டுச் சென்றார்.

**—நமது செய்தியாளர்**





புதுடில்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம்

# மாண்புமிகு முதல்வர் உரை

**நா**ட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானதொரு பொருள் பற்றி விவாதிக்க, நாம் சோதனை யான இந்தக் காலகட்டத்தில் இங்கு கூடியிருப்பது மிகவும் பொருத்தமே யாகும். நம் நாட்டின் ஒருமைப் பாட்டையே பாதிக்கும் மத வெறி களைத் தூண்டும் சக்தி படைத்த ஒரு பொருள் பற்றி விவாதிக்க குறுகிய காலத்தில், இந்த மாநாட்டைக் கூட் டிய இந்தியப் பிரதமர் அவர்களைப் பாராட்டுகிறேன். நான் பாபர் மசூதி - ராம ஜென்மபூமி விவகாரத் தையே குறிப்பிடுகிறேன்.

ராம ஜென்மபூமி - பாபர் மசூதி பிரச்சினையைத் தனிமைப்படுத்திப் பார்க்கக் கூடாது. இந்த விஷயத்தை உத்திரபிரதேசத்திலுள்ள இரு இன மக்களின் பிரச்சினையாகவோ - வேறு எந்த வட மாநிலத்தின் பிரச் சினையாகவோ கருதக் கூடாது. இரு முக்கிய இன மக்களின் பிரதிநிதி யாக இருக்கும் சில சுயநல அரசியல் வாதிகளிடையே ஏற்பட்டுள்ள பிரச் சினையாகவும் இதைக் கருத முடி யாது. இதன் வரலாற்றையும், பல் லாண்டுக் கால வளர்ச்சியினையும் நாம் ஒதுக்கிவிட முடியாது. ஒரு இன மக்கள் வேறு இன மக்களுக்கு எதிராகத் தங்களின் உரிமையை நிலை நாட்டும் பிரச்சினையாகவும் இதை நாம் கருத முடியாது. நம் நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் தேசிய ஒருமைப்பாடு, சமூக அமைதி, நல்லெண்ணம், ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளுதல் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு ராம ஜென்மபூமி - பாபர் மசூதி பிரச்சினையை அணுக வேண்டும் என்பது என் பணிவான கருத் தாகும்.

இப்பிரச்சினையின் வரலாற்று விவரங்களுக்குள் நான் போகப் போவதில்லை. ஏனெனில் அது சரித்திர ஆராய்ச்சியாளர்களின் பணியாகும். நம் நாட்டின் வரலாறு எழுதப்பட்ட கடந்த கால பின்னணி யின் காரணமாக முக்கிமான அம்சங் களில்கூட நம் வரலாற்று ஆசிரியர்கள் ஒன்றுபடவில்லை என்பதனையே நான் காண முடிகிறது. நம் நாட் டைச் சேர்ந்த இரு இன மக்கள் தங்களின் வரலாற்று உரிமையை நிலை நாட்டிட முற்படும்போது நாம் என்ன செய்யப் போகிறோம் என் பதே கேள்வி.

நமது அரசியல் நிர்ணய சட்டம் மதச்சார்பற்ற ஜனநாயகத்திற்கு உத்தர வாதம் அளிக்கிறது. அனைத்து மத வளர்ச்சிக்கும் சுதந்திரம் அளிப்பதில் புகழ் பெற்றது நம் நாடு என்பதும், நம் நாட்டு மதங்களும் இனங்களும் பண்பாட்டுப் பரிமாற்றங்களைச் செய்துகொண்டு சிறந்த நட்போடு வாழ்ந்து வந்துள்ளன என்பதும் உலகறிந்த உண்மைகள். அமைதி



**உறுப்பினர்களின் நாணயத்தைப் பொறுத்துத் தான் கூட்டுறவின் வெற்றி அமைகிறது. இவ்வியக்கம் சங்கங்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல. உறுப்பினர்களின் நேர்மையின் அடிப்படையில் அமைகிறது.**

**—அண்ணல் காந்தியடிகள்**

யோடும், நல்லிணக்கத்தோடும் வாழ்ந்து வந்த சமூகச் சூழ்நிலைக்கு ஊறுவிளைத்த சோகச் சம்பவங்கள் அவ்வப்போது நம் சரித்திர ஏட்டில் காணப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் அதை நாம் பெரிது படுத்தலாகாது. இந்த உணர்வோடு, ராம ஜென்மபூமி விவகாரத்தில் யாருக்கும் மற்றவரைவிட வெற்றி தோல்வி எனும் நிலை ஏற்படா வண்ணம், பார்த்துக் கொள்ள வேண்டும் என உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இப்பிரச்சினையில் அரசியல் நுழையாமல் நாம் பார்த்துக் கொண்டால், இது பெரிதும் சாத்தியமே. அதாவது நம் அரசியல் நிலையைக் கருத்தில் கொண்டு இப்பிரச்சினையில் அணி சேர்வது கூடாது.

ராம ஜென்மபூமி - பாபர் மசூதி போன்ற மத, வரலாற்றுப் பிரச்சினைளை அரசியலால் மட்டும் தீர்க்க முடியாது. இதை அரசியல் மூலமே தீர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் இந்நாட்டின் மேதைமையையும், பண்பாட்டினையும் திரட்டக் கூடிய மிக உன்னதமான அரசியல் வித்தகர்களால் மட்டுமே முடியும். இங்கே கூடியிருக்கும் தலைவர்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்ளுவதென்னவென்றால், குறுகிய கண்ணோட்டம் நம்மை வெல்வதற்கு நாம் இடம் அளிக்காமல் நாட்டின் நலனை முன்னிறுத்தி, சிறந்த அரசியல் வித்தகர்களாக நாம் இப்பிரச்சினையை அணுக வேண்டும்.

ஒவ்வொரு மதமும், ஒவ்வொரு கலாச்சாரமும் அதன் வழியிலேயே சுதந்திரமாக வளர நாம் வழிவகுக்க வேண்டும். ஆனால் அவ்வளர்ச்சி அடுத்த மதத்தையோ கலாச்சாரத்தையோ அழிக்கக்கூடாது. மற்ற மதத்திற்கோ, கலாச்சாரத்திற்கோ ஆபத்தாக அமையக் கூடாது. உலகின் அனைத்துப் பெருஞ்சமயங்களும் உன்னத இலட்சியங்களான, பெருந்தன்மை, கருணை, ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் தன்மை - மற்றவர்களின் கொள்கைகளைச் சகித்துக் கொள்ளும் தன்மை, ஆகியவற்றையே போதிக்கின்றன. உலகின் மாபெரும் இரு மதங்களான இந்து மதமும், இஸ்லாமும் இவ்வுயர்ந்த மரபுகளின் வழித் தோன்றல்களாகச் செம்மாந்து நிற்பவை. வரலாற்றைச் சரியாக புரிந்து கொள்ளாமல் கோவில்கள், மசூதிகள் ஆகியவற்றின் இடங்களைக் குறித்து மக்கள் சண்டை போடுவதைத் தவிர்ப்பது நமது கடமையாகும்.

இந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலானது என்பது எனக்குத் தெரியும். நீதிமன்றங்கள் இப்பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பினை ஏற்றுள்ளன. ஆனால் சட்டங்களால் மட்டும் இது போன்ற பிரச்சினைளைத் தீர்க்க முடியும் என்ற தவறான எண்ணத்தில் நாம் இருந்துவிடக் கூடாது. நீதிமன்றங்களுக்குச் செல்வதின் மூலம் நாம் சற்றுக் கால அவகாசத்தைப் பெற்றுவிடலாம். நீதிமன்றங்களை எவ்வகையிலும் அவமதிக்கும் நோக்கம் எனக்கு இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். ஆனால் இலட்சக்கணக்கான மக்கள் இது குறித்து



**தமிழகத்தின் புதிய உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சராக திரு. ஜி.விஸ்வநாதன் அவர்கள் 1.11.'91 அன்று ஆளுநர் மாளிகையில் பதவி ஏற்றார்.**



**முன்னாள் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேருவின் பிறந்த நாளையொட்டி சென்னை கத்திப்பாராவிலுள்ள நேருவின் திருவுருவச் சிலைக்கு மேதகு ஆளுநர் திரு. பீஷ்மநாராயண்சிங், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்தார்கள் (14.11.'91).**

உணர்ச்சிக் கொந்தளிப்பில் உள்ளார்கள் என்பதும் உண்மையே. எனவே இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு நாம் எடுக்கும் எந்த முடிவும் மக்களின் இறுதி ஒப்புதலைப் பெறுவதை நாம் உறுதிப்படுத்தவேண்டும்.

ஒரு கோவிலை உருவாக்கும் எண்ணத்தோடு உத்திரப்பிரதேச அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இங்கு ஒரு கோவில் வேண்டுமென்று இந்நாட்டு மக்கள் விரும்புகிறார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. முஸ்லீம் சகோதரர்களின் மனம் புண்படாத வண்ணம் உத்திரப்பிரதேச அரசும், மத்திய அரசும், ஏப்படி நடந்து கொள்ளப்போகின்றன. என்பதே இப்போதைய கேள்வி. இச்சூழ்நிலையில், இரு மதத் தலைவர்களும் ஒரு சுமுகமான சூழ்நிலையில் கூடிப் பேசினால், அரசியல் ரீதியாகவோ, நீதிமன்றங்கள் மூலமாகவோ எடுக்கப்படும் முடிவுகளைவிடச் சிறந்த முடிவுகளை எடுக்க இயலும் எனும் கருத்தை நான் வரவேற்கிறேன்.

பெரும்பாலும் இந்துக்கள் வாழும் நாடாக இந்தியா இருப்பினும், ஆண்டாண்டுக் காலமாக அனைத்து மதங்களையும் மதித்து, அவைகளை வளர அனுமதித்து, மத உணர்வுகள் தனிப்பட்ட நட்பு உறவுகளை பாதிக்காதவண்ணம் விளங்கி வந்துள்ளது. நம் முஸ்லீம் சகோதர்கள் இத்தன்மையைப் பாராட்டி, உத்திரப்பிரதேச இந்துக்களின் விருப்பங்களுக்கு வழிகோலுவார்கள் என நம்புகிறேன். இந்த இடத்தில் ஒரு முஸ்லீம் புனிதத் தலம் உள்ளது எனும் உண்மையை நாம் மதிக்கிறோம். அதுபோல் முஸ்லீம் சகோதரர்களும், இதனருகில் ஒரு கோவில் இருக்கலாம் எனும் நிலையை ஏற்றுக்கொள்ளவேண்டும். இன்னும் சொல்லப்போனால், ஆலயமும் மசூதியும் அருகருகே ஆண்டுக்கணக்கில் இருந்து இன உணர்வுகளைத் தூண்டாத இடங்கள் இந்தியாவில் ஏற்கெனவே நூற்றுக்கணக்கில் உள்ளன. என்வேண்டுகோள் என்னவென்றால், பெரும்பான்மைக் கருத்து என்றோ, சிறுபான்மைக் கருத்து என்றோ, எந்த ஒரு கருத்தையும் ஏற்கவேண்டியது கட்டாயம் என்றோ, இதைக் கருதக் கூடாது என்பதாகும்.

இப்பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல், ஒரு முடிவை நாம் மேற்கொண்டால், அது அகில இந்திய அளவில் இந்து மூஸ்லீம்களிடையே உள்ள உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை என் உரையை நிறைவு செய்யும்முன் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

எங்கள் கட்சியைப் பொறுத்த மட்டில், சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்து, சுதந்திரமாகவும் உரியமுறையிலும் வழிபாடு செய்யப் பெரும்பான்மையினருக்கு உள்ள உரிமைகளை ஒப்புக்கொண்டு, மக்களின் ஆவல்களைப் பூர்த்தி செய்யும் எந்த முடிவுகளையும் ஆதரிக்கும். ராம ஜென்மபூமியா? பாபர் மசூதியா? என்பதல்ல விவாதம்! ராம ஜென்மபூமியும் பாபர் மசூதியும் என்பதுதான் விவாதம். அப்படித்தான் அது இருக்கவேண்டும்.

**(புதுடெல்லியில் 2.11.1991 அன்று நடந்த தேசிய ஒருமைப் பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை)**

# அறியாமை இருள் அகற்றிட

# அரிய பணிகள்



இந்திய நாட்டில் 40 கோடிக்கும் மேற்பட்டோர் எழுத்தறிவற்றவராக உள்ளனர். - அறியாமை இருளில் சிக்கிக் கிடக்கும் நமது நாட்டில் அந்த இருளை அகற்றப் புதிய தீர்வு தேவைப்பட்டது. 1988-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் தேதியன்று தோன்றிய தேசிய எழுத்தறிவு முனையம் (National Literacy Mission) ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

தேசிய எழுத்தறிவு முனையம் - எழுத்தறிவு தருவது ஒரு துறையின் (Department) பணி என்றிருந்த நிலையைச் சமுகத்தின் (Community) பணியாக மாற்றத் தீர்மானித்தது. தன்னார்வத்துடன் (Voluntary) புறப்படும் மக்கள் இயக்கங்கள் மூலமே கல்லாமை இருளைத் துரத்த முடியும் என்ற முடிவுக்கு வந்தது. 'மக்கள் மேன்மையானவர்கள்' கூட்டாகச் சேர்ந்து செய்யும் ஆக்கப் பணியில் கட்டாயம் தங்களை இணைத்துக் கொள்வார்கள்' என்ற நம்பிக்கை வழங்கியது.

தேசிய எழுத்தறிவு முனையத்தின் வழிகாட்டுதலின்படி இந்தியாவில் எர்ணாகுளம், பாண்டிச்சேரி, பர்த்வான் போன்ற பல இடங்களில் சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முயற்சிகளில் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். உற்சாகத்துடன் ஒத்துழைத்தனர். இப்போது இந்தியாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் எழுத்தறிவுப் பணி மக்கள் இயக்கமாக நடைபெற்று வருகிறது.

கேரளாவில் அது 'அட்சர கேரளம்' என்ற பெயரில் நடைபெற்றது. அரியானாவில் 'நான்காவது பானிபட்' யுத்தம்' என்ற பெயரில் நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் அது 'அறிவொளி இயக்கம்' என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ளது.

காமராசர் மாவட்டத்தில், எழுதப் படிக்கத் தெரியாத அனைத்து மக்களுக்கும் எழுத்தறிவு கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மத்திய-மாநில அரசுகளின் நிதி உதவிகளுடன் அறிவொளி இயக்கம் என்ற தலைப்பில் ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்த மாநிலத்திலேயே காமராசர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு தற்பொழுது இத்திட்டம் நடைபெற்று வருகிறது.

இதற்காக மத்திய-மாநில அரசு இம்மாவட்டத்திற்கு மட்டும் ரூ.1.50 கோடி நிதி உதவி அளித்துள்ளது. இம்மாவட்டத்தில் 6.7.91 அன்று கணக்கெடுப்புப் பணி நடைபெற்று எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் மொத்தம் 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் உள்ளதாக ஒருநாள் கணக்கெடுப்பில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 14 ஆயிரம் தொண்டர்கள் கண்டறியப்பட்டனர். இவர்கள் அறிவொளி தொண்டர்கள் அறிவொளி ஆசிரியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

தற்போது ஆண்களைவிட, பெண்கள் அதிக அளவில் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருக்கின்ற காரணத்தால் பெண்கள் அதிக அளவில் கலந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு கடந்த ஜூலை 15-இல் பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் விழாவின்போது மகளிர் மாநாடு விருதுநகரில் நடைபெற்றது. கலைப்பயணத் தொடக்கவிழா செப்டம்பர் 8-ஆம் தேதி அன்று அருப்புக்கோட்டையில் நடைபெற்றது. 14 கலைக்குழுவினர்கள் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று தினமும் 4 நிகழ்ச்சிகள் வீதம் 1,064 கலை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். கலைப்பயணத்தின்போது ஆயிரக் கணக்கானோர் ஆர்வத்துடன் முன் வந்து தங்களை எழுத்தறிவுத் தொண்டராகப் பதிவு செய்துள்ளனர். கலைப்பயண நிறைவு விழா 27-ஆம் தேதி சிவகாசியில் நடைபெற்றது. திரைப்பட இயக்குநர் திரு. பாரதிராஜா அவர்கள் இவ் விழாவில் கலந்துகொண்டு கலைப் பயணக் கலைஞர்களைப் பாராட்டிப் பரிசுகளை வழங்கி அனைவரையும் சிறப்பித்துப் பேசினார்.

பிரச்சாரக்கட்டம் பூர்த்தி அடைந்த பிறகு, அறிவொளித் திட்டத்தின் அடுத்தகட்டமான, கற்பிக்கும் பணி மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களால் அக்டோபர் 7-ஆம் தேதி விருதுநகரில் துவக்கப்பட்டது. விழாவிற்கு மாவட்ட அறிவொளி இயக்கத் தலைவரும்,



**மக்கள் ஒருமைப்பாட்டின் மறு உருவமாக விளங்குவது கூட்டுறவு. மக்களாட்சி மலர்ச்சியடையும்போது கூட்டுறவு உணர்வும் மலர்ச்சி அடைகிறது.**

மாவட்ட ஆட்சியருமான திரு கு.ஞானதேசிகன், இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களால் அக்டோபர் 7-ஆம் தேதி இப்பணி விருதுநகரில் துவக்கப்பட்டது விழாவிற்கு மாவட்ட அறிவொளி இயக்கத் தலைவரும், மாவட்ட ஆட்சியருமான திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் இராம. வீரப்பன் குத்துவிளக்கேற்றி எழுத்தறிவுப் பணியைத் தொடங்கி வைத்தார். அறிவொளி இயக்கத் தொண்டர்களுக்கு வாழ்த்துக்கூறி கற்போருக்குக் கற்பிப்பதற்கான கருவிகளை வழங்கி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

இங்கு பேசிய அறிவொளி இயக்கத் தலைவரும் மற்றவர்களும் - இம்மாவட்டத்தில் 15 முதல் 35 வயது வரை எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 2 இலட்சத்து 40 ஆயிரம் உள்ளனர் என்றும், அவர்களுக்குக் கற்றுத்தர 24 ஆயிரம் தொண்டர்கள் உள்ளனர் என்றும் தெரிவித்தனர். இந்தத் தொண்டர்கள் எந்தவித எதிர்ப்பார்ப்புமின்றி இந்த நாட்டுக்குத் தொண்டு செய்ய முன் வந்துள்ளனர். இந்தியத் துணைக் கண்டத்திலேயே எழுத்தறிவு பெற்றவர்கள் அதிகம் உள்ளவர்கள் என்ற அளவில் கேரளத்திற்கு அடுத்தபடியாகத் தமிழகம் 2-வது இடத்தைப் பெற்றுள்ளது. 63 சதவிகிதம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் உள்ள தமிழகத்தில் புரட்சித்தலைவர் காலத்தில் தொடங்கப்பட்ட முறைசாராக் கல்விப் பயிற்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதற்கான மத்திய அரசின் பரிசினைத் தமிழகம் தொடர்ந்து பெற்று வந்துள்ளது. ஒருவர் 10 பேருக்கு எழுத்தறிவிக்க வேண்டும் என்று இங்கு கூறினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் 50 பேருக்கு எழுத்தறிவு தர முன் வரவேண்டும். அடுத்த ஆண்டு ஏப்ரல் 13-ந் தேதியுடன் முடிவடைந்த இம்மாவட்டம் முழுமையான எழுத்தறிவு பெற்றுவிட்டது என்று உலகுக்கு அறிவிக்கின்ற நாளில் அதிகப்பேருக்கு எழுத்தறிவு கற்றுத்தந்த சட்டமன்ற உறுப்பினருக்குத் தமிழக முதல்வர் பெயரில் பரிசு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

'இந்த மாவட்டத்தில் ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் இருப்பார்கள். கைநிறையச் சம்பளம் பெறும் ஆசிரியர்கள் வருவாய் தரக்கூடிய டியூசனுக்கு ஒதுக்கும் நேரத்தில் அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் இந்த அறிவொளி இயக்கத்திற்கு ஒதுக்குங்கள். என்னிடம் நிறைய கோரிக்கைகள் தருகின்ற ஆசிரியர்களிடம் நான் கேட்கும் கோரிக்கை இது ஒன்றுதான்.

2 இலட்சத்து 40 ஆயிரம் மக்களின் இதயங்களில் இடம்பெறப் போகின்ற 24 ஆயிரம் பேர்களுடன் ஆயிரம் ஆசிரியர்களாவது இடம் பெற மாட்டார்களா? என்ற எண்ணத்தால்தான் இதைக் கூறினேன். அரசு அலுவலர்களும் இந்த இயக்கத்தில் ஈடுபடவேண்டும். இந்த அரசியல் சார்பற்ற - மனமாச்சரியங்கள் இல்லாத இயக்கத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டுகிறேன்'.

சிவகாசியில் - நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கனககோவிந்த ராஜுலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பாலகங்காதரன், திரு. சஞ்சய் ராமசாமி, திருமதி. மணிமேகலை, திரு. டி. சாத்தையா, அரசு தேர்வாணையரும், முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவருமான திரு. டி.எஸ். ஸ்ரீதர், இ.ஆ.ப., பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. ரங்கநாதன், முதியோர் கல்வி இயக்குநர் திரு. தெய்வமணி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். முன்னதாக அறிவொளி இயக்கத் திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ச. மாடசாமி வரவேற்றார். திட்ட அலுவலர் பேராசிரியை பி.பி. திலகம் நன்றி கூறினார்.

முதலில் பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்ற ஊர்வலம் நடைபெற்றது. அறிவொளி இயக்கத்தின் அவசியம் குறித்தும், எழுத்தறிவுத் தேவை குறித்தும் வாசகங்கள் அடங்கிய அட்டைகள் எடுத்துச் செல்லப்பட்டன. இறுதியில் அறிவொளி கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

**ஆர். பரதன்**

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**

**காமராசர் மாவட்டம்**

## பல்லவன் பேருந்துகளில் முதியோருக்காக இடம் ஒதுக்கப்படும்!

**மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெரும் முயற்சியின் காரணமாக, உலக வங்கி, பல்லவன் போக்குவரத்துக் கழகம் 550 பேருந்துகள் வரை வாங்குவதற்காக ஒப்பந்தப் புள்ளிகளை அனைத்து நாடுகளிலும் கேட்பதற்கு அனுமதி அளித்து உள்ளது. இதுபற்றி உடனடியாக, பல்லவன் போக்குவரத்துக் கழகம் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. 1992 மார்ச் மாதம் முதல் புதிய பேருந்துகள் இந்தத் திட்டத்தின் கீழ் பல்லவனுக்குக் கிடைக்கும்.**

**மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் படி, பல்லவன் பேருந்துகளில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர், அமர்ந்து செல்வதற்காக இரண்டு இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்படும். இது, இம்மாதம் 16-ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும்.**

**ஏற்கெனவே பல்லவன் பேருந்துகளில் மகளிருக்காக 16 இருக்கைகளும், இரண்டு இருக்கைகள் உடல் ஊனமுற்றோருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. நடத்துநர் இருக்கைக்கு எதிராக உள்ள இரண்டு இருக்கைகள் முதியோர்களுக்காக ஒதுக்கப்படும். அந்த இருக்கைகளுக்கு மேல், ''முதியோர்களுக்காக'' என்று எழுதப்படும். முதியோர்கள் வேறு இருக்கைகள் இல்லாமல் நிற்க வேண்டி நேர்ந்தால், அவர்களுக்கு இந்த இரண்டு இடங்களும் கட்டாயமாக ஒதுக்கித் தரப்படும்.**



# கூட்டுறவால் கோடி நன்மை!



வானம் நெருப்பு நிலம் நீர் வளியாம்-ஐம்
பூதத்தின் கூட்டுறவே-உலகாம்!
மானிடம் மன்னுயிர் யாவுமே-ஐம்பூதக்
கூட்டுற வென்னும் வகை அறிவோம்!

அருமைக் குழந்தையாய் நாமெல்லாம்-தோன்றிடல்
அன்னை தந்தையன்பின் கூட்டுறவே!
அரும்புகழ் சேர்க்கும் பதினாறு-பேறுகள்
கருவுள் திருஆறின் கூட்டுறவே!

உயிர்மெய் ஒருமித்த கூட்டுறவே-வாழும்
உயிர்கள் எனும்மெய்ப் பொருளறிவோம்!
உயிர்மெய் எழுத்தசை சீர்தளை-அடிதொடை
கவிஞனின் கூட்டுறவே பாடலென்பாம்!

அன்பும் அறனும்சேர் கூட்டுறவே-மாந்தர்
இல்வாழ்க்கைப் பண்பும் பயனும் என்பார்!
இன்பத்தை நல்கும் அறம்பொருள்-இரண்டின்
கூட்டுறவே நிறை வாழ்க்கை என்பார்!

ஒன்று பலவாய்ப் பெருகிட-ஒன்றுடன்
ஒன்றொன்றாய்க் கூட்டல் கணக்கியலாம்
நன்றும் பயனும் விளைத்திடும்-நன்னோக்கில்
நாம் ஒன்று கூடலே கூட்டுறவாம்!

நாட்டிலும் வீட்டிலும் மக்கள் நல்-வாழ்வினில்
நலவளம் சேர்ப்பது கூட்டுறவே!
கூட்டிக் கழித்துப் பெருக்கி-வகுத்திடில்
தரும் கோடி நன்மைகள் கூட்டுறவே!

நாட்டிலும் வீட்டிலும் நாளுக்கு-நாள்பல
நன்மை புரிவது கூட்டுறவே!
நாட்டின் உயர்வுக்கும் வீட்டின்-உயர்வுக்கும்
நல்லுற வாவதும் கூட்டுறவே!



## கவிஞர் முருகுவண்ணன்



# அன்னியச் செலாவணி ஈட்டும் மணப்பாடு பெண் தொழிலாளர் பனை ஓலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், குலசேகரப்பட்டினம், மணப்பாடு ஆகிய இரண்டு கிராமங்களில் பனை ஓலையினால் கைவினைப் பொருட்கள் செய்யும் பெண் தொழிலாளர்களின் நலனுக்காக 26.9.57-இல் மணப்பாடு பெண் தொழிலாளர் பனை ஓலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு 1.10.57-இல் உற்பத்தி தொடங்கி தனது பணியை இச் சங்கம் செய்து வருகின்றது.

இச்சங்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன், இவ்வூரில் உள்ள பெண்கள் பனை ஓலையினால் பிளாப் பெட்டி மற்றும் அடுக்குத் தையற் பெட்டிகள் செய்து வந்தனர். அரசு, இவ்வூரில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக, உதவித் தொகையுடன் கூடிய இரண்டு பயிற்சி நிலையங்களை நடத்தி 50 பெண்களுக்குப் பனை ஓலையினால் அழகிய தட்டுகள் மற்றும் உடைகள் செய்வதற்குப் பயிற்சி அளித்தனர். பின்னர் அப் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இச் சங்கம் பதிவு செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் தமிழ்நாடு அரசு தொழில் வணிகத் துறையின்கீழ் இருந்த இச்சங்கம், 1.10.77 முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது.

தொடக்கக் காலத்தில் 94 உறுப்பினர்களையும், ரூ.517 செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தையும் கொண்டிருந்த இச்சங்கம், 31.3.91 அன்று, 768 உறுப்பினர்களுடன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.89,405 ஆக உயர்ந்துள்ளது. இதில் அரசின் பங்கு ரூ.2,500. 1974-க்குப்பின் அரசு கடன் எதுவும் இன்றி நிதி நிலையில் தன்னிறைவு பெற்று தனது சொந்த மூலதனத்திலேயே இச்சங்கம் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கத்தின் மூலம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலை வாய்ப்பு பெற்று வரும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 503 ஆகும்.

தொடக்கத்திலிருந்து 1971-72 வரை தனது உற்பத்திச்சரக்குகளைத் தனியார் வியாபாரிகளிடம் விற்பனை செய்து வந்தது. இதனால் சங்கத்திற்குச் சொற்ப லாபமே கிடைத்து வந்தது. 1972-73-லிருந்து சங்கமானது தனது தயாரிப்புகளை நேரடியாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து ஆண்டுதோறும் ரூ.1 இலட்சம் முதல் ரூ.2 இலட்சம் வரை தாய் நாட்டிற்கு மிகவும் தேவையான அந்நிய செலாவணியை ஈட்டி வரும் சங்கமாகச் செயல்பட்டு வருகின்றது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்குழு மற்றும் கைவினைப் பொருட்கள் மேம்பாட்டு ஆணையாளர் அலுவலகம் இவர்களின் முழு மானிய உதவியின் கீழ் 6 மாதம் மற்றும் ஓராண்டுக் காலப் பனை ஓலைப் பயிற்சிகள், சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அளித்து தரம் உள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது.

ஆண்டிற்கு ரூ.300-க்குக் குறையாமல் பொருட்கள் செய்து சங்கத்திற்கு அளிக்கும் உறுப்பினர்களுக்கு சங்கத்தின் ஏற்றுமதி ஊக்குவிப்பு மானியத்திலிருந்து பாத்திரம் ஒன்றும் அவர்களின் குழந்தைகளுக்கு பிளஸ் 2 வரை புத்தகங்களும்இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. உறுப்பினர்களுக்கு அவர்கள் செய்து கொடுத்த பொருட்களின் மதிப்பில் 25 சதவிகிதம் ஊக்குவிப்புத் தொகையும் 20 சதவிகிதம் போனசும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வளவு சிறப்புடன் செயல் புரியும் இச்சங்கம், 1981-82-லிருந்து மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறந்த கூட்டுறவுச் சங்கமாக தேர்வு செய்யப்பட்டுத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கேடயம் வழங்கப்பட்டு வருகின்றது.



## 38-வது இந்தியக் கூட்டுறவு வார விழா

**38-வது இந்தியக் கூட்டுறவு வார விழா நவம்பர்த் திங்கள் 14 முதல் 20 வரை நடைபெறும். பின்வரும் தலைப்புகளில் ஒவ்வொரு நாளும் விழா நடைபெறும்.**

**14.11.91: கூட்டுறவு மக்களாட்சி முறை**

**15.11.91: கூட்டுறவு நிதியும் வறுமை ஒழிப்பும்**

**16.11.91: கூட்டுறவும் சுற்றுச் சூழலும்.**

**17.11.91: கூட்டுறவு விற்பனையும் நுகர்வோரும்.**

**18.11.91: கூட்டுறவு முறையில் பதனிடும் அமைப்புகள்**

**19.11.91: கூட்டுறவில் மகளிர் மற்றும் இளைஞர்.**

**20.11.91: நகரக் கூட்டுறவுகளும் வீட்டுவசதியும்**

# மகளிர் நலம்

**திருமதி தங்கம் சங்கரநாராயணன் இ.ஆ.ப.,**
**இயக்குநர், சமூக நலத்துறை.**

**த**ங்கள் குடும்பத்திற்குக் கூடுதல் வருமானம் கிடைக்கப்பெறும் பொருட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மகளிருக்கு வேலைவாய்ப்பு நல்க வேண்டி 1987-88, 1988-89 மற்றும் 1990-91-ஆம் ஆண்டு களில் பல மகளிர் மேம்பாட்டுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டன. தற்பொழுது இம் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் அனைத்தும், அரசுக்கும் அரசுத் துறையைச் சார்ந்த நிறுவனங்களுக் கும் வினியோகம் செய்யப்படுவதால் இத்திட்டங்கள் அனைத்தும் அரசு அமல்படுத்தும் திட்டங்களாகவே இத்துறை மூலம் செயல்பட்டு வரு கின்றன.

**தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

இத்துறையில் 1987-88-ஆம் ஆண்டில் 13 தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இருந்தன. பிறகு அதே ஆண்டில் 16 புதிய தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. அத்துடன் 43 மகளிர் தொழிற் கூட்டுறவுத் தையற் சங்கங்கள், தொழில் வணிகத் துறையிடமிருந்து இத்துறைக்கு மாற்றப்பட்டன. 1989-90-இல் மேலும் 3 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. தற்சமயம் மொத்தத் தில் 74 மகளிர் தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையின் கீழ் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன.

**காலணி தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையில் பயிலும் பள்ளி மாணவ மாணவி யருக்கு அரசு இலவசக் காலணிகள் வழங்கும் பொருட்டு அக்காலணி களைத் தயாரிப்பதற்காகச் சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 39 மகளிர் காலணிக் கூட்டுறவுச் சங்கங்கள் 1987-88-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. இரண்டாயிரம் ஆதிதிராவிடர் மகளிர்க்கு இச்சங்கம் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. காலணிகளைத் தயாரிப் பதற்குச் சங்க உறுப்பினர் அனை வருக்கும் ஒரு மாதக் காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக் காலத் தில் மகளிர் ஒவ்வொருவருக்கும் ரூ.200 உதவித் தொகையாக வழங் கப்பட்டுள்ளது. காலணிகளைத் தயாரிப்பதற்காக ரூ.250 மதிப் புள்ள கருவிகள் மற்றும் உபகர ணங்கள் ஒவ்வொரு மகளிர்க்கும் இலவசமாக அரசால் வழங்கப் பட்டுள்ளன. இம்மகளிர் காலணி கூட்டுறவுச் சங்கங்கள் 1987-88 மற்றும் 1988- 89-ஆம் ஆண்டு களில் இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 11.64 இலட்சம் இணை காலணி களைத் தயாரித்து கல்வித் துறைக்கு வழங்கியுள்ளன. மகளிர்க்குக் கூலி யாகவும் காலணி கூட்டுறவுச் சங் கங்களுக்கு சேவைக் கட்டணமாகவும் ரூ.40 இலட்சம் 1987-88- ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு உள்ளது. அரசுக்குத் தேவையான காலணிகள் தயாரிப்பதோடு மட்டுமின்றிப் பிற காலணிகளைத் தயார் செய்வதற்கும் மகளிர் காலணி கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குச் செயல் விளக்கம் அளிக்கப்படுகிறது. பள்ளி மாணவ மாணவியருக்குச் சீருடை வழங்கு வது தவிரகிராமப்புறத்தில் உள்ள ஏழை மகளிருக்கு 1988-89-ஆம் ஆண்டில் இத்துறையால் ரூ.3.27 இலட்சம் இணை காலணிகள் தயாரிக்கப்பட்டன. 1988-89-ஆம் ஆண்டில் ரூ.11.45 இலட்சம் கூலி யாகப் பெண் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் முதல் கட்டத்தில் 3 இலட்சம் காலணிகள் தயாரிக்கப் பட்டன. அதற்காக ரூ.10.50 இலட்சம் கூலியாகவும் சேவைக் கட்டணமாகவும் வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டத்தில் 42,005 காலணிகள் தயாரிக்கப்பட்டு ரூ.1,47,017.50 கூலியாகவும் சேவைக் கட்டணமாகவும் வழங்கப் பட்டுள்ளது. 1990- 91-ஆம் ஆண் டிற்கு இத்துறை 6.00 இலட்சம் காலணிகள் தயாரித்து வழங்க வேண்டும். அதற்காக அரசு கூலிக் காகவும் சேவைக் கட்டணத்திற்காக வும் ரூ.24 இலட்சம் வழங்கியுள்ளது.

**சமூக நலத்துறையில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மகளிருக்கு - குறிப் பாக விதவைகள், கண வரால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றோர் மற்றும் ஊன முற்ற மகளிருக்குத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.**

**இலவசச் சீருடை தைக் கும் பணியின் மூலம் 20,000 மகளிருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. மூன்று கோடியே எண்பத்தேழு இலட்சம் ரூபாய் தையற் கூலி யாக வழங்கப்படுகிறது.**

**1990-91-ஆம் ஆண்டு 6 இலட்சம் காலணிகள் தயாரிக்கப்பட்டன. அதற் காகக் கூலியாகவும் சேவைக் கட்டணத்திற்காகவும் அரசு ரூ.24 இலட்சம் வழங்கி யுள்ளது.**

பள்ளி செல்லும் பிள்ளை களுக்கு இலவசக் காலணி வழங்கும் திட்டம் 1991-92-ஆம் ஆண்டிலும் தொடர்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்கு இத் துறை 3.00 இலட்சம் காலணிகள்

## தமிழகத்தில் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்

மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்கள் இயக்கம் கூட்டுறவு. இதில் இன, மொழி, சமய வேறுபாடின்றி அனைவரும் சேர்ந்து பயன் பெறலாம்.

வாழ்க்கையில் பெரும்பங்கு வகிக்கும் மகளிருடைய முன்னேற்றத்திற்கும் கூட்டுறவு நிறுவனங்கள் கைகொடுத்து உதவுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களில் 30 விழுக்காடு மகளிர் உறுப்பினராகச் சேரவேண்டுமென்பது அரசின் குறிக்கோள். மகளிர் மேம்பாட்டிற்காகவும் சுயவேலைவாய்ப்புப் பெறவும், ஆதரவற்ற மகளிருக்கு வாழ்வு தரவும் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உதவுகின்றன. தமிழகத்தில் மொத்தம் 74 மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், சமூகநலத் துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறும் பள்ளி மாணவ மாணவியர் மற்றும் பிற்பட்டோர் நல இயக்ககக் கட்டுப்பாட்டின்கீழ் பயிலும் மாணவ மாணவியர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக் கட்டுப்பாட்டின்கீழ் பயிலும் மாணவ மாணவியர் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைகளை இந்த 74 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தயாரித்து வழங்குகின்றன.

கடந்த ஆண்டில் (1990-91) இச்சங்கங்கள் மூலமும் சில தொண்டு நிறுவனங்கள் மூலமும் சுமார் 64 இலட்சம் சீருடைகள் தயாரிக்கப்பட்டுப் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. சீருடை தைக்கும் பணியின் மூலம், 20 ஆயிரம் மகளிர் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். சுமார் ரூ.3.87 கோடி அளவிற்குத் தையல் கூலி வழங்கப்பட்டது. இதனால் ஒவ்வொரு மகளிர் உறுப்பினரும் ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு ரூ.400 முதல் ரூ.500 வரை குடும்பத்திற்குத் தேவையான கூடுதல் வருமானம் பெறமுடிகிறது. மேலும், காவல்துறை மகளிர் தங்கள் குடும்பத்திற்குத் தேவையான வருமானம் பெறுவதற்கு வசதியாக அவர்களுக்கென்றே தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

தயாரிக்கவேண்டும்.

### மகளிர் எழுதுபொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

1979 முதல் 1981 வரையிலான ஆண்டுகளில் 15 மகளிர் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இவற்றில் 2 சங்கங்கள் சரிவர வேலை செய்யாததால் அவைகள் கலைக்கப்பட்டன. 1987-88 மற்றும் 1988-89-ஆம் ஆண்டுகளில் மகளிர் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் வியாபாரத்தை மேம்பாடு செய்யும் பொருட்டு 7 சங்கங்களுக்கு அச்சு இயந்திரங்களும், 13 சங்கங்களுக்கு இரு கோடிடும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. 12 சங்கங்களுக்குக் காகித உறை தயாரிக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கும் ஆணைகள் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டன. ஏறக்குறைய 700 மகளிர் எழுது பொருள் கூட்டுறவுச்சங்கங்களில் உறுப்பினராக உள்ளனர்.

### மகளிர் கயிறு பொருட்கள் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம்

1981-ஆம் ஆண்டில் கயிறு மற்றும் கயிறு சம்பந்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இத்துறையின் கீழ், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நல்லூரில் தொடங்கப்பட்டது. இச்சங்கம் உற்பத்தி நிலையமாகவும், மகளிருக்குப் பயிற்சி அளிக்கும் நிலையமாகவும், கயிறு தயாரிப்பதில் பயிற்சி அளித்து வருகிறது. இது தவிர 75 மகளிர்க்கு முறையாக வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

### சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம்

ஏற்கெனவே இத்துறையின் கீழ் இயங்கும் இரண்டு மகளிர் சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்களோடு 19 சாக்குக் கட்டி தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 1988-89-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. இம்மகளிர் சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தயாரிக்கும் சாக்குக் கட்டிகள் அனைத்தையும் கல்வித் துறையினர் எடுத்துக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. 20 கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. சுமார் 1,150 மகளிர்க்கு இக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

### இணை உணவு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம்

1988-89-ஆம் ஆண்டில் 22 மகளிர் இணை உணவு தயாரிக்கும் மகளிர் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. சுமார் 1,650 மகளிர்க்கு ஒரு வாரக் காலம் இணை உணவு தயாரிப்பதில் பயிற்சி அளிக்கப்பட்டது. உதவித் தொகையாக ரூ.50 இம்மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### திரவச் சோப்புத் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்

சென்னையை அடுத்த நாராயணபுரத்தில் திரவச் சோப்புத் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. இக்கூட்டுறவுச் சங்கம் தமிழ்நாடு சத்துணவு மையங்களிலுள்ள பாத்திரங்களைச் சுத்தம் செய்வதற்குத் தேவையான திரவ சோப்பு மற்றும் சோப்புத் தூள்களை விநியோகம் செய்து வருகிறது.

இவற்றின் மூலம் இச்சங்கம் சுமார் 27 மகளிருக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்துவருகிறது.

சமூக நலத்துறையில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் வாழும் மகளிருக்கு-குறிப்பாக விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றோர் மற்றும் ஊனமுற்ற மகளிருக்குத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.




பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் அதிகப் பரப்பினை வனப்பரப்பின்கீழ் கொண்டு வர, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**சிடா உதவி பெறும் தமிழ்நாடு சமூகக்காடுகள் திட்டம்**

மாநிலத்தில் சமூகக்காடுகளை மிக் அதிகப்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்து சிடா உதவியுடன் 1981-இல் சமூகக்காடுகள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பெரிய அளவில் காடுகள் வளர்ப்பது இதனால் கிராமப்புறங்களில் விறகு தடைபடாமல் கிடைக்கவும், மூங்கில் சிறுமரம், தீவனம், புல், பழம் எண்ணெய் வித்துக்கள் மற்றும் காடுபடு சிறுபொருள் ஆகியவை கிராமத்து மக்களுக்கு வேண்டிய வரை கிடைக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது.

கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டும், அன்றாடத் தேவைக்காக விறகுகள் சிறுமரங்கள் மற்றும் கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள் முதலியன கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டும், கண்மாய் உள்வாய்த் தோட்டங்கள் பெரிய அளவில் எழுப்பப்படுகின்றன. இத் தோட்டங்கள் எழுப்பப்படுவதால் விவசாயப் பணியாளர்கட்குத் தொடர்ச்சியாக வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெற்று, தங்களது பொருளாதார நிலையினை உயர்த்திக் கொள்ள உதவுகின்றது.

இதுவரை இத்திட்டத்தின் கீழ், 1981-82 முதல் 1990-91 வரை சுமார் 12,500 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இக்கண்மாய்களில் எழுப்பப்படும் மரங்கள் பத்தாண்டுக்கு ஒரு முறை சுழற்சிமுறையில் வெட்டப்பட்டு, கிடைக்கும் வருவாயில் 50 சதவிகிதம் பங்குத் தொகையாகச் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. 1990-91 முதல் பங்குத் தொகை 60 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 1989-90 முடிய ஊராட்சிகளுக்குவழங்கப்பட்ட

**"தமிழ்நாட்டில், சமூகக் காடுகளை மிகவும் அதிகப் படுத்த வேண்டிய தேவையை உணர்ந்து, சிடா உதவியுடன் 1981-இல் சமூகக்காடுகள் திட்டம் தொடங்கப்பட்டது.**

**பெரிய அளவில் காடுகள் வளர்ப்பது, இதனால் கிராமப்புறங்களில் விறகு தடைபடாமல் கிடைக்கவும், மூங்கில் சிறுமரம், தீவனம், புல், பழம், எண்ணெய் வித்துக்கள், காடுபடு சிறு பொருள் ஆகியவை கிராமத்து மக்களுக்கு வேண்டிய வரை கிடைக்கவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது."**

பங்குத்தொகை 17.482 இலட்சம் ஆகும். 1990-91-இல் கிடைத்த வருவாயில் ஊராட்சிப் பங்கு மட்டும் சுமார் ரூ.33 இலட்சமாகும். 1991-92-இல் இவ்வாறு கிடைக்கும் ஊராட்சி வருமானம் சுமார் ரூ.60 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் பங்குத் தொகையினைக் கொண்டு சம்பந்தப்பட்ட ஊராட்சிகளில் மேம்பாட்டுத் திட்டங்களுக்குச் செலவு செய்ய வழிவகை செய்கிறது. நடப்பு ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் சுமார் 560 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் உற்பத்தி செய்யப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

**புறம்போக்கு நிலத் தோட்டங்கள்**

இதுவரையில் இம்மாவட்டத்தில் 300 எக்டேர் பரப்பளவில் புளியந் தோட்டங்கள் எழுப்பப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. ஊராட்சிகளின் வேண்டுகோளின்படி இவை ஏழு ஆண்டுகள் வரை வனத்துறையால் பராமரிக்கப்பட்டு, பின்பு சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்பட்ட உள்ளன. இதில் கிடைக்கும் வருமானம் ஊராட்சிகளுக்கே சேரும்.

**சாலை ஓரத் தோட்டங்கள்**

சாலையோரத்தில் இரு மருங்கிலும் நிழல்தரும் மரங்கள் நடவு செய்யப்படுவதால் சாலைப் பயணிகள் இனிய பயணத்தை மேற்கொள்ள வழிவகை செய்கின்றன. இப்பணியிலும் வேலைவாய்ப்புகள் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அவர்கள் வறுமைக் கோட்டிலிருந்து, விடுபடும் அளவிற்கு அளிக்கப்படுகின்றன. இதுவரையில் சமூக வனவியல் கோட்டம், சிவகங்கை மூலமாகச் சுமார் 450 கி.மீ. நீளத்தில் சாலையோரத் தோட்டங்கள் வெற்றிகரமாக எழுப்பப்பட்டுள்ளன.

**விவசாய நாற்றங்கால் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், வனத்துறையின் மூலம் எழுப்பப்படும் தோட்

டங்களுக்குத் தேவையான நாற்றுகளை சிறு விவசாயிகள் மூலம் உற்பத்தி செய்து அவற்றைத் தோட்டம் எழுப்பிடப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. விவசாயிகள் இந்த நாற்றுக்களை எழுப்புவதற்கு வேண்டிய எல்லாவிதமான உதவிகளும் செய்யப்படுகின்றன. நிலமற்ற ஏழை விவசாயிகளும் இந்தத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு இடம் கிடைக்கச் செய்வதில் உதவி செய்தல் அல்லது வனத்துறை நாற்றங்காலிலேயே அவர்களுக்கு ஓர் இடத்தை ஒதுக்கிக் கொடுத்து நாற்றங்கால் எழுப்பிட உதவி செய்யப்படுகின்றத. இதில் ஈடுபடும் விவசாயிகள் இதை ஓர் பகுதி நேரப் பணியாகச் செய்து அதில் லாபம் பெறுகின்றனர். நாற்றங்கால் எழுப்ப நிர்ணயிக்கப்பட்ட தொகை அவர்கள் பெயரிலேயே காசோலையாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரையில் (1988 முதல் 1990 வரை) ரூ.32 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் இதுவரை சுமார் ரூ.2.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**இடைப்படு காடுகள் திட்டம்**

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் காப்புக் காடுகள் மட்டுமல்லாமல், காப்புக் காடுகளை ஒட்டியுள்ள அரசுக்குச் சொந்தமான பல்வகைப்பட்ட நிலங்கள் மற்றும் தனியார் நிலங்களும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தைப் பொருத்தவரை உசிலமலை மற்றும் மாமலை என்ற இரண்டு காப்புக் காடுகள் தேர்வு செய்யப்பட்டு 1989 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுமார் 100 எக்டர் பரப்பில் தோட்டம் எழுப்பப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில், 150 எக்டேர் காப்புக்காடுகள் இரண்டு இடங்களிலும் தேர்வு செய்யப்பட்டு சுமார் ரூ.10 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிலத்தடி நீரை முன்னேற்றமடையச் செய்யும் வகையில் காப்புக்காடு மற்றும் அதன் அருகாமையில் உள்ள தனியார் நிலங்களில் மண் அரிமானத்தைத் தடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றியுள்ள கிராம மக்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்குமாறு திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. அருகிலுள்ள மக்களின் விறகுத் தேவை, சிறு மரங்களின் தேவை, பசுந்தழைத் தேவை மற்றும் கால்நடைகளுக்குத் தீவனத்தேவை போன்றவற்றைக் கணக்கில் கொண்டு அவற்றை முன்னேற்றும் முகமாகத் திட்டம் செயல்படுகின்றது. அருகிலுள்ள கிராம மக்களுக்கு இலவசமாகப் பழக் கன்றுகள் தீவனக்கன்றுகள் போன்றவை வழங்கப்படுகின்றன. நடப்பு 1991-92-ஆம் ஆண்டில் சிடா திட்டப் பணிகளுக்கு ரூ.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்**

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில், சிவகங்கை சமூக வனவியல் கோட்டத்தால் இத்திட்டம் 1988-89 முதல் செயல்படுத்தப்பட்டு வரப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் கண்மாய் உள்வாய்த் தோட்டம் சுமார் 600 எக்டேர் பரப்பிலும், புளியன் தோட்டம் சுமார் 200 எக்டேர் பரப்பிலும், சாலை ஓரத் தோட்டம் சுமார் 140 கிலோமீட்டர் நீளத்திலும் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. நடப்பு 1991-92-ஆம் ஆண்டில், ரூ.15.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன.

தேசீய வனக்கொள்கையின்படி, மொத்தப் புவியியல் பரப்பில் 33 சதவிகிதம் வனப்பரப்பின் கீழ் இருந்திடல் வேண்டும். ஆனால் இம் மாவட்டத்தில் மொத்த பரப்பான 4.04 இலட்சம் எக்டேரில் வனப் பரப்பு 18,136 எக்டேர் மட்டுமே. அதாவது 4.49 சதவிகிதம் மட்டுமே வனப்பரப்பில் உள்ளது. எனவே, அதிகப்படியான பரப்பினை வனப் பரப்பின் கீழ் கொண்டுவருவது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, சிவகங்கை சமூகவனவியல் கோட்டம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் அதிகப் பரப்பினை வனப்பரப்பின் கீழே கொண்டு வந்திட தனது சீரிய பணியினைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

## தேசிய ஒருமைப்பாட்டு விழாவில் தமிழகக் கலைஞர்களுக்கு முதல் பரிசு

தேசிய ஒருமைப்பாட்டினை விளக்கும் ''பூல்-வாலோங்கி-சாயர்'' எனும் மலர்ப் பேரணி விழா ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தில் டெல்லியில் நடத்தப்படுகிறது. இவ்விழாவின் தலைமைப் புரவலராக மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரும், புரவலராக டெல்லி துணை நிலை ஆளுநரும் இருந்து வருகிறார்கள்.

அனைத்து மாநிலங்களில் இருந்தும் அரசால் அனுப்பப்படும் நடனக் குழுக்கள் அவ்விழாவில் கலந்துகொண்டு தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் கிராமிய நிகழ்ச்சியினை நடத்தி இவ்விழாவைச் சிறப்பிக்கின்றன. இந்த ஆண்டு, செய்தி சுற்றுலாத்துறையின் மூலம் தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட கரகம், காவடி, நடனக் குழுக்கள் விழாவில் கலந்துகொண்டு, அகில இந்திய அளவிலான முதல் பரிசைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# தமிழ்நாடு கூட்டுறவுப் பட்டு உற்பத்தியாளர் இணையம்

காஞ்சிபுரத்தில் உள்ள, தமிழ்நாடு கூட்டுறவுப் பட்டு உற்பத்தியாளர் இணையம், தனது உறுப்பினர்களுக்குத் தேவையான கச்சாப்பட்டு மற்றும் முறுக்கேற்றிய பட்டு நூலினை கொள்முதல் செய்து விநியோகித்து வருகின்றது.

இணையத்திற்குக் காஞ்சிபுரம், ஆரணி, சேலம், கோயம்புத்தூர், மதுரை, கும்பகோணம் ஆகிய ஆறு இடங்களில் கிளைகள் உள்ளன.

இணையம் தனது உறுப்பினர்களுக்குத் தேவையான கச்சாப் பட்டினை, காஞ்சியிலுள்ள அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்தும் முறுக்கேற்றிய பட்டு நூலினை அசோசியேட் உறுப்பினர்கள், பட்டு விவசாயிகள், முறுக்கேற்றுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிலிருந்தும், கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகின்றது. பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்தான், இணையத்தில் அதிக அளவில் பட்டுநூலினை வாங்கி வியாபாரம் செய்து வருகின்றன.

காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி இணையத்திற்கு ரூ.100 இலட்சம் காசுக்கடன் அனுமதித்து, இணையம் அந்தக் காசுக்கடனில் அன்றாடம் வரவு செலவு செய்து வருகின்றது. இது தவிர, இணையத்திற்குத் தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம், புதுடில்லி 1989-இல் ரூ.47 இலட்சம், 14 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தக்கூடிய பங்கு மூலதனமாகத் தமிழக அரசு மூலம் வழங்கியுள்ளது. மேற்படி தொகை கிடைத்ததால் இணையத்தின் கொள்முதல் மற்றும் விற்பனை மிக அதிக அளவில் முன்னேறியது.

1989-90-ஆம் ஆண்டிற்கான அரசு குறியீட்டால் 1,65,000 கிலோ கொள்முதல் மற்றும் விற்பனைக்கு இணையம் கொள்முதல் மற்றும் விற்பனையில் முறையே 2,59,000 கிலோ மற்றும், 2,58,000 கிலோ அடைந்துள்ளது. இந்த மகத்தான முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, புதுடில்லியில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், 1990-91-ஆம் ஆண்டில் மீண்டும் ரூ.85 இலட்சம் 14 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தக்கூடிய பங்கு மூலதனமாகத் தமிழக அரசு மூலம் வழங்கியுள்ளது.

1990-91-ஆம் ஆண்டுக்கு இணையத்தின் கொள்முதல் மற்றும் விற்பனையாக இணைய வரலாற்றிலேயே இல்லாத அதிக அளவு கொள்முதல் மற்றும் விற்பனை செய்து ஒரு பெருமையை நிலை நாட்டியுள்ளது.

1990-91-ஆம் ஆண்டு கொள்முதல் மற்றும் விற்பனைக் குறியீடான 2,50,000 கிலோவுக்கு எதிராக, 3,84,000 கிலோ கொள்முதலும், 3,92,000 கிலோ விற்பனையும் செய்துள்ளது. மேலும் 1991-92-ஆம் ஆண்டிற்கு அரசு 3,30,000 கிலோ கொள்முதல் மற்றும் விற்பனைக் குறியீடாக நிர்ணயம் செய்துள்ளது. அதில் இணையம் 31.8.91 வரை கொள்முதலில் 1,68,614 கிலோவும், விற்பனையில் 1,68,455 கிலோவும் அடைந்தும் ரூ.19.41 இலட்சம் உத்தேச இலாபத்தில் இயங்கி வருகின்றது.

இணையம் 1985-86-இல் ரூ.107.21 இலட்சம் குவிந்த நட்டத்தில் இயங்கி வந்தது. பிறகு எடுத்த உயராத முயற்சி மற்றும் கடும் உழைப்பின் மூலம் மேற்படி குவிந்த நட்டமான ரூ.107.21 இலட்சத்தை 30.4.90-இல் சரிகட்டி, 1990-91-ஆம் ஆண்டில் இணையம் ரூ.14.67 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

1990-91-ஆம் ஆண்டில் இணையம் அதன் 'அ' வகுப்பு உறுப்பினர்களுக்காக விற்பனை ஊக்குவிப்பாக ரூ.24,09,775 வழங்கி, மேற்படி ஊக்குவிப்புத் தொகை அந்தந்த சங்கங்களின் விருப்பத்தின் பேரில் இணையத்தில் அந்தச் சங்கங்களின் பங்குத் தொகையாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டு தணிக்கையில் இணையம் ரூ.14.67 இலட்சம் இலாபம் ஈட்டியதால் இணையத்தின் பேரவைக் கூட்டத்தில் பங்குத் தொகைக்கான ஈவு 11 சதவிகிதம் எனக் கொடுக்கப் பேரவை அனுமதித்து, அரசின் ஈவுத் தொகையாக ரூ.5,62,728/-ஐ 12.8.91 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் 'அ' வகுப்பு உறுப்பினர்களுக்கான ஈவுத்தொகை ரூ.65,134.75-ம் வழங்கப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சித்துறை, காஞ்சிபுரத்தில் அண்ணா பட்டு பரிமாற்றகத்தை 9.1.91-இல் தொடங்கியது. மேற்படி பட்டு பரிமாற்றகத்தில் கச்சாப் பட்டு ஏலம் மூலம்

விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் பட்டு முறுக்காளர்களுக்கு அவர்கள் பட்டு நூலின் தரத்திற்கேற்ப விலை கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது. இந்தப் பட்டு மாற்றகத்திற்கு இணையம் தனது முழு ஒத்துழைப்பையும் நல்கி பட்டுப் பரிமாற்றகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக உள்ளது.

இணையம் உறுப்பினர்கள் கொண்டுவரும் நூலின் தரத்தினை சோதிக்க, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக உதவி நிதி உதவியில், ஒரு பட்டு பரிசோதனைக் கூடத்தை நிறுவியுள்ளது. உறுப்பினர்கள் கொண்டு வரும், பட்டு நூலின் தரம், முறுக்கு டினியர் ஆகியவைகளை இதன்மூலம் பரிசோதித்து, பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சர்வோதயச் சங்கங்கள், காதி மற்றும் கதர் வாரியம் ஆகியவற்றுக்காக நல்ல தரம் வாய்ந்த பட்டு நூலினை விநியோகித்து வருகின்றது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பட்டு வளர்ச்சித் துறையில் இயங்கும் அனைத்து அரசு பட்டு நூற்பாலைகளை இணையம் ஏற்று நடத்துவது எனக் கொள்கையளவில் முடிவு எடுக்கப்பட்டு, அதில் முதல் கட்டமாக இந்த ஆண்டில் (1991-92) தர்மபுரியிலுள்ள அஞ்செட்டி பட்டு நூற்பகம் மற்றும் கோவையிலுள்ள குறிச்சி பட்டு நூற்பகம் ஆகியவைகளை ஏற்று நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதியுதவியுடன் நடைபெறும் தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பட்டு நூற்பாளர்களுக்காக வழங்கப்படும் நிதியுதவியை இணையம் ஏற்று நடத்த வேண்டுமெனத் தமிழக அரசு ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி சேலம் பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்கள் இதுவரை இணையத்திற்கு ரூ.36,00,000 வழங்கியுள்ளார்கள். மேற்படி ரூ.36,00,000 இலட்சத்தில் இணையம் இதுவரை ரூ.22.61 இலட்சத்தை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் நிரந்தர இட்டு வைப்பாக வைத்துள்ளது. இதனால் 119 பட்டு நூற்பாளர்கள் பயனடைந்துள்ளார்கள். இந்த இணையம் தமிழக அரசின் அரவணைப்பாலும், பட்டு வளர்ச்சித் துறையின் முழு ஒத்துழைப்பாலும் நல்ல முன்னேற்றமடைந்து வருகின்றது.



# பாம்பு பிடிப்போருக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கம்!

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், மகாபலிப்புரம் அருகில், வடநெமிலி கிராமத்தில் இருளர் பாம்பு பிடிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கம் 1978-இல் பதிவு செய்யப்பட்டு, 1979-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கத்தில் 176 பாம்பு பிடிக்கும் இருளர் இனப் பிரிவைச் சார்ந்தவர்கள் உறுப்பினராக உள்ளனர்.

இச்சங்கம், வனத்துறையின் அனுமதி பெற்று, குறிப்பிட்ட வனப் பகுதியில் பல வகையான விஷப் பாம்புகளைப் பிடித்து வருகின்றது.

இந்தப் பாம்புகளின் வாயிலிருந்து விஷம் எடுக்கப்பட்டு, குளிர் பதனப் பெட்டிகளில் பாதுகாத்து, பின்னர், இவற்றை அரசு அனுமதியுடன் வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுகின்றது.

இருளர் பிடித்து வரும் பாம்புகளை, சங்கமே பெற்றுக் கொண்டு, அதற்கான கூலியை அவர்களுக்கு வழங்குகின்றது. நன்கு பயிற்சி பெற்ற தொழில் நுட்பப் பணியாளர்களைக் கொண்டு பாம்பின் வாயிலிருந்து விஷம் சேகரிக்கப்படுகிறது.

இதுதவிர, தானியக் கிடங்குகள், வயல்களில் உள்ள எலிகளைப் பிடிக்கவும், அழிக்கவும் இச்சங்கம் தனது உறுப்பினர்களை அனுப்பி வைக்கின்றது.

உறுப்பினர்களின் பங்குத் தொகைக்கு, ஈவுத்தொகை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. மேலும் தனது உறுப்பினர்களுக்குச் சிறப்பு ஊக்க ஊதியமும் போனஸ் தொகையும் வழங்கப்படுகின்றன. அங்கத்தினர்களின் குழந்தைகள் கல்வி பயிலப் பாடப் புத்தகங்கள், சீருடை ஆகியவற்றைச் சங்கமே வழங்குகிறது. பாம்பு கடித்தால், அந்த அங்கத்தினருக்கு மருத்துவச் செலவினை சங்கமே ஏற்றுக் கொள்கின்றது.

அங்கத்தினர்களுக்குப் பாம்பு பிடிக்கத் தேவையான உபகரணங்கள், காலணி மற்றும் தொப்பி ஆகியவற்றைச் சங்கம் இலவசமாக வழங்குகின்றது. பாம்பு பிடிக்கும் பணியில் ஈடுபடும் உறுப்பினர்கள் பாம்பு கடித்து இறக்க நேரிட்டால், அவரின் ஈமச்சடங்குச் செலவைச் சங்கமே ஏற்றுக் கொள்கிறது. அங்கத்தினர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டமும் செயல்படுத்தப்படுகின்றது.

இவ்வளவு சிறப்புடன் செயல்படும் இச்சங்கம், 30.11.90 வரை ரூ.2.31 இலட்சம் மதிப்பிற்கு விஷத்தைச் சேகரித்து, விற்றதில் ரூ.97,000 லாபம் ஈட்டியுள்ளது.

இச்சங்கம் எதிர்காலத்தில், பாம்பு மற்றும் முதலைப் பண்ணைகள் அமைக்கவும், விவசாயப் பண்ணை அமைக்கவும் திட்டமிட்டுள்ளது. ○

# தருமபுரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

**தொ**ழில் வளர்ச்சியில் தருமபுரி மாவட்டம் தமிழகத்தில் உள்ள பின் தங்கிய மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். இங்கு முக்கியத் தொழில் விவசாயம். எனவே, இம்மாவட்டம் சிறுதொழில் வளர்ச்சியில் சிறப்பாக நிலையினை எய்தத் தருமபுரி மாவட்டத்தொழில் மையம் பல தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதற்குத் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகம், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தேசிய மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவை உறுதுணை யாக உள்ளன.

இம்மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் புதிதாக சிறுதொழில் தொடங்க விரும்பும் நபர்களுக்குத் தற்காலிகத் தொழிற்பதிவுச் சான்றுகளும், உற்பத்தி ஆரம்பித்த தொழிற் கூடங்களுக்கு நிரந்தரச் சிறுதொழிற் பதிவுச்சான்றுகளும், கைவினை மற்றும் குடிசைத்தொழில்கள் மேற்கொள்வோர்க்குப் பதிவுச் சான்றுகளும், வழங்கப்படுகின்றன. தற்போது இம்மாவட்டத்தில் இதுவரை 4,000 பதிவு பெற்ற சிறுதொழிலகங்கள் இயங்கி வருகின்றன. படித்த வேலையில்லாத இளைஞர்களுக்குப் பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வங்கிகளின் மூலம் ரூ.35,000/- வரை கடனுதவி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தொழிலதிபர்கள் வங்கிகளுக்கும், இதர நிதி நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய சிறுதொகையான (Margin Money) ரூ.25,000/- வரை தொடக்கப்பணி கடனுதவியாக (Seed Money) அளிக்கப் படுகிறது.

மேலும், தற்போது அரசு அறிவித்துள்ளபடி புதிதாகத் தொழில் தொடங்க விரும்புவோர் நிரந்தரத் திட்ட முதலீடு ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில் தொழிற் சாலைகள் பகுதி (Industrial Area) என்று வரையரை செய்யப்பட்ட இடங்களில் அரசு முன் அனுமதி யின்றித் தொழிற்சாலைகளைத் தொடங்கலாம். தொழிற்சாலைப் பகுதிகளில் தொடங்கப்படும் தொழிற் சாலைகளுக்கு வரைபட அங்கீகாரம் 4 வாரத்திற்குள் அளிக்கப்படுகின்றது.

இம்மாவட்டத்தில் ஒசூர் தாலுக்காவைத்தவிர ஏனைய தாலுக்காக்கள் பிற்படுத்தப்பட்ட தாலுக்காக்களாகவும், அதிலும் பென்னாகரம் மிகவும் பிற்படுத்தப்பட்ட தாலுக்காவாகவும் அரசு அறிவித்துள்ளது. எனவே பென்னாகரம் தாலுக்காவில் புதிதாகத் தொடங்கும் தொழில்களுக்கு 20 சதவிகித முதலீட்டு மானியமும், 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி விலக்கும் அளிக்கப் படுகிறது.

இது தவிர உணவு பதப்படுத்தும் தொழில்கள், மருந்து தயாரிக்கும் தொழில்கள், மின்னணுத் தொழில்கள், ஆட்டோமொபைல்ஸ் தொழில்கள், லெதர் இண்டஸ்ட்ரீஸ் போன்ற தொழில்களுக்கு நிலையான முதலீட்டில் சிறப்பு முதலீட்டு மானியமாக 20 சதவிகித மானியம் வழங்கப் படுகின்றது. தொழிலகங்கள் இம் மாவட்டத்தில் எங்கு ஆரம்பித்தாலும், இச்சலுகை பெறத் தகுதி உள்ளது.

புதிதாக மின் இணைப்புப் பெற்ற தொழிலகங்கள் அனைத்துக்கும், மின்மானியமாக மின்கட்டணத்தில் முதல் வருடம் 30 சதவிகிதமும், இரண்டாவது வருடம் 20 சதவிகிதமும், மூன்றாவது வருடம் 10 சதவிகிதமும் மானியமாக வழங்கப்படுகின்றது.

விற்பனை வரி செலுத்தும் தொழிலகங்கள் பயனடைவதற்கெனத் தமிழக அரசு அறிவித்துள்ள திட்டம் விற்பனைவரி ஒத்திவைப்புத் திட்டம் ஆகும். இத்திட்டத்தின்கீழ் விற்பனைவரி செலுத்தும் தொழிலகங்கள் அவர்களுடைய முதலீட்டில் 100 சதவிகிதம் விற்பனை வரியை உடனே செலுத்தாமல் 9 ஆண்டுகள் கழித்துச் செலுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலீட்டுக்கழகம் இம் மாவட்டத்தில் தொழில் வளம் சிறக்க ரூ.90 இலட்சம் வரை கடன் வழங்குகிறது.

ஆதலால் புதிதாகத் தொழில் தொடங்கவுள்ள அனைவரும் இம் மாவட்டத்தில் பிரதி மாதமும் 20-ஆம் தேதி மாவட்டத் தொழில் மையம் மற்ற அரசுத்துறை நிறுவனங்களோடு இணைந்து நடத்திவரும் தொழிலதிபர்கள் விளக்கக் கூட்டங்களில் கலந்துகொண்டு தொழில் தொடங்குவதற்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் அறிந்து புதிய தொழில்களைத் தொடங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் தருமபுரி மாவட்டத்தில் அரூர், கிருஷ்ணகிரி, ஆகிய தாலுக்காக்களில் கருப்புக் கற்கள், பல வண்ணக்கற்கள் கிடைப்பதால், கல் மெருகூட்டும் தொழிற்சாலைகளைத் தொடங்கவும், மாம்பழம் மற்றும் தக்காளி அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதால் பழச்சாறு பதப்படுத்தும் தொழிற்சாலை, பழம் பதப் படுத்தும் தொழிற்சாலை ஆகியவைகளை அமைக்கவும், அரூர் தாலுக்காவில் மரவள்ளிக்கிழங்கு அதிகமாக உற்பத்தியாவதால் ஜவ்வரிசி, ஸ்டார்ச் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைக்கவும், பட்டு உற்பத்தி தமிழ் நாட்டிலேயே தருமபுரி மாவட்டம் முதலிடம் வகிப்பதால், பட்டுத் தொழில் உற்பத்தியில் இழை எடுத்தல், முறுக்கேற்றல் ஆகிய தொழில்களை அமைக்கவும், ஒசூர் மற்றும் அதனைச்

**ஏ. தசரதன் இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித் தலைவர்
தருமபுரி

# வாக்காளர் பட்டியல்கள்

## ஒரு முக்கியக் குறிப்பு

சென்னை மாநகரத்தில் உள்ள 14 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்கள் மற்றும் சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட எண்: 17. திருவொற்றியூர், 18. வில்லிவாக்கம், 19. ஆலந்தூர், 20. தாம்பரம் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்கள் நவம்பர் மாதம் 4-ஆம் தேதி முதல் டிசம்பர் மாதம் 3-ஆம் தேதி வரை பொதுமக்களின் பார்வைக்காகக் கீழ்க்கண்ட மையங்களில் வைக்கப் படும்.

1. சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த 155 கோட்ட அலுவலகங்கள் மற்றும் 10 வட்ட அலுவலர்கள்.

2. வட்டாட்சியர் அலுவலகங்கள்

3. வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் அலுவலர் அலுவலகம், சென்னை மாநகராட்சி, சென்னை-3.

4. அந்தந்த வாக்குச்சாவடி அமைந்துள்ள கட்டடங்கள்

வாக்காளர் பட்டியல்கள் பெயரைச் சேர்க்கத் தகுதியுள்ள ஆனால் பெயர் சேர்க்கப்படாமல் இருக்கும் எவரும் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் ஒரு பெயரை அல்லது விவரத்தைப் பதிவு செய்ததற்கு ஆட்சேபணைகளையும் தெரிவித்துக் கொள்ளலாம்.

வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கு வேண்டிய தகுதிகள்:

1. **ஆண்-பெண்** ஒரு இந்திய குடிமகனாக/குடிமகளாக இருத்தல் வேண்டும்.
2. 1.1.1992-ஆம் தேதியன்று 18 வயது பூர்த்தி ஆகியிருத்தல் வேண்டும்.
3. குறிப்பிட்ட தொகுதியில் சாதாரணமாக வசிப்பவராய் இருத்தல் வேண்டும்.

ஒரு பெயரைச் சேர்ப்பதற்கான விண்ணபத்தைப் படிவம் எண். 6-ஆம் பெயரைச் சேர்த்ததற்கு ஆட்சேபம் தெரிவிக்க படிவம் எண். 7-ஆம் மற்ற விவரத்திற்கு மறுப்பு தெரிவிக்க படிவம் எண்.8-ஆம் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் ரிப்பன் கட்டடத்திலுள்ள மாவட்டத் தேர்தல் அலுவலகத்திலும் முக்கிய வெளியீட்டு மையங்களிலும் மற்றும் 5 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் ஒவ்வொரு படிவமும் 15 காசு விலையில் விற்கப்படும். கையால் எழுதப் பட்ட, அச்சடிக்கப்பட்ட விண்ணப் பங்களையும் பயன்படுத்தலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை மாவட்டத் தேர்தல் அலுவலகத்திலோ அல்லது சம்பந்தப்பட்ட முக்கிய வெளியீட்டு மையங்களிலோ அல்லது வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்களிடமோ நேரிலோ அல்லது அஞ்சலிலோ வழங்கலாம்.

தேர்தல் ஆணைக்குழு இந்த புதிய வாக்காளர் திருத்தப் பட்டியலைத் தயாரிக்க உத்தரவிட்டுள்ளது. தங்கள் பெயர்கள் பட்டியலில் இல்லாத எல்லா வாக்காளர்களும் மற்றும் தங்கள் பெயர்கள் சம்பந்தப் பட்ட திருத்தங்களையும், நீக்கங்களையும் கொடுக்க விரும்புபவர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் கோரிக்கைகளைச் சரியான படிவங்களில் விவரமாகப் பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், வாக்காளர் பட்டியலைப் பார்வையிடும்போது பொதுமக்கள், 1988, 1989, 1990, 1991-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல்கையும், இறுதித் திருத்தப் பட்டியல்களையும் பார்வையிடுமாறு குறிப்பாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பங்கள் கடைசியாக 3.12.1991 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ அனுப்பப்பட வேண்டும்.

---

சுற்றியுள்ள இடங்களில் டி.வி.எஸ். அசோக்லேலண்டு, இங்கிலிஷ் எலெக்ட்ரிக்கல்ஸ் இந்துஸ்தான் மோட்டார்ஸ், டைட்டான் வாட்ச் கம்பெனி ஆகிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைத் துவங்கவும், பென்னாகரம் 22-தாலுக்காவில் புங்கம் மற்றும் வேப்பங் கொட்டைகளைக் கொண்டு எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைகளை அமைக்கவும், சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பெருகிவரும் நூற்பாலைகளுக்கு வேண்டிய பேப்பர் கோன்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கவும், தேங்காய் மட்டைகள் மற்றும் கற்றாழை கொண்டு கயிறு தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும், மரங்களைப் பயன்படுத்தி காகிதத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மரக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தொடங்கவும், இம்மாவட்டத்தில் தரமான மண் இருப்பதால் ஓடு மற்றும் செங்கல் தொழிற்சாலைகளைத் தொடங்கவும், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் தாலுக்காக்களில் பணியன் தொழிற்சாலைகளை அமைக்கவும், மேலும் கால்நடைகளின் எண்ணிக்கை இம்மாவட்டத்தில் அதிகரித்துள்ளதால் ஆடு, மாடுகளின் தோல்களைக் கொண்டு தோல் பதனிடும் தொழிற்சாலைகளை அமைக்கவும் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளதால் தொழில் தொடங்க முன்வருமாறு தொழிலதிபர்களையும், சிந்தனையாளர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் (I.C.D.P.) ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவி பெற்று மேற்படித் தொழில்களைத் தொடங்க வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், இவ்வரிய சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திக் கொள்ளுமாறு தொழில் அதிபர்களையும், சிந்தனையாளர்களையும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.



## தருமபுரி மாவட்டத்தில்

# கயிற்றுத் தொழில்

**த**ருமபுரி மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டமாகும். நெல், வாழை, கரும்பு போன்ற நன்செய் பயிர்கள் சில இடங்களில் விளைந்தாலும், குறிப்பிட்ட சில பகுதிகளில் தென்னைச் சாகுபடியும், விவசாயமும் முழுநேரத் தொழிலாகச் செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக, தென்பெண்ணையாறு பாயும் பகுதிகளில் அரசம்பட்டி, காவேரிப்பட்டிணம், மாராண்டஹள்ளி, பர்கூர் போன்ற பகுதிகளில் தென்னைச் சாகுபடி முழுவீச்சில் நடைபெற்று வருகின்றது. இதன் காரணமாக தென்னை மரத்தில் இருந்து கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி பல்வேறு தொழில்கள் இங்கே பாங்காய் நடைபெற்று வருகின்றன.

இம்மாவட்டத்தில் கிராமப்புற மக்கள் தென்னை ஓலையைப் பயன்படுத்திக் கூரை வேயும் கீற்றுகள் தயாரிப்பது, குடிசைத் தொழிலாக வளர்ந்து பரவியுள்ளது. அதே போன்று, தேங்காயிலிருந்து உரிக்கப்படும் தென்னை மட்டையைப் பயன்படுத்தி தேங்காய் நார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பரவலாக அமைந்துள்ளன; சுமார் 30 நார்த் தொழிற்சாலைகள் தருமபுரி மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. இதனால், தருமபுரி மாவட்டத்தில் கிடைக்கும் தென்னை மட்டைகள் பெரும்பாலும் ஒரு காலத்தில் எரிப்பதற்குப் பயன்பட்டு வந்த நிலை மாறி, தற்பொழுது நார்த் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளாகப் பயன்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக தருமபுரி மாவட்டத்தில் கயிற்றுத் தொழில்கள் படிப்படியாக வளர்ச்சி அடைந்துள்ளது. தென்னை நாரில் இருந்து கயிறு தயாரிப்பது ஒரு குடிசைத் தொழிலாக, காரிமங்கலம் அதன் சுற்றுப்புறங்களில் பரவி வளர்ந்துள்ளது. இங்கு வாழும் கிராம மக்கள் தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்கு இத்தொழிலில் மிகவும் விரும்பி ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தங்களது தொழிலுக்குத் தேவைப்படும் நார்களைத் தனியார் தொழிற்சாலைகளில் இருந்து பெற்று கயிறு தயாரித்து பிறகு தனியாருக்கும், சந்தையிலும் விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்வாறு கயிற்றுத் தொழில்கள் மூலம் கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதனை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவியுள்ளது. இவ்வாறாக கயிற்றுத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களும், ஆதிதிராவிடர்களும், உறுப்பினர்களாக உள்ளனர். இம்மாதிரி கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 5 அமைக்கப்பட்டுள்ளன. அவை:

**தருமபுரி மாவட்டத்தில் கயிற்றுத் தொழிலில் கணிசமான அளவிற்கு வளர்ந்து வருகிறது. இதன் மூலம் மகளிர் உட்படப் பலர் வேலைவாய்ப்பைப் பெற்று வருகின்றனர். இதனை விளக்குகிறது இக்கட்டுரை.**

1. வாடமங்கலம் தென்னை நார் உற்பத்தி, கயிற்றுத் தொழிற்கூட்டுறவுச் சங்கம், வாடமங்கலம், காவேரிப் பட்டினம் ஒன்றியம்.

2. சின்னமஞ்சவாடி மலைவாழ் மக்கள் தென்னை நார் உற்பத்தி, கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், பாப்பிரெட்டி ஒன்றியம்.

3. நவலை கயிற்றுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், நவலை, மொரப்பூர் ஒன்றியம்.

4. பாலவாடி ஆதிதிராவிடர் கயிற்றுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், பாலவாடி.

5. கடமடை ஆதிதிராவிடர் கயிற்றுத் பாய்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், கடமடை, பாலக்கோடு ஒன்றியம்.

மேற்படி சங்கங்கள் தமிழ்நாடு அரசின் மூதலீட்டுடன் சுமார் 27 இலட்ச ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் தமிழ்நாடு அரசு பங்கு மூலதனமாக ரூ.5 இலட்சம் முதலீடு செய்துள்ளது. மற்ற நிதிகள் ஐ.ஆர்.டி.பி. மானியமாகவும், தாட்கோ மானியமாகவும், பங்கு மூலதனக் கடனாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் வாடமங்கலம் கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் நார் மெத்தைகள் தயாரிக்கத் தேவைப்படும் சுருள் கயிறு முழுவீச்சில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இங்கு சுமார் 10 முதல் 20 வரை பெண்களும், ஆண்களும் தொடர்ச்சியாகப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சின்னமஞ்சவாடி தென்னை நார் உற்பத்தி கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் தென்னை மட்டையில் இருந்து நார் தயாரிக்கும் தொழில் நடைபெற்று வருகின்றது. இங்கும் சுமார் 10 உறுப்பினர்கள் வேலை செய்து வருகின்றனர். நவலை கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஆதிதிராவிடர் உறுப்பினர்களைக் கொண்டு இயங்குகிறது. இந்தச் சங்கத்தில் சுமார் 60 பெண் உறுப்பினர்கள் நாரில் இருந்து கயிறு தயாரிக்கும் தொழிலில் முழு நேரமாக ஈடுபட்டு வருகின்றனர். இச்சங்கத்திற்கு அம்பாலப்பட்டி, மோட்டூர், ஆகிய கிராமங்களில் கிளை மையங்களும் உள்

என. இச்சங்க உறுப்பினர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.300 வீதம் கூலியாகப் பெற்று வருகின்றனர். இச்சங்க உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் சூடிக் கயிறும், பரூர் சூடிக் கயிறும், சேலம் மத்திய விற்பனை கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வடமாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இச்சங்கம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.60,000 வீதம் கூலியாக உறுப்பினர்களுக்கு வழங்கி வருகின்றது. இதேபோல பாலவாடி ஆதிதிராவிடர் கயிற்றுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கமும் நாரில் இருந்து கயிறு திரிக்கும் தொழிலுக்காக ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கமும், தாட்கோ நிதியுதவியுடன் அமைக்கப் பட்டுள்ளது. இச்சங்கத்தில் தற்பொழுது சுமார் 24 உறுப்பினர்கள் கயிறு உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

கடமடை ஆதிதிராவிடர் கயிற்றுப் பாய் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், சன்னரகக் கயிற்றில் இருந்து கயிற்று மிதியடிகள், கயிற்றுப்பாய் தயாரிக்கும் தொழிலுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்பொழுது ஆரம்ப நிலையில் உள்ளது. விரைவில் உற்பத்தி துவங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு 30 உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வசதிகள் உள்ளது. இந்தக் கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் திறம்பட நடைபெறுவதற்குத் தேவைப்படும் பயிற்சியினையும், மற்ற உதவிகளையும் மத்திய கயிறு வாரியம் சிறப்பாக அளித்து வருகின்றது.

கயிறு வாரியத்தின் மூலம் பாலவாடி கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் 24 உறுப்பினர்களுக்கும், கடமடை கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் 12 உறுப்பினர்களுக்கும் இலவசமாகக் கயிறு திரிக்கும் ராட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர கயிற்றுப் பொருட்கள் விற்பனையினை ஊக்கப்படுத்துவதற்கு மாநில அரசும், கயிறு வாரியமும் இணைந்து கயிறு தள்ளுபடி விற்பனையினையும் செயலாக்கி வருகின்றன. இந்தத் தள்ளுபடித் தொகையினைச் சங்கத்திற்கு மானியமாக மாநில அரசும், கயிறு வாரியமும் 50:50 என்ற விகிதத்தில் வழங்கி வருகின்றது.

இச்சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு மட்டும் வேலைவாய்ப்பு அளித்து வந்தாலும், விரிவாக்கப் பணியாக இச்சங்கங்கள் மூலம் கிராமப்புற மக்களுக்குக் கயிற்றுப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது. நவலைக் கயிற்றுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் அம்பாலப்பட்டி, மோட்டூர் ஆகிய கிராமங்களில் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தில் 60 உறுப்பினர்களுக்குக் கயிற்றுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, இக்கிராம மக்கள் கயிறு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

அவ்வாறே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் திட்டத்தின் உதவியுடன் சுமார் 65 பெண்களுக்குச் சென்ற நிதி ஆண்டில் கயிற்றுப் பயிற்சி மொரப்பூர் ஒன்றியத்தில் அடங்கிய 3 கிராமங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற இப்பெண்களுக்கு ஐ.எப்.எ.டி. நிதியில் இருந்து 50 சதவிகித மானியமும் இந்தியன் வங்கியில் இருந்து கடனும் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, கீழ் வரும் மூன்று கிராமங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது:

1. மாரப்பநாயக்கன்பட்டி
2. போளயம்பள்ளி
3. அம்பாலப்பட்டி

தற்பொழுது இயங்கி வரும் கயிற்றுச் சங்கங்களைத் தவிர மேலும் மூன்று கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 15 இலட்ச மதிப்பீட்டில் அமைப்பதற்குத் திட்டங்கள் அரசின் அனுமதிக்கு அனுப்பப் பட்டுள்ளது.

1. அம்பாலப்பட்டி கயிற்றுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், அம்பாலப்பட்டி, மொரப்பூர் ஒன்றியம்.

2. குப்பாங்கரை ஆதிதிராவிடர் கயிற்றுத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், குப்பாங்கரை, காரிமங்கலம் ஒன்றியம்.

3. சூளக்கரை ஆதிதிராவிடர் கயிறுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், சூளக்கரை ஊத்தங்கரை (வழி) மத்தூர் ஒன்றியம்.

இச்சங்கங்கள் அமைக்கப்பட்டால் சுமார் 180 உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உதவியாக அமையும், இது தவிரவும், பர்கூர் ஒன்றியத்தில் ஒரு சுருள் கயிறு உற்பத்தி செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

இவ்வாறு தருமபுரி மாவட்டத்தில் தொழில் வணிக இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பணி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வளர்ச்சிப் பணிகளில் மத்தியக் கயிறு வாரியமும், மாநில அரசும் ஆக்கமும் ஊக்கமும் தந்து கயிற்றுத் தொழில் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகின்றன.

**- சி.சு. சரவணன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**தருமபுரி மாவட்டம்**

## பொன்மொழிகள்

★ **உனக்குள் இருக்கும் ஆற்றல் வெளிப்படும் வகையில் நீ வளர வேண்டும். வேறு யாரும் உனக்குக் கற்பிக்கவும் முடியாது. உனது சொந்த ஆன்மாவைத் தவிர வேறு ஆசிரியர் யாரும் இல்லை.**

—விவேகானந்தர்

★ **பயன் கருதிச் செய்யப்படும் வேலை தொண்டாகாது. பயன் கருதாது செய்யப்படும் பணியே தொண்டாகும். தொண்டு என்பது அடிமை வேலையன்று. அது தெய்வப் பணி.**

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

★ **மனதைப் பொத்தல் குடிசையாக வைத்திராமல், எந்தப் புயலையும் தாங்கும் இரும்புக் கோட்டையாக வைத்திருக்கக்கற்க வேண்டும்.**

—டாக்டர் மு. வரதராசனார்.

தஞ்சாவூர்-நாகப்பட்டினம்
காயிதேமில்லத் மாவட்டங்களில்:

# நீலப்புரட்சி



**த. இளங்கோவன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**தஞ்சாவூர்**

**த**ஞ்சாவூர் மாவட்டம் இயற்கையாகவே மண் வளமும், நீர்வளமும் உடையதாகும். ஆகவே, இங்கு நவீன முறையில் மீன்வளர்க்கத் தொழில்நுட்பமும் மற்றும் மீன்கள் வளர்ப்பதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் ஏராளம்.

தஞ்சை மாவட்டத்தில் வயல்களைக் குளமாக்கி மீன்வளர்ப்புச் செய்வது 1990 ஜனவரி மாதத்தில் துவக்கப்பட்டு, மக்களிடத்தில் வேகமான வரவேற்பைப் பெற்று வருகிறது. விவசாயத்தின் மூலம் குறைந்த வருவாயைப் பெற்றுச் சோர்வடைந்து வரும் விவசாயிகள், வயல்களைக் குளமாக்கி மீன்வளர்ப்புச் செய்வதன் மூலம் மற்ற பயிர்களைக் காட்டிலும் அதிக வருவாயை ஈட்டி வருகின்றனர்.

தஞ்சை மாவட்டத்தில் உள்நாட்டு மீன்வளர்ப்பில் மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையால் வேகமாக வளர்ந்துவரும் நீலப்புரட்சியினைக் கண்டு வெளிநாட்டில் வாழும் தமிழர்களும் - விவசாயிகள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் மிகவும் ஆர்வத்தோடு இத்திட்டத்தில் பங்குகொண்டு செயல்படுத்தத் துடிக்கின்றனர்.

**மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையினால் வழங்கப்படும் தொழில்நுட்பங்கள் மற்றும் கடந்த நான்காண்டுகளில் செய்த சாதனைகள்:**

★ வயல்களில் ஆழமில்லாத குறைந்த செலவில் குளம் அமைத்தல்.

★ மீன்குஞ்சுகளின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தி, வளர்ச்சி குன்றிய மீன்களைப் பிரபலப்படுத்துதல்.

★ இரண்டு இன மீன்களைக் கொண்டு, குறுகிய கால அறுவடை செய்தல்.

★ ஒருங்கிணைந்த மீன்பண்ணை அமைத்தல்.

★ மீன்குஞ்சுகள் வளர்ப்புடன் பலன்தரும் பயிர்கள் வளர்ப்பதால் அதிகமான வருவாயினை ஈட்டுதல்.

★ மீன்குஞ்சு உற்பத்தி.

**குறைந்த செலவில் குளம் அமைத்தல்:**

சுமார் 40 விழுக்காட்டுக்கு மேல் களிப்புக் கலந்த மண் அமைந்துள்ள வயல்களே குளம் அமைப்பதற்கு ஏற்றதாகும். வயல்களில், சுற்றியுள்ள நான்கு புறங்களிலும் சுமார் அடிமட்டத்தில் 3 மீட்டர், மேல் மட்டத்தில் 4.2 மீட்டர் அகலத்திற்கு 0.6. மீட்டர் ஆழத்திற்கு மண்ணை வெட்டி எடுத்து, ஏற்கெனவே உள்ள கரையில் மண்ணைச் சேர்த்துக் கரையை உயர்த்த வேண்டும். இவ்வாறு நான்கு பக்கங்களிலும் பள்ளமாக வெட்டி எடுப்பதன் மூலம் சுமார் 850 கனமீட்டர் மண்மட்டுமே வெட்டி எடுக்கப்படுகின்றது. இதன் மூலம் பல நன்மைகள் ஏற்படுகின்றன. செலவு ரூ.7,000/- முதல் 10,000/- வரைதான்.

ஆனால் பழைய முறைப்படி முழுப்பகுதியையும் தோண்டினால் 70,000/- வரை செலவாகும். 10,000 கன மீட்டர் தண்ணீருக்குப் பதிலாகச் சுமார் 1,000 கனமீட்டர் தண்ணீர் தேக்கினால் போதுமானது. முழுவதுமாகக் குளமாக வெட்டுவதற்கு 106 நாட்கள் என்றால் புதிய முறைப்படி ஒரு எக்டேர் ஆழமில்லாத குளத்தை உண்டாக்க வெட்டுவதற்கு 9 நாட்களே போதுமானது.

இக்குட்டையில் இருவகை இன மீன்வளர்ப்புத் திட்டத்தின் மூலம் கட்லா மற்றும் ரோகு மீன்குஞ்சுகளை விட்டு, நான்கு முதல் 5 மாத காலம் வரை வளர்ப்பதன் மூலம், சுமார் 2 டன் வரை மீன்உற்பத்தி செய்யலாம். இதனால் அதிக அளவு தண்ணீர் வீணாகாதது மட்டுமல்லாமல், சுமார் ரூ.25,000/- வரை நிகர வருமானமும் கிடைக்கும். தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மத்தியில் இந்தப் புதிய அமைப்பு மீன்வளர்ப்பிற்குச் சிறப்பான வரவேற்பு இருந்து வருகிறது. நாளுக்குநாள் பெருகியும் வருகிறது.

பொதுவாகத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா வட்டங்களிலும் இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருப்பதன் மூலம், தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளர்ப்பில் ஒரு நீலப்புரட்சியை உண்டாக்க வழி செய்துள்ளது.

**மீன்குஞ்சுகளின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தி, வளர்ச்சி குன்றிய மீன்களை வளர்ப்புக்குக் கொண்டுவருதல்:**

தமிழ்நாட்டிலேயே தஞ்சை மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையினால் முதன்முதலாக இம்மாவட்டத்தில் வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்ட வயதடைந்த மீன் குஞ்சுகளை விட்டு வளர்ப்பதன் மூலம் நல்ல பலனைத் தந்துள்ளது. இம்மாதிரி மீன்குஞ்சுகள், நாற்றங்கால்களில் பலமடங்கு அதிக அளவு இருப்புச் செய்து 6 மாதம் முதல் ஓராண்டு வரை வளர்த்தெடுக்கப்படுகின்றன. இதன் மூலம் மீன் குஞ்சுகள் 50 கிராம் முதல் 100 கிராம் வரை வளர்ச்சியடைகிறது. இம்மாதிரி வளர்க்கப்படும் மீன்குஞ்சு ஒன்றின் விலை ரூ.1/- முதல் 2/- வரை ஆகும். மேலும் இவ்வகையில் வளர்த்தெடுக்க மீன்குஞ்சுகளை எக்டேருக்கு 5,000-க்குப் பதில் 2,500 மட்டுமே இருப்புச் செய்யுமாறு பரிந்துரை செய்யப்படுகிறது. இவ்வகை மீன்குஞ்சுகள் குட்டையில் விட்டு வளர்க்கப்படும்போது 4 முதல் 5 மாதத்தில் அதன் வளர்ச்சி 800 கிராம் முதல் ஒரு கிலோ வரை வளர்கின்றது. பிழைப்புத் திறன் 100 விழுக்காடாகவும் இருப்பதால் அனைவரும் இவைகளையே விரும்பி இருப்புச் செய்கிறார்கள். எனவே இம்மாவட்டத்தில் உள்ள மீன் உற்பத்தியாளர்களுக்கு அம்மாதிரி மீன்குஞ்சுகளை வளர்க்கப் போதுமான பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இம்மாதிரி வளர்ச்சி குன்றிய மீன்கள் ஆர்.கே. மீன்பண்ணை, ஒரத்தநாடு, துர்கா மீன்பண்ணை பட்டீஸ்வரம், இ.எம்.கே. மீன் பண்ணை பள்ளி அக்ரகாரம், காட்டூர் மீன்பண்ணை காட்டூர், மகேஸ்வரி மீன்பண்ணை, நல்லாடை சீர்காழி போன்ற பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

**இரண்டு இன மீன்களைக் கொண்டு குறுகிய கால அறுவடை செய்தல்:**

புதிய முறையில் வயல்களில் வெட்டப்பட்ட குட்டைகளில் ஆறு வகை மீன்களை விட்டு வளர்ப்பதற்குப் பதில் இரண்டுவகை மீன் குஞ்சுகளான கட்லா மற்றும் ரோகு இன மீன்குஞ்சுகளைவிட்டு வளர்க்குமாறு பரிந்துரை செய்யப்படுகிறது.

**ஒருங்கிணைந்த மீன்பண்ணை:**

தஞ்சை மாவட்டத்தில் பல நோக்கு மீன்பண்ணைகள் அமைத்தல் சம்பந்தமாக விவசாயிகளின் கூட்டத்தின் மூலமாகவும் மற்றும் தீவிரப் பயிற்சி அளிப்பதன் மூலமாகவும் எடுத்துரைக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் சுமார் 10 பண்ணைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதிக உற்பத்தியினைப் பெருக்கும் நோக்கத்தில் கோழி, வாத்து, மாடு, முயல், ஆடுகள் வளர்க்கப்பட்டு அதன் கழிவுகளை மீன்பண்ணையில்போட்டு வளர்ப்பதனால் மீன் வளர்ப்பு ஏற்றம் பெற்று வருகிறது. இம்மாதிரி திட்டத்திற்குத் தஞ்சை மாவட்டத்தில் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் நல்ல வரவேற்பிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மீன்குஞ்சுகள் வளர்ப்பதுடன் பல வகைப்பயிர் செய்தல் மூலம் கூடுதல் வருவாயை ஈட்டுதல்:**

தஞ்சை மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் அறிவுரையின் பேரில், திருவாரூர் அருகில் உள்ள காட்டூர் கிராமத்தில் ஒரு ஏக்கர் பரப்பளவுள்ள மீன் நாற்றங்கால்களில் வளர்த்த மீன்குஞ்சு விற்பனை மூலம் ரூ.48,000/- வரை வருவாய் ஈட்டியதுடன் அதன் கரைகளில் வாழை மற்றும் தென்னை வைத்து அதன் மூலமாகவும் வருவாயை ஈட்டியுள்ளார். இவைகளின் மூலம் 5 ஆண்டிற்குப் பின்னர் வருமானம் ரூ.52,000/- ஆக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மீன்குஞ்சு உற்பத்தி:**

தஞ்சை மாவட்டத்தில் எப்போதும் இல்லாத அளவில் இவ்வாண்டில் 12 தனியார் மீன்பண்ணை



★ நவீன முறையில் வளர்க்கப்பட்ட மீன் வகை.

மூலமும், 3 அரசு மீன்பண்ணைகள் மூலம் சுமார் 800 இலட்சம் நுண் மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து பெரிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. அவைகளிலிருந்து சுமார் 160 முதல் 175 இலட்சம் வரையான விரலிகளை வளர்த்தெடுக்க முடியும். 1988-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் இரண்டு தனியார் மீன் பண்ணை மற்றும் 3 அரசு மீன் பண்ணை மூலம் 200 இலட்சம் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்து சுமார் 40 இலட்சம் விரலிகள் மட்டுமே உண்டாக்கப்பட்டு வந்தது. தவிர, தஞ்சை மாவட்ட மீன்வளர்ப்போர்கள் மற்றும் முகமை 1989 வரை வெளி மாவட்டங்களிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் மீன்குஞ்சுகளை எடுத்து வந்து இருப்புச் செய்தன. ஆனால் சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டிலும் ஏராளமான மீன்குஞ்சுகள் உற்பத்தி இம் மாவட்டத்திலேயே செய்யப்பட்டு இருப்புச் செய்யப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டம் மாநிலத்திலேயே, இவ்வகையில் உற்பத்தியில் தன்னிறைவை அடைவதோடு மட்டுமல்லாமல் மற்ற மாவட்டங்களுக்கும், மாநிலத்திற்கும் விநியோகம் செய்கிற அளவிற்கு முன்னிலையில் உள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். இப்படி 12 தனியார் மீன்குஞ்சுப் பண்ணைகளை ஊக்குவித்து, உற்பத்தியைப் பெருக்கிய பெருமையுடையது தஞ்சை மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை.

**மீன்உற்பத்தி மற்றும் விவசாயத்தின் மூலம் பெற்ற வருவாயினையும் ஒப்பிட்டுப் பார்த்து நிகர வருமானம் கணக்கிடல்:**

ஒரு எக்டேர் வயலில் விவசாயம் செய்தல் மூலம் 5 வகைப் பயிர்கள் கத்தரி, உருளை, வாழை, மஞ்சள், பூண்டு ஒரு அறுவடையில் கிடைக்கும் வருமானம் ரூ.20,000/- முதல் 27,000/- வரையும், ஆனால் அதே அளவு குளத்தில் மீன்உற்பத்தி மூலம் கிடைக்கும் வருவாய் ஓர் ஆண்டில் இரு அறுவடையில் ரூ.50,000/-மும், மூன்று அறுவடையில் ரூ.75,000/-மும் கிடைக்கிறது. எனவே வருவாயில் மீன்உற்பத்தி முதலாவதாக நிற்கிறது.



**மேலத் தஞ்சையின் மண்வளம்:**

தஞ்சை மாவட்டத்தில் நன்னீர், உவர்நீர் மற்றும் கடல்நீர் பகுதிகள் நிறைய உள்ளன. அவைகள் சுமார் 8,21,263.47 எக்டேர் பரப்பளவு உள்ளன. அதில் 2,72,952.95 எக்டேர் பரப்பளவே மீன் வளர்ப்பிற்கு ஏற்றதாக உள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அது மொத்தப் பரப்பில் 33.22 சதவிகிதம் ஆகும். தண்ணீரை அதிகமாக இழுக்காமல் உள்ள களிமண் வளத்தன்மை மிகவும் முக்கியமானதாகும். தவிர உவர்நீர்ப் பரப்பு சுமார் 20,727 எக்டேர் அளவு பரந்து கிடக்கிறது.

**கீழத்தஞ்சையில் உள்ள உவர்நீர் மற்றும் கசிவுத்தன்மை மண்ணின் உபயோகம் பற்றி:**

இதில் மொத்தம் 7,832 கி.மீ. பரப்பளவு உள்ளவைகளில் 4,917 கி.மீ. பரப்பளவினை நீர்வளத்தை அதிகரிக்கச் செய்யவும் மீதம் உள்ள 2,915 கி.மீ. கசிவுத் தன்மையுள்ள மண் அமைப்பில் 6 வித உவர் நீர் மீன்களை வளர்க்கவும் நிலத்தடி உவர்நீர் மீன் பண்ணைகளை உண்டாக்கவும் பயன்படுத்த வாய்ப்பு உண்டு.

**உவர்நீரில் வளர்க்கப்படும் மீன் வகைகள்:**

1. திலேப்பியா
2. கொடுவா
3. செத்தக்கெண்டை
4. பால்கெண்டை
5. கருப்பு இரால் அல்லது புலி இரால்.

**கடைமடைப்பகுதி பரப்பு:**

முன்மாதிரித் திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கர் அளவுள்ள பண்ணையில் ஏற்கெனவே திருத்துறைப்பூண்டி மற்றும் முத்துப்பேட்டைப் பகுதியில் சென்ற ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தக் குளம் தனியாக 2 மீ. அளவு ஆழம் உள்ளதாக வெட்டப்பட்டு, அதன் கரைகளில் பயன்தரும் மரங்கள் நடப்படுகின்றன. இக்குளங்களில் காவிரியிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரும் மற்றும் மழையினால் கிடைக்கும் நீரும் தேக்கி வைக்கப்படுகிறது. இது பயிருக்குப் பாசனமாகவும், மீன்வளர்ப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. இதற்காக ஒரு ஏக்கருக்கு ரூ.50,000/- வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்றுத் தந்து, அதற்காக 20 சதவிகிதம் மானியமும் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

**எதிர்காலத்தில் வேதாரண்யம் பகுதிகளில் மீன்வளர்ச்சிக்கு:**

| | எக்டேர் |
|---|---|
| தேங்கிய நீர்ப்பகுதி | 1,137.00 |
| சேற்றுப் பகுதி | 455.28 |
| ஆழமான நீர்ப்பகுதி | 377.40 |
| உப்பங்கழி | 133.28 |
| | 2,102.96 |

பழஞ்சூர் பகுதி மரங்காடு பகுதி, முத்துப்பேட்டை, வேகூன் செருதலைக்காடு பகுதி வேதாரண்யம் பகுதி 10,000 எக்டேர் வரை மீன் வளத்தைப் பெருக்க வாய்ப்பு உண்டு.

தஞ்சை மாவட்டத்தில் தற்போதைய நன்னீர் மீன்உற்பத்தி 16,000 டன்கள். மேற்சொன்ன குளங்கள், ஏரிகள், பயன்படுத்தப்படாத குட்டைகள், தாழ்வான பகுதிகளை, மீன்வளர்ப்பிற்குப் பயன்படுத்தினால், நிச்சயமாக மீன் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்க முடியும்.



# சேலம் அரசு அருங்காட்சியகம்


ஜா.ரா. அசோகன்,
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சேலம்


**சேலத்தில் உள்ள அரசு அருங்காட்சியகம் சிறப்புடைய தாகும்; அதன் படப்பிடிப்பாக விளங்குவது இந்தக் கட்டுரை:**

**த**மிழகத்தில் மாவட்ட அளவில் ஆரம்பிக்கப்பட்ட அருங்காட்சியகங்களில் சேலம் அரசு அருங்காட்சியகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் பதினோராம் நாள் இவ்வருங்காட்சியகம் தொடங்கி வைக்கப்பட்டது. ஏனைய அரசு அருங்காட்சியகங்கள் தொடங்கப்பட்ட விதத்திலிருந்து இது சற்று மாறுபட்டதாகும்.

சேலம் மாவட்டத்திலுள்ள, இத்துறையில் ஈடுபாடுடைய சில அறிஞர்களாலும், கலைஞர்களாலும், இவ்வருங்காட்சியகம் மேற்குறிப்பிட்ட நாளில் தோற்றுவிக்கப்பட்டதுதான். மேலும் அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ.மு.சுவாமிநாதன் அவர்களும் இவ்வருங்காட்சியகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கமளித்தார். இம்முறையில் தோற்றுவிக்கப்பட்ட இவ்வருங்காட்சியகம் *11.2.76* முதல் *1.3.79* வரை மூன்று ஆண்டுகள் மாவட்ட ஆட்சியத்தின் கீழ் இயங்கி வந்தது. பின்பு மாவட்டந்தோறும் அருங்காட்சியகங்கள் அரசு அருங்காட்சியகத் துறையால் தொடங்கப்படுவது கண்டு, தனித்து இயங்கி வந்த இவ்வருங்காட்சியகமும் *1.4.79* முதல் அரசு அருங்காட்சியகங்களுடன் இணைக்கப்பட்டு, தற்பொழுது அருங்காட்சியக இயக்ககத்தின் கீழ் செவ்வனே இயங்கி வருகிறது. இம்முறையில் சேலம் மாவட்டத்தின் கலை, கல்வி, கலாச்சாரம் இவற்றை எடுத்தியம்பும் ஓர் அரிய கல்விக் கூடமாகத் திகழ்ந்து வருகிறது.

சேலம், ஓமலூர் சாலையில் இரண்டு கட்டடங்களில் இயங்கி வரும் இவ்வருங்காட்சியகம் ஒரு பலநோக்கு அருங்காட்சியகமாகும். இதில் தொல்பொருளியல், விலங்கியல், தாவரவியல், நாணயவியல், புவியமைப்பியல், பண்பாட்டியல், முந்துவரலாறு, மாவட்டக்கூடம், ஓவியங்கள், தபால்தலைகள், தொழிற்கூடம், போர்க்கருவிகள் ஆகிய காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அருங்காட்சியகத்திற்கு வருபவர்களை முதலில் வரவேற்பது இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்ட ஏழு அடி நீளமுள்ள பீரங்கியாகும். மாவட்ட ஆட்சியரகத்தில் வைக்கப்பட்டிருந்த இந்தப் பீரங்கி, அரசு அருங்காட்சியகமாக அமைக்கப்பட்டபோது இங்கு மாற்றப்பட்டு மக்களை வரவேற்கிறது.

அண்மையில் ஓமலூர் அருகே தோண்டியெடுக்கப்பட்ட மிகப் பெரிய முதுமக்கள் தாழியும், மாவட்டச் சுற்றுலாத் தலங்கள் பற்றிய விளக்கங்களும் முதல் கட்டடத்தின் முகப்பில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கட்டடத்தினுள் முதலில் எதிர்ப்படுவது தொழிற்கூடமாகும். இங்கு சேலம் மாவட்டத்தின் தொழில் தலைநகரமான மேட்டூரில் அமைந்துள்ள முக்கியத் தொழிலகங்களின் அன்பளிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அடுத்துக் காணப்படுவது மாவட்டக் கூடமாகும். இங்கு சேலம் மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் புகைப்படங்களும், சுற்றுலாத் தலங்களின் புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் நாமக்கல் கோட்டை, சங்ககிரிக் கோட்டை, ஆத்தூர் கோட்டை, ராமர் கோவில், கொல்லமலை அறப்பளீஸ்வரர் கோவில், தாரமங்கலம், ஏர்க்காடு ஆகிய இடங்களின் புகைப்படங்களும், சேலம், தருமபுரி மாவட்டங்களைச் சார்ந்த பல்துறை அறிஞர்களின் புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன. இவற்றோடு நாமக்கல் கவிஞர் திரு வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பயன்படுத்திய மேலங்கி, பணவுரை, ஜெயில் அடையாள அட்டை ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

சேலம் மாவட்டம் கனிமப் பொருட்களுக்குப் பெயர் பெற்றது. இங்கு கிடைக்கும் முக்கியக் கனிமப் பொருட்கள் எழில்மிகு முறையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் கனிம வளத்தைக் காட்டும் வரைபடமும், அரியலூரில் இருந்து சேகரிக்கப்பட்ட கற்படிவங்களும், பீங்கான்களால் செய்யப்



திப்பு சுல்தான் காலத்தில் பயன் படுத்தியதாகக் கருதப்படும் மருந்து கிட்டிக்கும் துப்பாக்கிகள் (Muzzle Loading Guns)

பட்ட வரலாற்று முக்கியத்துவம் பெற்ற அரிய கலைப் பொருட்களும் இக்காட்சிக் கூடத்தை அலங்கரிக் கின்றன. இவற்றிற்கெல்லாம் சிகர மாக இருப்பது பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன் வாழ்ந்த சுமேரிய மக் களின் எழுத்துக்கள் அடங்கிய சுற் செங்கல்லாகும். அடுத்து வருவது விலங்கியல் கூடமாகும். இக்கூடம் பொதுமக்களைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் முக் கியக் காட்சிப் பொருட்களாக வலம் புரிச் சங்கு, கடற்குதிரைகள், பல வகைப் பறவைகள், பாம்புகள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன. வலம்புரிச்சங்கு என்பது கடலில் காணப்படும் ஒரு அரிய சங்காகும். பல்லாயிரம் சங்குகளில் ஒரு சங்கு தான் வலம்புரிச் சங்காகக் கிடைக் கிறது. மக்கள் வலம்புரிச் சங்கை இடம்புரிச் சங்கிலிருந்து வேறு படுத்தி காணும்பொருட்டு இரு வகைச் சங்குகளுமே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மிகப்பெரிய நீர்த்தேக்கமான மேட்டூரில் கிடைக்கப் பெறும் அரிய மீன் வகைகளும், கடல்மீன் இனங்களும், கடல்சுறா, கடல் ஆமை ஆகிய விலங்கினங் களும் காட்சிக்கூடத்தை அலங்கரிக் கின்றன. ஏர்க்காட்டில் காணப்படும் பறவையினங்களும், இந்திய வன விலங்குச் சரணாலயங்களின் விவரம் அறியும் மின் இயக்கியும் சிறப்பு அம்சமாக விளங்குகிறது.

தாவரவியல் மற்றும் நாணய வியல் பிரிவுகளில் ஏர்க்காடு மற்றும் கொல்லிமலைகளில் காணப்படும் 31 வகையான மரவகைகளும் பல வகைக் கொடிகளின் தண்டுகளும் பலவகைத் தாவரங்களின் வண்ண ஓவியங்களும் அழகுற இடம் பெற் றுள்ளன. இப்பிரிவின் ஒரு பக்கத் திலேயே நாணயவியலுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியரின் நாணயங்கள்-ஹைதர் அலி, திப்புசுல்தான், மைசூர் உடையார் வெளியிட்ட நாண யங்கள் - போர்ச்சுகீசிய, டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் நாணயங்களுடன் அயல் நாட்டு நாணயங்களும் இங்கே காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தபால் தலைப்பிரிவில் இந்தியா வில் முதன்முதலாகப் பொதுமக்களுக் காக வெளியிடப்பட்ட தபால் தலைகள், இந்தியாவின் கட்டடக் கலை, போக்குவரத்துத் துறைகளுக் காக வெளியிடப்பட்ட தபால்தலை களும் காட்சியில் இடம் பெறுகின்றன.

முதல் கட்டடத்தைப் பார்த்து விட்டு, இரண்டாம் கட்டடம் செல் வோமேயானால், அங்கு நம்மை வர வேற்பது அழகிய கல்லினாலான நந்தி உருவச் சிலையாகும். நாமக்கல் வட்டத்திலிருந்து திரட்டப்பட்ட இச்சிலையும், வாயிற்புறம் படிக்கட்டு களின் அருகே அமைந்துள்ள சேந்த மங்கலத்திலிருந்து கொணரப்பட்ட வீரன் புலியுடன் சண்டையிடும் புலிக்குத்திக் கல்லும், மிகவும் எழில் மிகு சிற்பங்களாகும். பொது நலத் திற்காகச் சண்டையிட்டு மடிந்த வீரனின் அடையாளமாக இவ்வீரக் கற்கள் எழுப்பப்படுகின்றன. இவை மட்டுமின்றிப் பல்வேறு இடங்களி லிருந்து திரட்டப்பட்ட வீரக்கற் களும், இதர வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த சிற்பங்களும் கட்டடத் தின் முன்புறத்தை அலங்கரிக்கின் றன. இவற்றுள் முக்கியமானவை ஈஸ்வரவர்ம பல்லவன் காலத்திய 7-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்து வீரக்கல், சுந்தர பாண்டியன் காலத் திய 12-ஆம் நூற்றாண்டு வீரக்கல், காளையுடன் போராடி மடிந்த வீரனின் 14- ஆம் நூற்றாண்டு நடுகல் ஆகியவை ஆகும்.

இரண்டாவது கட்டடத்தின் முதல் அறையில் எதிர்ப்படுவது முந்துவரலாற்றுக் கூடமாகும்.

கூடத்தின் நடுவே, மோகனூரி லிருந்து எடுக்கப்பட்ட முதுமக்கள் தாழி பாங்குற அமைக்கப்பட்டுள் ளது. இத்தாழியினுள் இருந்து எடுக் கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் ஒருபுறம் காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளன. முது மக்கள் தாழிகள் சேலம் மாவட்டத் தில் பல்வேறு இடங்களில் தோண்டி யெடுக்கப்பட்டுள்ளன. இவை இறந் தோரைப் புதைப்பதற்காகப் பயன் படுத்தப்பட்டு வந்துள்ளது. தாழிகள் பூமியினுள் காணப்படும் விதத்தை இங்குள்ள ஒரு படம் சித்திரிக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கற்கால மனிதன் பயன் படுத்திய கல் ஆயுதங்கள் வரிசைப் படி வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதலில் காணப்படுவது பழங்கற் காலக் கருவிகளாகும். இவற்றைத் தொடர்ந்து இடைக்கற்கால கருவி களும், புதிய கற்காலக் கருவிகளும் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டம் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு பழந்தமிழகத்தின் ஐந்து பிரிவுகளில் ஒன்றான கொங்கு

மோகனூர் அருகே தோண்டியெடுக் கப்பட்ட முதுமக்கள் தாழி



மண்டலத்தை ஆண்ட அரசர்களான, சோழர், ஒய்சளர், விஜயநகரப் பெருமன்னர்கள், கொங்குச் சோழர், மதுரை நாயக்கர்கள், மைசூர் உடையார்கள் ஆகியோரின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்த கற்சிலைகள் இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து 19-ஆம் நூற்றாண்டு வரையிலான பல்வகைக் கற்சிலைகள் இங்குக் காட்சியளிக்கின்றன. காலத்திற்கேற்றபடி மாறுபட்ட சிலை அமைப்பை இங்கே கண்டு மகிழலாம். இவற்றுள் முக்கியமானவை சேந்தமங்கலத்திலிருந்து சேகரிக்கப்பட்ட நர்த்தனக் கண்ணன், மேட்டூரிலிருந்து திரட்டப்பட்ட அம்மன் சிலை, நாமக்கல் வட்டத்திலிருந்து திரட்டப்பட்ட விநாயகர் சிலை ஆகியவையாகும்.

சேலம் மாவட்டத்தில் நிறைய மலைகள் அமைந்துள்ளன. இம்மலைகளில் மலைவாழ் பழங்குடிகள் வசிக்கின்றனர். இக்கண்ணோட்டத்தில் பண்பாட்டியல் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. கொல்லிமலை, மலைவாழ் மக்கள் பயன்படுத்திய பல்வேறு இரும்பு ஆயுதங்கள், உடுக்கை, மரக்கால், ஊது-கொம்புகள், பலிக்கொடுவாள்கள், இரும்பு விளக்குகள், கோவில் தீர்த்த பாத்திரங்கள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் போத மலைப்பகுதியில் திரட்டப்பட்ட மலைவாழ் மக்கள் பயன்படுத்தும் பொருட்களும் விரைவில் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

போர்க்கருவிகள் கூடத்தில் பீரங்கிகள், பீரங்கிக் குண்டுகள், திப்பு சுல்தான் காலத்தில் பயன்படுத்தியதாகக் கருதப்படும் மருந்து கிடிக்கும் துப்பாக்கிகள், மரத்தினால் செய்யப்பட்ட கேடயங்கள், ஈட்டிகள், போர்வாள்கள், கட்டாரிகள், ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகம் சிறந்த ஓவியக் கூடத்தையும் கொண்டு விளங்குகிறது. இக்கூடத்தைத் தற்கால எண்ணெய் வண்ண ஓவியங்கள் அலங்கரிக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை உலகப்புகழ் பெற்ற ஓவியர் டி.பி. ராய்சௌத்திரியின் 'மழையில் நனைந்த காக்கை', 'தாயும் சேயும்'; நாமக்கல் கவிஞர் அவர்களின் 'காந்தியடிகள்' ஆகிய ஓவியங்களாகும்.

சேலம் அருங்காட்சியகம், மேற்குறிப்பிட்ட காட்சிப் பொருட்களை மட்டும் காட்சிக்கு வைத்திராமல், சிறந்த கல்வி நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. அருங்காட்சியகத்தில் கல்வி சம்பந்தமான படக் காட்சிகளும் - பல்வேறு வல்லுனர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகளும் சிறப்புக் கண்காட்சிகளும் - பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கல்வி சம்பந்தப்பட்ட பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. அருங்காட்சியக நூலகம், ஆராய்ச்சியில் ஈடுபாடுடைய மாணவர்களுக்குப் பேருதவியாய் உள்ளது. இவ்வகையில் சேலம் அரசு அருங்காட்சியகம் பொதுமக்களுக்கு ஒரு சிறந்த கல்வி நிறுவனமாகவும், பொழுதுபோக்கு இடமாகவும் சிறப்புறச் செயலாற்றி வருகிறது. அருங்காட்சியகம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்ந்து பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படுகிறது. வாரவிடுமுறை நாள் வெள்ளிக்கிழமையாகும். தேசிய விடுமுறை நாட்களைத் தவிர ஏனைய அரசு நாட்களிலும் திறந்திருக்கும். இந்த அருங்காட்சியகத்தில் அனுமதி இலவசமாகும்.

---

## தூக்கம் வரவில்லையா?

**தூக்கம் வரவில்லையா? நன்றாகத் தூக்கம் வர என்ன செய்ய வேண்டும்?**

அமெரிக்காவில் பாஸ்டன் பல்கலைக் கழக மருத்துவமனையில் தூக்கம் பற்றிய ஆராய்ச்சிக்கூடம் ஒன்று இயங்கி வருகிறது.

உணவு, மனநிலை, தூங்கும் இடத்தின் சூழ்நிலை, படுக்கைக்குச் செல்லும் போது உள்ள பழக்க வழக்கங்கள் ஆகியவை காரணமாக ஒருவருக்குத் தூக்கம் பிடிக்காமல் போகலாம் என்று இந்த ஆராய்ச்சிக் கூடத்தின் இயக்குநராக உள்ள சான்போர்ட் ஆவர்பாக் என்னும் நிபுணர் கூறுகிறார்.

உடலை அயர்ச்சியுற வைக்கும் உடற்பயிற்சியானது தூக்கத்தை வரவழைக்கக் கூடிய நல்ல மருந்தாகும். ஆனால், படுக்கப் போகும் நேரத்தில் இத்தகைய உடற்பயிற்சிகளைச் செய்யக் கூடாது. சற்று முன்னதாகப் பகலிலேயே இந்த உடற்பயிற்சிகளைச் செய்வது நல்ல பலன் தரும்.



தூக்கம் வராமல் அவதிப்படுபவர்கள் பிற்பகல் நேரங்களில் காபி, டீ, கோலா போன்ற பானங்களை அருந்தக்கூடாது. மது அருந்துவதுகூடத் தூக்கத்தைப் பாதிக்கும்.

வெதுவெதுப்பான நீரில் குளிப்பது, தியானத்தில் ஈடுபடுவது, ஒய்வாக இருப்பது, படுப்பதற்கு முன்னால் ஒரு குவளை பால் அருந்துவது ஆகியவை தூக்கத்தை வரவழைப்பதற்கு மிகுந்த துணை புரியும்.

மற்றொரு விஷயம். தூங்கியாக வேண்டுமே என்று கவலைப்படுவதை விடுங்கள். தூக்கம் வரவில்லையென்றால், படுக்கை அறையை விட்டு வெளியேறி வேறு ஏதேனும் பணியில் ஈடுபடுங்கள். வெளியே சற்று உலாவுங்கள். அல்லது ஏதேனும் புத்தகம் படியுங்கள். களைப்பு ஏற்பட்டால் மீண்டும் படுக்கைக்குச் செல்லுங்கள். தூக்கம் தானாக வரும். ஒன்றை மட்டும் நன்றாக நினைவில் வைத்துக கொள்ளுங்கள். படுக்கைக்குச் செல்லும்போது உங்கள் மற்ற பிரச்சினைகளையெல்லாம் மறந்து விடுங்கள்.

—இவை இந்த ஆராய்ச்சிக் கூட இயக்குநரின் அறிவுரைகள்.

—அமெரிக்கத் தகவல் அலுவலகம்



### பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட

# வளர்ச்சிப் பணிகள்

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரசு மாதிரி பட்டுப் பண்ணைகளில் தாய் மரச் செடிகள் அமைத்துப் பராமரிக்க, பட்டு வளர்ச்சித் துறைக்கு அரசு நடப்பாண்டிற்கு ரூபாய் 6.07 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 4 இலட்சம் நாற்றங்கால் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப் பட உள்ளது. மேலும், நடுத்தர மரக்கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு மானியமாக வழங் கப்படும். பயிர் வளர்க்கும் காலத் தில் விவசாயிகட்கு ஊக்கத்தொகை யும் வழங்கப்படும். இதனால் இம் மாவட்டத்தைத் சார்ந்த சுமார் 160 குடும்பங்கள் பயன்பெறும்.

**நெடுஞ்சாலைத் துறை**

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் 60 கி.மீ. நீளத்திற்குச் சாலைகளைப் புதுப்பிக் கவும், சிறுபாலங்கள் கட்டவும் நடப் பாண்டிற்கு அரசு ரூ.240.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதில் மாநில அளவில் 101 சிறு பாலங்கள், மற்றும் ஒன்றியச் சாலை களில் கட்டப்படும் திட்டத்தின்கீழ், 5 சிறுபாலங்கள் ஆகியவை கட்ட ரூ.24.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டதில், பாலங்கள் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளன. மாநிலச் சாலைகள் திட்ட வேலை களின் ஒதுக்கீட்டில் பெரம்பலூர் மானாமதுரை சாலையில் ரூபாய் 2.50 இலட்சம் செலவில் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. காரைக் குடி அருகில் சேர்மன் மெய்யப்பன் செட்டியார் சாலையில் ரூ.22 இலட்சம் செலவில் கட்டப்படும் பாலவேலைகள் அடுத்த மாதம் முடியும். கண்ணங்குடி புதுக் கோட்டை சாலைப் பராமரிப்புக்கு ரூ.17.70 இலட்சம் அரசு ஒதுக்கி யுள்ளது.

ஆர்.எஸ்.மங்களம்-இளையாங்குடி செல்லும் சாலையில் பிரிந்து அண்டக்குடி செல்லும் சாலை புதுப்பித்திட ரூ.6.50 இலட்சமும், நந்திக்கோவில்பட்டி-அரசானிபட்டி சாலையைப் புதுப்பித்திட ரூ. 19.25 இலட்சமும், மானாமதுரை-தொளி சாத்தநல்லூர் சாலையில் பிரிந்து சிவகங்கை இளையான்குடி செல்லும் சாலையை ரூ.20 இலட்சத்தில் புதுப்பிக்கவும், சிறப்புப் பழுது வேலைகளுக்காக ரூ.73.63 இலட் சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற் கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மதுரை- தொண்டிச் சாலையைச் செப்பணிடவும் ரூ.20 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது. இவ் வகையில் இம்மாவட்டத்தில் ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீட்டின் மூலம் மொத்தம் 160 கி.மீ. நீளத்திற்குச் சாலைகள் புதுப்பிக்கப்பட உள்ளன.

**பிற்பட்டோர் நலத்துறை**

இம்மாவட்டத்தில் உள்ள பிற் பட்டோர் நலத்துறைக்குப் பல்வேறு நலத்திட்டப்பணிகளை நிறைவேற்றத் தமிழக அரசு ரூ.23 இலட்சம் நடப்பு ஆண்டிற்கு (1991-92) ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிதி ஒதுக்கீட்டில் கல்லூரி இலவசக் கல்வி உதவித்தொகையாக ரூ.10 இலட்சமும், நிலம் கையகம் செய்ய ரூ.1.50 இலட்சமும், முதல் தலைமுறையினருக்கு இலவசத் தொழில்கல்வி வழங்க ரூ.50,000, விடுதிகள் பராமரிப்புக்கு ரூ.30,000 மற்றும் பல்வேறு இனங்களுக்கு என ரூ.12,61,000 ஒதுக்கீடு செய்துள்

**- என். பாலையா**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பசும்பொன்**
**முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்**

ளது. இதன் மூலம் சுமார் 3,700 பேர் பயன் பெறுவார்கள். மேலும் கல்லூரி விடுதிகள் செலவுக்கென ரூ.5,50,000, இலவசக் கல்லூரிக் கல்வி உதவித் தொகையாக ரூ.3,70,000 வழங்கியுள்ளது. மேலும் இதர இனங்களுக்கும் சேர்த்து ரூ.9,22,000 வழங்கியுள்ளது. இதன்மூலம் 625 பேர் பயன் பெறுவார்கள்.

**தாட்கோ**

இம்மாவட்டத்தில் ஆதிதிராவிட மக்கள் முன்னேற்றத்திற்காகத் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டப் பணிகளில் கடன் உதவி வழங்கிட ரூபாய் ஒரு கோடி வாழங்கியுள்ளது. இதன் மூலம் 800 ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த ஏழை மக்கள் பயன் பெறுவார்கள்.

இந்த நிதி ஒதுக்கீட்டில், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 200 நபர்களுக்கு ரூ.20 இலட்சம் கடன் வழங்கப்படும். சுயவேலை வாய்ப்புப் பயிற்சி ரூ.4 இலட்சம் செலவில் 150 நபர்களுக்குத் தரப் படும். வண்டி மாடுகள் வாங்க 125 நபர்களுக்கு ரூ.12 இலட்சம் வழங் கப்படும். தொகுப்பு வளர்ச்சித் திட் டத்தின்கீழ் 100 நபர்களுக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்படும். தனிநபர் தொழில் கடன்தரும் திட்டத்தின்கீழ் 30 நபர்களுக்கு ரூ.45 இலட்சம் கடன் தரப்படும். பெட்டிக்கடை வைத்துக்கொள்ள 20 நபர்களுக்கு ரூ.40,000 வழங்கப்படும். இரும்புப் பெட்டிக்கடை வைக்க 5 நபர்களுக்கு ரூ.45,000, சைக்கிளுடன் கூடிய விசைத் தெளிப்பான் வாங்க 10 நபர்களுக்கு ரூ.40,000, உழவு மாடு வாங்க 100 நபர்களுக்கு ரூ.4.50 இலட்சம், டயர்வண்டி மாடுகள் வாங்க 20 நபர்களுக்கு ரூ.3 இலட்சம், பம்புசெட் வாங்க 5 பேர்களுக்கு ரூ.50,000 இந்த ஆண்டு தாட்கோ மூலம் கடன் உதவி வழங்கப்படும்.

**பட்டு வளர்ச்சி, பிற்பட்டோர் நலன், ஆதிதிராவிடர் நலம், மண்வளப் பாதுகாப்பு முதலான பல துறைகளில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறது இக்கட்டுரை.**

**கல்வித்துறை**

இம்மாவட்டம் திருப்புவனம் ஒன்றியத்தில் உள்ள கல்லூரணி நடுநிலைப்பள்ளியும், சிங்கம்புணரி ஒன்றியத்தில் உள்ள திருக்களாப்பட்டி நடுநிலைப் பள்ளியும், உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இம்மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம், நில மேம்பாட்டுத் திட்டம், இயந்திரச் சாகுபடித் திட்டம், தனியார் குழாய்க் கிணறு திட்டம், கிணற்றை வளப் படுத்தும் திட்டம், வறட்சிக்கு இலக் காகும் பகுதித் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு 1991-92-ஆம் ஆண்டிற்குத் தமிழக அரசு ரூ.60 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

இம்மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ.16 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 3,500 எக்டேர் நிலம் பயன்பெறும். இதனால் 2,783 விவசாயிகள் பயன்பெறுவார்கள். மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் இந்து ஆதிதிராவிடருக்காகச் செயல் படுத்தப்படும் சிறப்பு நலத்திட்டத் திற்கு ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் 66 எக்டேர் நிலம் பயன்பெறுவதோடு 72 இந்து ஆதிதிராவிட மக்கள் பயன்பெறுவார்கள்.

நிலமேம்பாட்டுத் திட்டத்தில் டிராக்டர் வாடகைத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு அரசு ரூபாய் 4.30 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் 90 எக்டேர் நிலப் பரப்பு பயன்பெறும். இயந்திரச் சாகுபடித் திட்டத்தின்கீழ் அரசு ரூபாய் 4.30 இலட்சம் நிதி ஒதுக்கி யுள்ளது. இதன்மூலம் 350 எக்டேர் நிலப்பரப்பு பயன்பெறும். தனியார் குழாய்க் கிணறுத் திட்டத்திற்கு ரூ.88 ஆயிரம் ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் 180 கிணறுகள் தோண் டப்படும். 269 எக்டேர் நிலம் பாசன வசதி பெறுகிறது. கிணறு களை வளப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.1.69 இலட்சம் ஒதுக்கப்பட்டுள் ளது. இதன்மூலம் 130 கிணறுகள் வளப்படுத்தப்படும். இதனால் 52 எக்டேர் நிலம் மேலும் பாசன வசதி பெறும் வாய்ப்புள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் அரசு ரூ.31 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் சமுதாயக் கிணறுகள் 9, தடுப்பணைகள் 111, கட்டப் படும். இதன்மூலம் சுமார் 4,300 பேர் பயன்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகமொத்தம் 1991-92-ஆம் ஆண்டிற்கு, பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள ரூ.60 இலட்சத்தின் மூலம் 5,529 விவசாயிகள் பயன் பெறுவதோடு, 675 எக்டேர் நிலம் வளப்படுத்தப்படும்.

## அவர்கள் சொன்னார்கள்

★ நாம் எவ்வளவு செய்யப் போகி றோம் என்பது முக்கியமல்ல; எவ் வாறு செய்யப் போகிறோம் என் பதே முக்கியம். அதிகமாகச் செய் வதைக் காட்டிலும், செய்வதைத் திருத்தமாகச் செய்வதே சிறப்பு.

—ரஸ்கின்

★ நிலத்திற்கு அழகு நெல்லும் கரும்பும். குளத்துக்கு அழகு தாமரை, பெண்ணுக்கு அழகு நாணம். ஒரு தனி மனிதனுக்கு அழகு அவன் செய்யும் நற்செயல்கள்.

—விளம்பி நாகனார்

# எய்ட்ஸ் நோய்'

## ஓர் அறிவுரை


டாக்டர் கே.எம். ராதாகிருஷ்ணன்
துணை இயக்குநர்
மருத்துவக் கல்வி இயக்ககம்


தனி மனித ஒழுக்கம் என்பது ஒரு சமுதாயத்திற்கு மிகவும் இன்றிய மையாதது என்பதை மக்கள் புரிந்து கொள்ளும் நேரம் வந்துவிட்டது. 'ஒரு மனிதனின் ஒழுக்கமற்ற வாழ்க்கை முறைகள் தவறு செய் யாத பல மனிதர்களை ஒரு பயங்கர மான நோயின் மூலம் தண்டிக்கின் றது என்ற உண்மை கண்டறியப் பட்டிருக்கும் இந்த நிலையில், அந்த ஒழுக்கமற்ற வாழ்க்கை முறைகளை அகற்றுவதன் மூலம் - இந்தச் சமு தாயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றதொரு தீவிர முடிவை நமது அரசு எடுத்துள்ளது. அது என்ன அப்படிப்பட்ட பயங்கரமான நோய்? அதுதான், 'எயிட்ஸ்' என்று எல் லாரையும் அச்சுறுத்தும் பயங்கர நோய்.

'எயிட்ஸ்' என்பது (Acquired Immuno Deficiency Syndrome) என் பதன் சுருக்கமாகும். முதன் முதலில் இந்த நோய் 1981-இல் அமெரிக்கா வில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில், 'ஒரு பாலருக் கிடையே' நிகழ்கின்ற உடலுறவால், சில ஆண்கள் பாதிக்கப்பட்டனர். உடல் மெலிந்து, நுரையீரல்கள் சில 'சந்தர்ப்பவாத ஒட்டுண்ணிகளால்' பாதிக்கப்பட்டன. புற்றுநோயும் இவர்களில் சிலருக்குக் காணப் பட்டது. சில ஆண்டுகளில் இத் தகைய நோய்களை குறித்து நடை பெற்ற தீவிர சோதனைகள், இன்று 'எயிட்ஸ்' நோயின் இரகசியங்களை இருளிலிருந்து வெளிச்சத்திற்குக் கொணர்ந்திருக்கின்றன.

### நோய் ஏற்படக் காரணங்கள்

'எயிட்ஸ்' நோய் ஏற்படுவதற்கு முக்கியமான காரணமாக விளங்கு வது HIVI என்னும் 'அதிநுண் ணியிரி'யாகும். மனித உடலின் தற் காப்புச் சக்தியைத் தணித்துவிடும் அதிநுண்ணியிரி என்பதுதான் இந்த எழுத்துக்களின் விளக்கம்.

### நோய் தாக்கும் முறை

நமது உடலின் போர் வீரர்கள் இரத்தத்தில் காணப்படும் வெள்ளை அணுக்கள் எனப்படும் W B C-க்கள். இந்த வெள்ளை அணுக்கள் பல வகைப்படும். அவற்றில் (Lymphocyte) லிம்போஸைட் என்பது உடற்பாது காப்புத் துறையின் மிக முக்கிய அதிகாரி. இது நோயைத் தாக்கு வதற்குப்பல வழிகளைக் கையாளு கிறது. தானே முன்னின்று நேரடித் தாக்குதல் ஒருவகை. பிற அணுக் களை ஊக்குவித்து அவற்றைத் 'தாக் கும் அணுக்களாக' மாற்றுவது ஒரு வகை. தாக்குதலுக்கு உதவியாகச் சில நேரங்களில் தன் வகை அணுக் களையே மாற்றி 'உதவியாளர் களாக'த் தயாராக வைத்திருத்தல் ஒரு வகை.

இப்படிப் பலவகைகள் இருந்த போதும், மேற்கூறிய 'உதவியாளர் களாகப் பணிபுரியும் அணுக்களை (Helper cell) அதிக அளவில் குறைத்து விடுவதுதான், எயிட்ஸ் நோய் வைரஸ் செய்யும் முக்கிய செயலாகும்.

### நோய் பரவும் முறை

உடல் உறவு (இருபாலர் உடல் உறவாக இருந்தாலும் சரி - ஒருபால் உடலுறவாக இருந்தாலும் சரி - ஒருவருக்கு இந்த நோய் இருந்தால் போதும் மற்றவருக்குள் நிச்சயமாக இது ஊடுருவி விடும்). 1%

சுத்திகரிக்கப்படாத ஊசிகள், ஊசிக்குழாய்களின் மூலம், இரத்தம் செலுத்துதல், இரத்தத்தின் பகுதி களைச் செலுத்துவதன் மூலமாக 90%

பாதிக்கப்பட்ட தாயின் மூலம், அவள் தாங்கும் சிசுவுக்குள் 20-30%.

மேற்கூறிய முறைகளால் நிச்சய மாகப் பரவக்கூடிய எயிட்ஸ் நோய், சில பழக்கங்களை மேற்கொண்டவர் களைத் 'தாக்கும் அபாய' விளிம்பில் நிற்க வைக்கிறது. அவர்கள் -

1. இருபாலர் உறவு மூலம்
- விலை மாதர்கள்

- பால் வினை நோய்க்காக மருத்துவ மனைக்குச் செல்பவர்கள்.
- ஆண்களின் அழைப்பின் பேரில் செல்லும் பெண்கள்.
- அலிகள்.

2. போதைப் பொருள் உபயோ கிப்போர் - முக்கியமாக 'இரத்தக் குழாயுள் நேரடியாக மருந்தைச் செலுத்திக் கொள்ளும் போதை அடிமைகள்.

3. பணத்திற்காக 'இரத்ததானம்' அளிக்கும் பழக்கம் கொண்டவர்கள்.

4. இரத்தமும் அதன் பல்வேறு பகுதிகளும் (அதாவது பெறுப வர்கள்).
- இரத்தம் உறையா நோய் கொண்ட வர்கள்.
- கர்ப்பிணிப் பெண்கள்.

### நோயின் அறிகுறிகள்

மிக விரைவாகவும், முதலிலும் பாதிககப்படுவது...

1. நிணநீர்க் கழலைகள், பெரிதாகு தல் கழுத்தின் பின்புறத்தில்...
காதுக்குப் பின்புறம்
கழுத்து எலும்புக்கு மேற்புறம்

## தொழுநோய் ஒழிப்புக்கு ரூபாய் 282 கோடி

**நம் நாட்டில் தொழுநோயை ஒழிப்பதற்காக வங்கி நிதி உதவியுடனான ரூ. 282.95 கோடி திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, அடுத்த ஐந்தாண்டு களில் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படும். கேரளம் உட்பட ஏழு மாநிலங்களில் உள்ள 143 மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது.**

**சென்ற ஆண்டு மார்க் 30ஆம் தேதி நிலவரப்படி, நாட்டில் 25.6 லட்சம் தொழு நோயாளிகள் இருப்பதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 21.4 லட்சம் பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சென்ற நிதியாண்டில் புதிதாக 1,81,971 தொழு நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, 1,30,419 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.**

—நன்றி திட்டம்,

இரண்டு அக்குள்களில்
முழங்கை அருகில்
தொடை இடுக்குகளில்
முழங்காலுக்குப் பின்புறம்

2. தொடர் காய்ச்சல்

3. காரணம் சொல்ல முடியாத பலவீனம்

4. இரவில் வேர்த்து விடுதல்

5. எடை குறைதல்

6. பேதியாதல்

நிண நீர்க்கழலைகள் உருப்பெருகுதல் மிக முக்கியமானதொரு அறிகுறியாகும். இந்த நிலை வந்தவர்களில் 30 சதவிகிதத்தினர் நிச்சயமாக 'எயிட்ஸ்' நோயினால் தாக்கப்பட்டு விடுகின்றனர். இவர்கள் நாளடைவில் உருக்குலைந்து நோய் எதிர்ப்புச் சக்தியின்றி இறந்து விடுகின்றனர். நோய்க்கிருமி உடலினுள் புகுந்து சில மாற்றங்களை ஏற்படுத்தினாலும் சிலர் நோய்த் தாக்குதலுக்கு ஆளாகாமல் ஆரோக்கியமானவர் போலக் காணப்படுவார். ஆனால் அடுத்தவர்களுக்கு இந்த நோயைப் பரப்பக்கூடிய அளவு தன் உடலினுள் நோய்க் கிருமிகளைச் சுமந்து திரிவார் (Carrier).

**நோய் வராமல் தடுப்பது எவ்வாறு?**

உடலின் 'நோய்த்தடுப்புச் சக்தியை'த் தாக்குவதன் மூலம் நோயை ஏற்படுத்தும் இந்த அதிநுண்ணுயிரிகளை உடனே அழிப்பது அத்தனை சுலபமல்ல, அதனால், உடலின் தடுப்புச் சக்தி'யை அதிகரிப்பதுதான் இந்த நோயின் மிக முக்கியமான சிகிச்சை. ஆனால் நோயின் தீவிரம் சிகிச்சையின் தீவிரத்தை முறியடித்து விடும் என்பது மருத்துவர்கள் அனுபவத்தில் கண்ட உண்மை. மேலும் நோய்க் கண்டவர்கள் பிறர்க்குப் பரப்பும் நிலையில் இருப்பவர்களாக இருப்பின் மனித குலத்திற்கு இது ஒரு அபாயம். அதனால், 'எயிட்ஸ்' வந்து குணப்படுத்துவதை விட வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்பதை இன்று அரசு வலியுறுத்துகிறது.

**தடுப்பு முறைகள்**

'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நமது இந்தியக் கலாச்சாரத்தை மக்கள் உணர வேண்டும். 'ஒழுக்கம்' என்பது மனித குலத்தின் விலை மதிப்பில்லாச் சொத்து. 'மனைவி' அல்லாத மற்ற பெண்களுடன் உறவு கொள்ளும் பழக்கத்தை ஆண்கள் அறவே விட்டுவிடுவது அவர்களுக்கு நல்லது. அதுவும் விலைமாதர்களிடம் செல்லும் பழக்கமுடையவர்கள் நிச்சயமாக எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். பிரயாணம் மேற்கொள்ளுபவர்கள், நீண்ட தூரம் வண்டி ஓட்டிக்கொண்டு வருபவர்கள், ஆகியோர் சில ஊர்களில் சில குறிப்பிட்ட பெண்களைச் சந்தித்து உறவு கொள்ளுவார்கள். இத்தகையோர் 'நிரோத்' போன்ற சாதனங்களைப் பயன்படுத்துவதால் ஒரு உறுப்பிலிருந்து மற்றொரு உறுப்புக்குள் (ஒரு வேளை எயிட்ஸ் நோய்க்கிருமி அந்த ஆண் உடலிலோ அல்லது பெண் உடலிலோ இருந்தால்) நோய்க்கிருமி செலுத்துப்படுவதைத் தவிர்க்க முடிகிறது. இந்த முறை, மற்ற நோய்களும் பரவாமல் தடுக்கிறது.

2. முறையற்ற உடறவுகளை முடிந்தவரை தடுப்பது நலம். (ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் போன்றவை).

3. ஊசிகளின் மூலம் பரவுதலைத் தடுக்கச் சிறந்த வழி. 'ஒரு முறை பயன்பட்டு எறிந்துவிடக் கூடிய' (Disposable) சிரிஞ்ச் - ஊசியைப் பயன்படுத்தும் முறையாகும். ஒரு முறை பயன்படுத்தி - அந்த சிரிஞ்ச்-ஊசிஇரண்டையும் மீண்டும் கொதிக்க வைத்து வேறு நோயாளிகளுக்குப் பயன்படுத்துவது முந்தைய பழக்கம். ஆனால் இன்று காலம் மாறிவிட்டது கடைகளில் 'பக்குவப்படுத்தப்பட்ட சிரிஞ்சும், ஊசியும் 'பாலிதின் பைகளினுள் பொதியப்பட்டுக் கிடைக்கின்றன. எனவே, மருத்துவர்கள் ஊசிபோடும் போது 'ஒரு முறை பயன்பட்டு எறியப்படும் ஊசியைப் பயன்படுத்தாதீர்கள் என்று நோயாளிகள் கேட்பதில் தவறில்லை.

4. இரத்தம் செலுத்தப்படும் இரத்த வங்கிகளில், 'சேகரித்து வைக்கப்பட்ட இரத்தத்தில் எயிட்ஸ் நோய்க்கிருமி உள்ளதா' என்று சோதனை செய்த பிறகுதான் அதைச் செலுத்துகிறார்கள். இது மிக நல்ல முறை. இரத்தம் பெறுபவர்கள் இந்தத் தகவலைக் கேட்டுத் தெரிந்து கொள்வதிலும் தவறில்லை.

சமுதாயத்தின் நலம், அதன் உறுப்பினராகிய தனி மனிதனின் நலத்தில்தான் அடங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது. உடலைச் சிறிது சிறிதாக அழித்து விடக்கூடிய 'எயிட்ஸ்' நோய் பரவாமல் பார்த்துக் கொள்ளுவது நாட்டின் நலம் நாடும் ஒவ்வொருவரின் கடமையாகும். ●



# நூல் நயம்

### மனக்கதவுகள்

**தொகுப்பாசிரியர்கள்:**

**ஸ்வீட்லின், பிரியா**

**வெளியிட்டோர்:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பூங்கா நகர், சென்னை-600 003.

பக்கம்:186 விலை:ரூ.30/-

இருபத்திரண்டு சிறுகதைகளை ஏந்தி வந்திருக்கும் இந்தத் தொகுப்பு சமுதாயத்திற்கு நீதி போதனைகளை ஓதி உரைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மனித நேயம், கருணை நெஞ்சம், வாழ்க்கை முறை, பிறர்க்குதவும் பெரும் நோக்கு, நற்பாதையிலிருந்து விலகாத நெஞ்சுரம், இவை போன்ற தூய பண்புகளை வலியுறுத்துகின்றன இந்தச் சிறுகதைகள். விதவை மணத்தை வாழ்த்தி வரவேற்கும் வீரவரலாற்றுக் கதைகளும் இத்தொகுப்பில் ஒளி வீசுகின்றன.

டமார், டுமார் நடை இல்லாமல் அனைத்துக் கதைகளும் ஆற்றொழுக்கு நடையில் இதயத்தைத் தொடும் வகையில் படைக்கப்பட்டுள்ளன. கருத்துச் செறிவில் ஒன்றை ஒன்று போட்டியிடுகின்றது. குறிப்பாக 'ஒட்டல் சாப்பாடு' என்னும் சிறுகதை உள்ளுறை உவமம் செறிந்த சங்க இலக்கியத்தின் தரத்தை எட்டியிருக்கிறது என்று கூறலாம்.

—தமிழ்ப்பித்தன்

### பல்லவ பவனி

**ஆசிரியர்: மு. குப்புசாமி**

**வெளியிட்டோர்:**

ஜெயசக்தி பதிப்பகம்,
45-ஏ, பம்மல் நெடுஞ்சாலை,
பம்மல், சென்னை-600 075.

பக்கம்:224 விலை:ரூ.26/-

சுற்றுலாத்தலம் என்பது வெறும் பொழுதுபோக்குக்கு மட்டுமல்ல, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமையும் புனிதமான தலங்களும் ஆகும்.

பண்டைய பெருமை, வரலாற்றுச் சிறப்பு, தற்கால நிலைமை முதலான பல செய்திகளை அறிந்து கொள்வதற்குச் சுற்றுலாத் தலமும், சுற்றுலாப் பயணமும் நமக்கு உதவுகிறது. அந்த வகையில், இந்த நூலில் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள பத்து ஊர்கள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

சென்னை, முத்துக்காடு, திருப்பெரும்புதூர், திருத்தணி, வேடந்தாங்கல், மாமல்லபுரம், திருக்கழுக் குன்றம், உத்திரமேரூர், காஞ்சிபுரம் ஆகிய திருத்தலங்களோடு, வி.ஜி.பி. தங்கக் கடற்கரை பற்றிய செய்திகளும் உள்ளன. சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டுமல்ல, பொதுவாக எல்லோருமே படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள நூல்.

—பி.வி.கிரி

### வண்ணப் பூங்கொத்து

**ஆசிரியர்: கவிஞர் அழகுக் கண்ணன்**

**வெளியிட்டோர்:**

ஆனந்தகுமரன் வெளியீட்டகம்,
மனை எண்:960, அண்ணாநகர் மேற்கு
விரிவாக்கம், சென்னை-600 101.

பக்கம்:148 விலை:ரூ.15/-

இலக்கணம் கெடாத மரபுக் கவிதைகள், இசை நயம்மிக்க சந்தப் பாடல்கள் ஆகியவற்றின் தொகுப்பு நூல் இது. பதினைந்து தலைப்புகளிலான பிரிவுகளில் ஏராளமான கவிதைகள் அணிவகுத்துள்ளன.

எளிய சொற்களால் உருவாக்கப்பட்டிருக்கும் பெரும்பாலான கவிதைகளில் நல வாழ்வுக்கான அறிவுரைகள் பொதிந்துள்ளன.

துணைவியாருக்குக் காணிக்கையாக ஆசிரியரால் படைக்கப்பட்டுள்ள இந்த நூலில்- 'மாமியார் புலம்பல்', 'மருமகள் முறையீடு', 'இணையில்லாப் பாட்டி', 'எங்கள் வீட்டு ஆயா' எல்லாம் கூட உண்டு. படித்து மகிழலாம்.

—'இந்திரன்'

### பாண்டிச்சேரி மாநிலச் சுற்றுலாத் தலங்கள்

**ஆசிரியர்: அ. ராம்கோபால்,**

**வெளியிட்டோர்:**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட், 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:48 விலை:ரூ.8/-

தமிழருக்கான மத்திய ஆட்சிப் பிரதேசம் தமிழ்நாடு மட்டுமல்ல; புதுவை மாநிலமும்தான். இந்தச் சிறப்புடைய அந்த மாநிலம், பிரஞ்சுக் காலனியாக இருந்த காலத்தில் பெற்றிருந்த பெருமை குறிப்பிடத்தக்கதாகும். இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் சிலர், ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கெடுபிடியிலிருந்து தப்பிச் சென்று புதுவையைச் சரணாலயமாக்கிக் கொண்டார்கள்.

அந்தச் சிறப்புமிக்க மாநிலம் மிகச் சிறிய அளவினதே என்றாலும், அங்கே நாம் பார்த்து மகிழத்தக்க இடங்கள் பல உண்டு.

என்னவெல்லாம் பார்க்கலாம்- எப்படியெல்லாம் செல்லலாம்- எங்கெல்லாம் தங்கலாம் என விவரிக்கும் நூல் இது. பயண நூல் ஆர்வலர்கள் படித்துக் களிக்கலாம்.

—'ராஜு'

### நீயும் நானும்... நானும் நீயும்...

**ஆசிரியர்: ஹம்ஸா தனகோபால்**

**வெளியீடு:**

தேன்மழைப் பதிப்பகம்
34, கொத்தவால் தெரு,
ஆலந்தூர், சென்னை-600 016.

பக்கம்:88 விலை:ரூ.11/-

ஒரே தலைப்பைக் கொண்ட நீண்ட உரைக் கவிதை

கவிஞர், 'நீ' என்று அழைக்கும் 'அவன்' வரவை எண்ணிக் காத்திருக்கும் போது ஏற்படும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளே இவ்வுரைக் கவிதை. கோபம், தாபம், வெறுப்பு, விருப்பு என்று அத்தனை உணர்வுகளையும் 'அவன்' மீது அள்ளி வீசி இருக்கும் புதுமை, ஆரம்பித்ததும் முடித்துவிட்டுத்தான் வைக்கத் தோன்றும் துரித நடை. நல்ல உரைக் கவிதை நூல்.

—என். குமாரசாமி


வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்
VIJAY
COMPLEX
N P K
19-19-19
MADRAS FERTILIZERS LTD.
VIJAY
COMPLEX
N P K
17-17-17
MADRAS FERTILIZERS LTD.
VIJAY
विजय
UREA-N46%
MADRAS FERTILIZERS LTD.
VIJAY
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068
தேசிய பொருளாதாரத்தின்
மூலாதாரம், பொதுத்துறை...
அதன் வலிமையைப் பெருக்குவோம்.
HTA 7343



# வெண்மைப்புரட்சியில்

# பால் வளத்துறை

குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவருக்கும் பால் ஓர் இன்றியமையாத உணவுப் பொருள். இது அனைத்துப் பிரிவு மக்களுக்கும் அன்றாடம் அவசியமாகத் தேவைப் படும் பொருள். எனவே, மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் நல்ல தரமான பாலை, சரியான அளவுகளில், நியாயமான குறைந்த விலையில் பொதுமக்களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் வழங்குவதில், தமிழக அரசும், பால்வளத் துறையும், பால்வளத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் 8,492 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து மக்களுக்குச் சேவை செய்து வருகின்றன.

1958-ஆம் ஆண்டில் சென்னை நகரில் அனைத்துப் பிரிவு மக்களுக்கு நியாயமான விலையில் பால் கிடைக்கச் செய்யும் பொருட்டும், பால் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் சென்னையை அடுத்த மாதவரத்தில் சுமார் 850 ஏக்கர் நிலப்பரப்பில் அரசின் பால் பண்ணையும் நவீன பால் பதப்படுத்தும் தொழிற்சாலையும் அரசால் நேரிடையாகத் தொடங்கி வைக்கப் பட்டது. அதைத் தொடர்ந்து 1967-ஆம் ஆண்டில் மதுரையில் பால் பண்ணை அமைக்கப்பட்டது. இவ்வாறு தொடங்கப்பட்ட பால் பண்ணைத் திட்டம், படிப்படியாக வளர்ச்சி பெற்று, இன்று இந்தியா விலேயே பால் வளத்தில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

★ மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் பாலை, அனைத்துப் பிரிவு மக்களுக்கும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கச் செய்வது.

**நிர்மல்சிங், இ.ஆ.ப.,**
**ஆணையர்,**
**பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை**
**சென்னை.**

★ விநியோகம் செய்யப்படும் பால், மிகவும் தரமானதாக சாதாரணப் பொதுமக்களும் வாங்கிப் பயன்படுத் தக்கூடிய குறைந்த விலையில், அளவும், தரமும் குறைவுபடாமல், தட்டுப்பாடு இல்லாமல், ஒழுங்கான சீரிய முறைகளை வகுத்து விநியோகம் செய்வது. — இத்துறையின் குறிக்கோள்கள்.

**தமிழ்நாட்டில், 8,492 ஆரம்பப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமங்களைத் தலைமையிட மாகக் கொண்டு இயங்கி வருகின்றன.**

**தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் நாள்தோறும் 13 இலட்சம் லிட்டர்கள் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது குஜராத் மாநிலத்தில் செயல் படுவதைப்போல், தமிழ்நாட்டிலும் மூன்று பால் பெருக்கத் திட்டங்களைச் செயல் படுத்தி, பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையப்பட்டுள்ளது.**

★ மக்களின் தேவைக்கு ஏற்ப, பாலை உற்பத்தி செய்யத் திட்டமிடுவது.

★ நவீன விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடித்து, தரமான கறவை மாடுகளைப் பராமரிக்கச் செய்து பால் உற்பத்தியைப் பெருக்க வழி வகை செய்வது.

★ உற்பத்தியாகும் பாலை நவீன விஞ்ஞானத் தொழில்நுட்பச் சாதனங்களைக் கொண்டு பக்குவப்படுத்தி பாலின் தரம் குறைவு[illegible]ாமல் பாதுகாத்து, ஒழுங்கான முறையில் விநியோகம் செய்வது.

★ முன்னேற்றமான நிர்வாகத் தொழில்நுட்பம், உன்னதமான வியாபார நிர்வாகம் மூலம். (Advanced Management Technics and Business Administration) உற்பத்தியாளர்களுக்கு நல்ல பலனும், நல்ல விலையும் இதரப் பயன்களும் கிடைக்கச் செய்வது.

இந்த உன்னதமான குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு, அவற்றைச் செயல்படுத்தி மக்களுக்கு அரும்பணியாற்றி வருகிறது பால் வளத்துறை.

தமிழ்நாட்டில் 8,492 ஆரம்பப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இவற்றில் விவசாயிகளும் ஏனைய பிரிவினரும், ஆதிதிராவிடப் பிரிவினரும், குறிப்பாகப் பெண்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த உறுப்பினர்கள் தினமும் காலையிலும், மாலையிலும், தரும் பாலை நவீன மின்னணுப் பால் சோதனை மூலம் (Electronic Milk Tester) பாலின் தரத்தைச் சோதனை செய்து, அதன் அடிப்படையில் பால் உற்பத்தியாளர்கள் தரும் பாலின் தரத்திற்குத் தக்கவாறு விலையை நிர்ணயம் செய்து கொடுப்பதால் பால் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கின்றது.



சங்கம் உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யும் பாலை உள்ளூர் தேவைக்கு விற்பனை செய்தது போக மீதி உள்ள மாவட்டப் பாலை உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், மாவட்டத்தில் பல இடங்களில் நிறுவியுள்ள பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கிறது. அரசு நிர்ணயம் செய்த விலையில் பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் தரத்தின் அடிப்படையில், சங்கங்கள் கொள்முதல் விலை கொடுப்பதால் உறுப்பினர்கள் தங்கள் பாலுக்கு நல்ல விலையைப் பெற்றுப் பயனடைகிறார்கள். இதனால் தமிழ்நாடு முழுவதும் பாலுக்கு ஒரே மாதிரியான விலை நிர்ணயம் செய்யப்பட்டு, நல்ல விலை கிடைக்க ஆவன செய்யப்பட்டு உள்ளது.

பால் பெருக்குத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு கூட்டுறவுச் சங்கங்களும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், தரமான உயர்ந்த இன கறவை மாடுகளை வாங்குவதற்கு, தாராளமாகக் கடன் வசதி செய்து கொடுக்க முன்வந்துள்ளன. மாடு ஒன்றுக்கு, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள விவசாயக் கூலிகள் மற்றும் இதர பிரிவினருக்கு ரூ.3,200 வரை கடன் கொடுத்து உதவி செய்கின்றன. இவ்வாறு வழங்கப்படும் கடன்களை எளிமையான தவணை முறையில் பால் பணத்திலிருந்து பிடித்தம் செய்வதன் மூலம் உறுப்பினர்களுக்கு எவ்விதமான சிரமமும் இல்லாத வகையில் வசூல் செய்யப்படுகிறது. ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கும், ஆதிதிராவிடராக இருந்து கிருஸ்தவர்களாக மாறிய உறுப்பினர்களுக்கும் கறவை மாட்டுக் கடனில் 50 சதவிகிதம் அதாவது ரூ.1,600 அரசு மானியம் வழங்கப்படுகின்றது. இவ்வாறு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் முழுவதும் ஈட்டுறுதி செய்யப்பட்ட கடன்கள் ஆகும். கடன் வாங்கிய காலத்தில் கறவை மாடுகள் நோய் வாய்ப்பட்டு இறந்து போனாலோ அல்லது எதிர்பாராத விபத்துக்களில் சிக்கிக் கால்நடை இறந்து போனாலோ, உறுப்பினர்களின் நிலுவைக் கடன் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

தகுதி வாய்ந்த கால்நடை மருத்துவர்கள் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சென்று கறவை மாடுகளைச் சோதித்து சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்கு இலவச மருத்துவ வசதி செய்துகொடுக்கிறது. சங்கத்தில் பணிபுரியும் செயலாளர்களுக்கு மாடுகளின் நோய்களுக்கு முதலுதவி அளிப்பதற்கும் செயற்கை முறையில் கருத்தரிக்கச் சினை ஊசிபோடப் பயிற்சியும் அளிக்கப்பட்டு உள்ளது. கறவை மாடுகளுக்குத் தேவையான அனைத்து வகை மருந்துப் பொருட்களும் இலவசமாகக் கிடைத்திடச் சங்கம் ஆவன செய்துவருகிறது.

பால் வற்றிய கால் நடைகளுக்குச் செயற்கை முறைக் கருவூட்டல் செய்வதற்கும், உறை விந்துக் குடுவைகள், மற்றும் தேவையான கருவிகள் வாங்குவதற்கும் தகுதி வாய்ந்த மருத்துவர்களைக் கொண்டு செயற்கை முறைக் கருவூட்டல் செய்யவும் சங்கங்கள் ஆவன செய்கின்றன.

கறவை இனங்களுக்கு அதிக அளவில் பால் கொடுக்கக்கூடிய ஊட்டச் சக்தி மிக்க கால்நடைத் தீவனங்களைத் தருவித்துக் கொடுப்பதற்கும், நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் பசும்புல் வளர்த்து உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்வதிலும் சங்கங்கள் செயலாற்றி வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டிலும் சங்கம், உறுப்பினர்களின் பங்குத்தொகைக்கு இலாப ஈவு வழங்குவதுடன், சங்கத்தில் கிடைக்கும் அதிகப்படியான வருவாயிலிருந்து அங்கத்தினர்கள்

# முதல் மகளிர் வங்கி

சுதந்திரத் திருநாளன்று மகாராஷ்டிர மாநிலத்தில் பம்பாயில் மகளிரால், மகளிருக்காக நடத்தப்படும் மகளிர் கூட்டுறவு வங்கி தொடங்கப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே முதல் மகளிர் வங்கியாகும். முன்னாள் முதல்வர் திரு. பாபாசாகிப் போஷ்லேயின் மகள் திருமதி சரோஜ் போஷ்லே இதன் தலைவராவார். மகளிர் நலம் பேணும்நோக்கில் இவ்வங்கி செயல்படும். முற்றிலும் பெண்களே பணிபுரியும் இவ்வங்கியின் பெயர், 'பிரியதர்ஷினி மகளிர் கூட்டுறவு வங்கி' என்பதாகும்.

ஆண்டு முழுவதும் சங்கத்திற்கு வழங்கிய பால் அளவின் அடிப் படையில், உறுப்பினர்களுக்கே மீண்டும் கூடுதல் விலை ஆதரவு கழிவுத் தொகை (Patrnage Rebate) கொடுத்து உறுப்பினர்களை ஊக்கப் படுத்தி அவர்தம் நலன்களைப் பாது காத்து வருகின்றன.

இவ்வாறு பல வகைகளிலும், பால் உற்பத்தியாளர்களின் நலன் களையும், கறவை இனங்களின் தரத்தை உயர்த்துவதில் அதிக அக் கறை உணர்வுடன் பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் கவனித்து வருவதால், கிராம மக் களின் பொருளாதார மேம் பாட்டிற்குப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஆற்றும் பணி போற்றத் தக்கதாகும்.

இவ்வாறு ஆரம்பப் பால் உற் பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங் களின் மூலம் உற்பத்தி செய்யப் படும் பாலில், உள்ளூர் விற்பனை போக, பெரும் அளவு பால், ஒவ் வொரு மாவட்டத் தலைநகரிலும் செயல்படும் மாவட்டப் பால் உற் பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் மாவட்டத்தின் பல இடங்களில் நிறுவியுள்ள தங்கள் சங்கத்திற்கு அருகாமையிலுள்ள குளிரூட்டும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன. இவ்வகையில் குளி ரூட்டும் நிலையங்களில் சேகரிக்கப் படும் பால் பதப்படுத்தப்பட்டு மாவட்டத் தலைநகரில் உள்ள ஒன்றியங்களுக்கு வருகின்றன.

தமிழ்நாடு முழுவதிலும் 17 மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் மதுரை, பெரியார், சேலம், தருமபுரி மாவட் டங்களிலுள்ள ஒன்றியங்கள் பாலைப் பக்குவப்படுத்துவதோடு, வெண்ணை, நெய், பால் பவுடர் ஆகிய துணைப் பொருட்களையும் தயாரிக்கும் வசதி மிகுந்த பெரிய பால் பண்ணை களாகும் (Feeder balancing Dairy) ஒவ்வொரு ஒன்றியத்திலும் அந்த மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களாக உள்ளன. ஒன்றியம் உறுப்பினர் சங்கங்களிடமிருந்து பாலை தினமும் காலையிலும், மாலையிலும் சேகரித்துக் கொண்டு வந்து, குளிரூட்டும் நிலையங்கள் மூலம் குளிர்வித்துப் பதப்படுத்தி தலைமைப் பால் பதனத் தொழிற் சாலைக்குக் கொண்டு வந்து, பாலைப் பதப்படுத்தி மொத்தமாக வும் அரை லிட்டர், ஒரு லிட்டர் கொள்ளளவுள்ள பாலித்தீன் பைகளில் நிரப்பி மக்களுக்குச் சில்லரையாகவும் விற்பனை செய் கின்றது. மாவட்டப் பால் பண்ணை களின் தேவைக்கு அதிகமான பால், மாநிலத் தலைநகரான சென்னைக்கு அனுப்பி, ஆவின் நிறுவனம் மூலம் விற்கப்படுகின்றது. மீதியுள்ள பாலை, துணைப் பொருட்களாகத் தயாரித்துப் பொதுமக்களுக்கு நேரடி யாகவும், சென்னையிலுள்ள தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையம் எனப்படும் ஆவின்நிறுவனம்மூலமும் விநியோகம் செய்கிறது.

சென்னை மற்றும் அதனைச் சுற்றி உள்ள புறநகர்ப் பகுதிகளிலும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 397 விற்பனை நிலையங்கள் மூலமும் மற்றும் 31 பால் நுகர்வோர் கூட்டுற வுச் சங்கங்கள்மூலமும்,காலையிலும் மாலையிலும் சேர்ந்து தினசரி 6.59 இலட்சம் லிட்டர்கள் பால் விநி யோகம் செய்யப்படுகிறது. நிலைப் படுத்தப்பட்ட பால் (Standardised Milk) லிட்டர் ஒன்றுக்கு 5.00-க்கும் சுவையூட்டிய பால் (Toned Milk) ரூ.4.90-க்கும் பொதுமக்களக்கு வழங்கப்படுகிறது. மேலை நாடு களில் உள்ளதைப்போல் சென்னை நகரில் 150 தானியங்கிப் பால் விற்பனை நிலையங்களின் மூலமும் பைபர் பிளாஸ்டிக் டாங்கிகள் மூலமும் சுகாதார முறையில் தர மான பால் மக்களுக்கு வழங்கப் பட்டு வருவது, ஆவினின் மக்கள் சேவையில் ஒரு பகுதியாகும்.

பால் விநியோகம் செய்வதோடு மட்டும் அல்லாமல் பால் துணைப் பொருட்களான, வெண்ணெய், நெய், பால் பவுடர், கோவா, ஐஸ் கிரீம், நறுமணப் பால், பாலாடைக் கட்டி ஆகிய உப பொருட்களையும் தயாரித்து நியாய்மான விலையில் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வகையான பால் பொருட் களுக்குப் பொதுமக்களிடையே பெரிதும் வரவேற்புள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

1958-இல் மாதவரத்தில் முதலா வது பால் பண்ணை ஆரம்பித்த போது ஒரு சில நூறு லிட்டர் பால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் தினசரி 13 இலட்சம் லிட்டர்கள் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வாறு மக்கள் தொகை வளர்ச் சிக்கு ஏற்ப, மக்களின் தேவைக்கு ஏற்பத் திட்டங்களைத் தயார் செய்து அவைகளைச் செயல்படுத்துவதிலும் பால்வளத்துறையும், ஆவின் நிறு வனமும் மிகுந்த முன்னோட்டத் துடன் செயல்பட்டு வருகின்றன. குஜராத் மாநிலத்தில் செயல்படு வதைப்போல், தமிழ்நாட்டிலும் மூன்று பால் பெருக்குத் திட்டங்களைச் செயல்படுத்தி பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையப்பட்டு உள்ளது. தற்பொழுது மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தின்மூலம் ரூ.69 கோடி அளவிற்குத் திட்டப்பணி களைச் செயலாக்கத் திட்டமிடப் பட்டு உள்ளது. இந்த மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தில் கீழ்க் கண்ட திட்டப்பணிகள் செயல்படுத் தத் திட்டமிடப்பட்டுச் செயலாக்கப் பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

1. சென்னை அடையாறு பகுதி யில், சோளிங்கநல்லூரில் தினசரி நான்கு இலட்சம் லிட்டர் பால் பதனப்படுத்த வசதிமிக்க புதிய பால் பதனத் தொழிற்சாலை நிறுவத் திட்டமிட்டு கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன.

# இலவசத் தொழிற்கல்வித் திட்டம்

சட்டமன்றப் பேரவையில் 18.9.91 அன்று பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப் பட்டோர் நல மானியக் கோரிக்கை விவாதத் திற்குப் பதிலளித்துப் பேசும்போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், சட்டம் ஆகிய தொழிற் கல்லூரிகளில் படிக்கும் பிற்படுத் தப்பட்ட மாணவ மாணவியருக்குப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, கல்விக் கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் கட்டாயமாகச் செலுத்தத்தக்க ஏனைய கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து இனி விலக்கு அளிக்கப்படும் என அறிவித்தார்.

1. பெற்றோரின்/பாதுகாப்பாளரின் ஆண்டு வருமானம் ரூ.12 ஆயிரத்திற்கு மேற்படக்கூடாது.

2. இதுவரையில் பட்டதாரி எவரும் இல்லாத ஒரு குடும்பத்தைச் சார்ந்தவராக அம்மாணவ, மாணவியர் இருக்கவேண்டும்.

அவ்வறிவிப்பிற்கேற்ப, பிற்படுத்தப்பட்ட வகுப் பைச் சார்ந்த மாணவ மாணவியருக்குத் தொழிற் கல்வி வரை இலவசக் கல்வி வழங்குவதற்குரிய அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இலவசக் கல்வித் திட்டம், சுய நிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடுகளின் கீழ் அனுமதிக் கப்பட்டு, பயின்று வரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் பொருந்தும். அவர்களுக்குத் தொழிற்கல்வி இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் சட்டக் கல்வி இயக்குநர் ஆகி யோர் அரசு கல்லூரிகளுக்கு நிர்ணயித்த கட் டணங்கள்படி விலக்கு அளிக்கப்படும்.

பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கான இந்த இலவசத் தொழில் கல்வித் திட்டம் 1991-92-ஆம் கல்வி ஆண்டிலிருந்தே அமலுக்கு வருகிறது.

2. திருச்சி மாவட்டத்தில் தினசரி 1.50 இலட்சம் லிட்டர் பாலைக் குளிர்விக்க குளிர்ப் பதன இயந் திரங்கள் நிறுவப்பட உள்ளன.

3. விழுப்புரம் பால் பண்ணை யில் தினசரி ஒரு இலட்சம் லிட்டர் பாலைக் குளிர்ப்படுத்த குளிர்ப் பதன இயந்திரங்கள் நிறுவப்பட உள்ளன.

4. சென்னை அம்பத்தூரில், தற்பொழுது தினசரி மூன்று இலட்சம் லிட்டரில் திறனிலிருந்து நான்கு இலட்சம் லிட்டர் அளவுக்குத் திறன் கொண்ட பால் பக்குவப்படுத்த தொழிற்சாலை விரிவாக்கப்பட் உள்ளது.

5. இவை தவிர, தமிழகத்தின் தென் மாவட்டங்களில் உள்ள கீழ்க் கண்ட பால்பதன ஆலைகள் விரிவு படுத்தத் திட்டமிடப்பட்டுத் திட்டப் பணிகள் செயலாக்கப்பட்டு வரப் படுகின்றன.

**மதுரை:** நாள் ஒன்றுக்குப் பால் பதனப்படுத்தும் திறன் 1.5 இலட்சம் லிட்டரில் இருந்து 2 இலட்சம் லிட்டர்கள்.

**சேலம்:** நாள் ஒன்றுக்குப் பால் பதனப்படுத்தும் திறன் 2 இலட்சம் லிட்டரில் இருந்து 3 இலட்சம் லிட்டர்கள்.

**கோவை:** நாள் ஒன்றுக்குப் பால் பதனத்திறன் 1 இலட்சம் லிட்டரில் இருந்து 2 இலட்சம் லிட்டர்கள்.

**கிருஷ்ணகிரி:** நாள் ஒன்றுக்குப் பால் பதனத்திறன் 1 இலட்சம் லிட்டரில் இருந்து 1.50 இலட்சம் லிட்டர்கள். இவை தவிர மதுரை மாவட்டம் தேனி, திருச்சி மாவட்டம் பெரம்பலூர், கரூர், சேலம் மாவட்டம் நாமக்கல், குடக்கல் ஆகிய இடங் களில் புதியதாகப் பால் குளிரூட்டு நிலையங்கள் (Chilling Center) அமைக்கப்பட உள்ளன.

பால் உற்பத்தி செய்யும் உறுப் பினர்களின் கறவை மாடுகளுக்குப் போதுமான அளவு ஊட்டச்சத்து மிக்க கால்நடைத் தீவனம் கிடைப்ப தற்காக, கப்பலூரில் நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக்டன் அளவு உற்பத்தித் திறன் கொண்ட கால்நடைத் தீவனத் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவப் பட உள்ளது. பெரியார் மாவட்டம் ஈரோட்டில் 30 மெட்ரிக் டன் உற் பத்தித்திறன் கொண்ட பால் பவுடர் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப் பட உள்ளது.

இத்திட்டத்தின் குறிக்கோள் நாள் ஒன்றுக்குப் பால் பதப்படுத் தும் கொள்திறனைத் தற்போதுள்ள 11.00 இலட்சம் லிட்டரில் இருந்து 21.30 இலட்சம் லிட்டராக உயர்த் துவதாகும். அவ்வாறே பால் கொள் முதல் மற்றும் விற்பனையின் அள வும் நாள் ஒன்றுக்கு 13 இலட்சம் லிட்டரில் இருந்து 18 இலட்சம் லிட்ட ராக அதிகரிக்கச் செய்யவும் திட்டக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட உள்ளதால், தமிழ்நாட்டில் அடுத்த பத்து ஆண்டு களுக்குப் பால் தட்டுப்பாடு ஏற் படாது என்று பொதுமக்கள் உறுதி யாகவும் திடமாகவும் நம்பலாம். ●

இராமநாதபுரம் மாவட்டத்தில்

# தொழில் வளர்ச்சி

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையம் 1986-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. தொழில் வளர்ச்சியை மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் விரிவாக்கும் நோக்கத்துடன், அனைத்துப் பணிகளையும் ஒரு குடையின் கீழ் வழங்கும் அமைப்பாக இது செயல்பட்டு வருகிறது.

தொழில் வளர்ச்சி மேம்பாடு அடைய மத்திய அரசும் மாநில அரசும் பல சலுகைகளையும் மாநிலத் திட்டங்களையும், வசதிகளையும் செய்து வருகிறது. மேலும் இம் மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம், பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர், திருவாடானை, இராமேஸ்வரம் ஆகிய 6 வட்டங்களும் தொழில் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே, சிறப்புச் சலுகைகள் பெறுவதற்கும் இம் மாவட்டத்தில் தொழில் தொடங்குவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

ஆர்வமுள்ள இளம் தொழில் முனைவோர்களைக் கண்டறியும் பொருட்டு மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியங்களிலும், தொண்டு நிறுவனங்களிலும் தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் இதுவரை 82 கூட்டங்கள் நடத்தப்பட்டு, சுமார் 580 தொழில் முனைவோர்கள் கண்டறியப்பட்டு, தொழில் தொடங்க தகுந்த அறிவுரைகளும் உதவிகளும் செய்யப்பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டில் இது வரையில் 13 தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 165 தொழில் முனைவோர்கள் புதிதாகக் கண்டறியப்பட்டுத் தொழில் தொடங்க தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொழில் தொடங்க உள்ள வாப்ப்புகளை விளம்பரப்படுத்தும் பொருட்டு இரண்டு தொழில் கருத்தரங்குகளையும் 25 நபர்களுக்குத் தொழில் மேம்பாட்டுப் பயிற்சியை நடத்தி அதில் 7 நபர்கள் தொழில் தொடங்கும் நிலையில் உள்ளனர். தற்சமயம் இராமேஸ்வரத்தில் தொழில் நுட்ப வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் 25 நபர்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி 24.9.91 முதல் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது.

**தொழில் முனைவோர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளையும் இதர வசதிகளையும் முன்னுரிமையில் பெறுவதற்குத் தேவையான தற்காலிகச் சிறுதொழில் சான்றிதழை மாவட்டத் தொழில் மையம் வழங்குகிறது.**

**இராமநாதபுரம் மாவட்டத்தில் 265 கி.மீட்டர் தூரத்திற்கு அமைந்துள்ள கடலோரப் பகுதியில் மீன் பதனிடும் தொழில்கள், கோழித் தீவனம், மீன் வளங்கள் மற்றும் அதைச் சார்ந்த தொழில்கள் தொடங்க வாய்ப்புகள் உள்ளன.**

தொழில் முனைவோர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளையும் இதர வசதிகளையும் முன்னுரிமையில் பெறுவதற்குத் தேவையான தற்காலிகச் சிறுதொழில் சான்றிதழ் மாவட்டத் தொழில் மையம் வழங்குகிறது. இம்மையம் தொடங்கப்பட்ட பின்னர், 2,952 தொழில் முனைவோர்கள் கண்டறியப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் குறியீட்டு அளவான 700 தொழில்களில் 30.9.91 வரை 369 தொழில் முனைவோர்கள் கண்டறியப்பட்டு தற்காலிகப் பதிவு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொழில் தொடங்கப்பட்ட நிறுவனங்களுக்கு அரசு வழங்கும் மானியங்களும் வசதிகளும் பெறுவதற்கு அடிப்படைத் தேவையான நிரந்தரப் பதிவுச் சான்றிதழை மாவட்டத் தொழில் மையம் வழங்கி வருகிறது. 406 தொழில் இயங்கி வந்த இம் மாவட்டத்தில் 31.3.91 முடிய 1,149 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. இவற்றின் மூலமாக 6,398 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் குறியீட்டு அளவான 250 தொழில்களில் 30.9.91 முடிய 125 தொழில்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டு 326 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மாவட்டத்தில் கிடைக்கும் மூலப்பொருட்களை பயன்படுத்தி கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்கள் இயங்கி வருகின்றன. இதுபோன்று தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து கைவினைத் தொழில் சான்றிதழ் வழங்குவதுடன் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளும் மற்றும் கடனுதவி பெறுவதற்குப் பரிந்துரையும் செய்யப்படுகின்றன. 31.3.91 முடிய 1,577 கைவினைத் தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1991-92-ஆம் ஆண்டில் குறியீட்டு அளவான 220 தொழில்களில் 30.9.91 வரையில் 143 கைவினைத் தொழில்கள் பதியப்பட்டுள்ளன. இதுபோல் 31.3.91 முடிய 1,761 குடிசைத் தொழில்கள் கண்டறியப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1991-91-ஆம் ஆண்டு குறியீட்டு அளவான 370 தொழில்களில் 30.9.91 வரையில் 213 குடிசைத் தொழில்கள் பதிவு செய்யப்பட்டு உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

கிராமப் பகுதிகளில் தொழிலை விரிவாக்க விதைப் பணமாக ஊரகத்

தொழில் கடன், குறைந்த வட்டியில் அதிகப்பட்சம் ரூ.25,000 வரை மாவட்டத் தொழில் மையம் வழங்கு கிறது. இத்திட்டத்தின் கீழ் 30 நிறுவனங்களுக்கு 6.04 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 18 வயது நிறைவுபெற்ற 35 வயது நிறைவு பெறாமலும், பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றும் குடும் பத்தின் ஆண்டு வருமானம் ரூ.10,000-க்கு உட்பட்டு இருப்ப வர்களுக்குத் தொழில், தொழி லுடன் கூடிய சேவைத் தொழில் மற்றும் வியாபாரம் செய்ய முறையே ரூ.35,000, ரூ.25,000 மற்றும் ரூ.15,000 அதிகப்பட்சமான கடன் வழங்க தேர்வுக் குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது. இதில் 31.3.91 முடிய 446 நபர்களுக்கு 72.3 இலட்சம் ரூபாய் வங்கிகள் மூலம் பட்டுவாடா செய்யப்பட்டு தொழில் செய்யப்பட்டு வருகின்றது. 1991-92-ஆம் ஆண்டில் குறியீட்டு அளவான 250 நபர்களில் 71 நபர் களுக்கு 13.68 இலட்சம் ரூபாய் கடன் வழங்க வங்கிகளுக்குப் பரிந் துரை செய்யப்பட்டுள்ளது..

மேலும், தொழில் முனைவோர் களுக்கு அரசு வழங்கும் சலுகை களாக முதலீட்டு மானியமாக நிரந் தர மூலதனத்தில் 15 சதவிகிதம் மானியமும், சிறப்பு முதலீட்டு மானிய மாக தோல் தொழில், மின் அணுச் சாதனை, மருந்துப் பொருட்கள் போன்ற தொழில்களுக்கு 20 சத விகித மானியமும், மின்சார உற் பத்திக் கலன் வாங்கி பொருந்தும் நிறுவனங்களுக்கு 15 சதவிகித மானியமும், குறைந்த அழுத்தம் மின்சாரம் பயன்படுத்தும் சிறு தொழில் நிறுவனங்களுக்கும் செலுத் தப்பட்ட மின்கட்டணத்தில் முறையே 30 சதவிகிதம், 20 சதவிகிதம் மற்றும் 10 சதவிகிதம் மூன்று ஆண்டுகளுக்கு மானியமாக வழங் கப்படுகிறது.

சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தனது அசையாத சொத்தில் 8 சதவிகிதம் அல்லது செலுத்தப்பட்ட விற்பனைவரி அல்லது ரூபாய் 1.25 இலட்சம் இதில் எது குறைவோ அத் தொகை வட்டியில்லா விற்பனை வரிக் கடனாக 6 ஆண்டுகளுக்கு அளிக்கப்படுகிறது. பின்தங்கிய வட்டங்களில் புதிய தொழில் துவங் கும் நிறுவனங்களுக்கு 9 ஆண்டு களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் ஒத்திவைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகத் தொழில் உருவாக்கும் பொருட்டு முதல் கட்டமாகக் கீழ நாகாச்சிக் கிராமத்தில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் 30 தொழில் கூடங்கள் கட்ட 10 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பேட்டை அமைக்க கட்டுமானப்பணி தொடங் கப்பட்டுள்ளது. இதுபோல் பரமக் குடியிலும், இராமேஸ்வரத்திலும் தொழிற் பேட்டைகள் அமைக்க பூர் வீக வேலைகள் நடைபெற்று வரு கின்றன.



இராமநாதபுரம் மாவட்டத்தில் 265 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைந்துள்ள கடலோரப் பகுதியில் தொழில் நுட்ப ஆய்வு அறிக்கையின் படி, சுமார் 49,102 டன் மீன்கள் ஆண்டிற்குக் கரையேற்றப்படுவதால் இவற்றைப் பயன்படுத்தி மீன் பதனிடும் தொழில்கள், கோழித் தீவனம், மீன்வளங்கள் மற்றும் அதைச்சார்ந்த தொழில்கள் தொடங்க வாய்ப்புகள் உள்ளன. மேலும், இம்மாவட்டத்தில் கிடைக்கின்ற ஜிப்சம், சுண்ணாம்புக் கற்கள், களிமண் போன்ற தாதுப்பொருட் களைப் பயன்படுத்தி சுத்திகரிக்கப் பட்ட உப்பு, சுண்ணாம்புப்பொடி, ஜிப்சம் அட்டைகள், பிளாஸ்டர் ஆப் பாரிஸ், சாக்பீஸ் போன்ற தொழில்கள் உருவாக்க வாய்ப்புகள் உள்ளன. இம்மாவட்டத்தில் கிடைக் கின்ற விளைபொருட்களாகிய தேங்காய், வத்தல் மிளகாய், மல்லி போன்றவற்றைப் பயன்படுத்தி சாம்பார்பொடி, மல்லிப்பொடி, மிளகாய்ப் பொடி தொடங்க வாய்ப் புகள் உள்ளன.

சிறுதொழில் அதிகம் உருவாக்க வும் மற்றும் வேலைவாய்ப்பு வசதிகள் பெருக்கிடவும், புதிதாகத் தொடங் கும் சிறு தொழில்களின் இயந்திர மூலதன உச்சவரம்பு ரூ.35 இலட் சத்திலிருந்து ரூ.60 இலட்சம் ஆக வும், துணைத்தொழில் தொடங்கும் நிறுவனங்களுக்கு இயந்திர மூலதன உச்ச வரம்பு ரூ.45 இலட்சத்தி லிருந்து ரூ.75 இலட்சமாகவும் உயர்த்தி தமிழக அரசு ஆணை பிறப் பித்துள்ளது.

இவ்வாறு அரசு செய்து வரும் புரட்சிகரமான தொழில் திட்டங் களால் தொழில் திட்டத் தில் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம், விரை வில் தொழில் வளர்ச்சியில் தன்னி றைவு பெறும் மாவட்டமாக விளங் கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**வி.ஜி.பிரசாத்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம்**



## அறிவுச் சுடர்

1. சிதம்பரம்நடராஜர்கோயிலுக்குப் பொற் கூரை மேய்ந்த மன்னர் யார்?

2. S.A.I.L. என்பதன் விரிவாக்கம் யாது?

3. ஆசியாவில் உள்ள மிக நீளமான பாலம் எது?

4. ஜப்பான் பாராளுமன்றத்தின் பெயர் எது?

5. L.I.C. நிறுவனம் தோன்றிய ஆண்டு?

6. அஜந்தா குகைகள், எத்தனை குகைகளைக் கொண்டது?

7. 'ஓரியன்' என்பது என்ன?

8. சூரியனின் குறுக்களவு எவ்வளவு?

9. நோபல் பரிசு எவ்வளவு மதிப் புடையது?

**சி. காந்தி**

**முதலாம் ஆண்டு**
**லேடி வெலிங்டன் சீமாட்டி**
**ஆசிரியர் பயிற்சிப் பள்ளி**
**சென்னை-5.**

### விடைகள்:

1. பராந்தக சோழன்
2. Steel Authority India Limited.
3. சேது பாலம்
4. டயட்
5. செப்டம்பர் 1, 1956
6. 29 குகைகள்
7. நட்சத்திரக் கூட்டம்
8. 13,96,000 கி.மீ.
9. 2,12,000 டாலர்கள்

## கூட்டுறவு

—நீரை. அத்திப்பூ

துளித்துளியாய் மழைபொழிந்து
தூயமணல் வெளிவிழுந்து
ஆறுநதி யாகிகடல் ஆகுது-அதனால்
ஆயிரமாய் உயிரினங்கள் வாழுது.

மணித்துளிகள் பலகூடி
மண்ணுலகில் நாள்வாரம்
மாதமென ஆகி ஆண்டு ஆகுது-அது
மக்கள்வாழ்வு கணக்காகிப் போகுது.

ஒன்றிரண்டு மூன்றுஎன
உருவான எண்களினை
ஒன்றுகூட்டிப் பலகோடி ஆகுது-கணக்கு
உயர்மடங்கில் தத்துவத்தைக் கூறுது.

கூட்டுறவுக் கொள்கையினால்
குவலயத்தை வாழ்விக்கும்
திட்டமதும் இணைந்துஇது போலவே-இதில்
திகழுகின்ற அங்கத்தினர் வாழவே.

மாடுமனை வீடுதொழில்
மக்கள்நலம் காப்பதுவும்
மாறாத கூட்டுறவு ஆகுமே-அதை
மனமேற்றால் இவ்வுலகம் வாழுமே.

## நல்ல புத்தகங்கள்

படிக்கும்போது, சோர்வை உண் டாக்காத நூல்கள் அனைத்தும் நல்ல நூல்களே!

—வால்ட்டேர்

புத்தகங்கள் இளமையில் வழி காட்டி; பருவத்தில் பொழுதுபோக்கு பவை; நாம் தனிமையில் இருக்கின்ற போது நமக்குப் பெருந்துணையாக இருப்பதுடன், நாமே நமக்கு ஒரு பெருஞ்சுமையாகத் தோன்றாதவாறு செய்கின்றன.

—கோலியர்




# பெரியார் மாவட்டத்தில் கூட்டுறவு

வேளாண்மைக்குத் தேவைப் படும் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன் வசதிகளைப் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி யும் அதனுடன் இணைக்கப்பட்ட 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கி வரு கின்றன. செப்டம்பர் '91 திங்கள் முடிய குறுகிய காலக் கடன் 624.40 இலட்சமும், மத்திய காலக் கடன் 29.41 இலட்சமும் வழங்கப்பட்டுள் ளன. இதில் குறுகிய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 396.74 இலட்சமும், மத்திய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 29.41 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

**நீண்ட காலக் கடன்:**

வேளாண்மை முன்னேற்றத்திற் குத் தேவையான நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்கப் பெரியார் மாவட்டத்தில் 12 கூட்டுறவு நில வள வங்கிகள் செயல்பட்டு வருகின் றன. 1991-92-ஆம் நிதியாண்டுக் குச் செப்டம்பர் '91 திங்கள் முடிய ரூ.36.79 இலட்சம் கடன் வழங்கப் பட்டுள்ளது.

**நகைக்கடன் வழங்குதல்:**

பெரியார் மாவட்டத்தில் 6 கூட்டுறவு நகர வங்கிகள் மற்றும் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 27 கிளைகள், 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவைகளின் மூலம் செப்டம்பர் '91 திங்கள் முடிய 1991-92-ஆம் நிதியாண்டுக்கு ரூ.1071.83 இலட்சம் நகைக்கடன் வழங்கியுள்ளன.

**உரம் விற்பனை:**

விவசாயத்திற்குத் தேவையான உர விநியோகம் பெரியார் மாவட்டத் தில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் இணைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் விற்பனைச் சங் கங்கள் மூலம் நடைபெறுகின்றது. 1991-92-ஆம் நிதியாண்டுக்கு உரம் விற்பனை செப்டம்பர் '91 திங்கள் முடிய ரூ.285.62 இலட்சத்திற்கு செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை விளைபொருள் விற்பனை:**

விவசாய உறுப்பினர்களின் வேளாண்மை விளைபொருட்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் பணியினைப் பெரியார் மாவட்டத்தில் செயல்படும் 6 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் சிறப்பாகச் செய்து வருகின்றன. 1991-92-ஆம் நிதியாண்டுக்கு செப்டம்பர் '91 திங்கள் முடிய இச்சங்கங்கள் ரூ.589.90 இலட்சத் திற்குச் சங்க உறுப்பினர்களின் வேளாண் விளை பொருள்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்துள்ளன.

பெரியார் மாவட்டத்தில், கூட்டுறவு நிறுவனங்களில் இட்டு வைப்புகளாக ரூ.7064.56 இலட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் செயல் படும் 6 கூட்டுறவு நகர வங்கிகள் செப்டம்பர் '91 திங்கள் முடிய ரூ.67.84 இலட்சமும், பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி ரூ.25.87 ஆக மொத்தம் ரூ.93.71 இலட்ச மும் சிறுதொழில் கடன் வழங்கி யுள்ளன.

**மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்:**

தலைமலை மற்றும் சத்தி வனச் சரகத்திலுள்ள மலைவாழ் மக்களின் நலனுக்காகச் சத்தியில் மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுற வுச் சங்கம் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கம் 1991-92-ஆம் நிதியாண் டில் செப்டம்பர் '91 திங்கள் முடியக் கடன் ஏதும் ஒதுக்கவில்லை. செப்டம்பர் '91 திங்கள் முடிய ரூ.4.68 இலட்சத்திற்குச் சிறுவனப் பொருட்கள் சேகரம் செய்துள்ளது. மலைவாழ் மக்களுக்குச் சிறு வனப் பொருட்கள் சேகரக் கூலி வழங்கப் படவில்லை. ரூ.4.19 இலட்சம் கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்டத் தொழில் மையம்**

படித்து வேலையற்ற இளைஞர் களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக செப்டம்பர் '91 திங்கள் முடிய 350 நபர் களுக்கு ரூ.71.17 இலட்சம் வழங் கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நிர்ண யிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் '91 வரை 401 நபர்களுக்கு ரூ.92.91 இலட்சம் கடன் வழங்க வங்கிகளுக் குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில் 11 நபர்களுக்கு ரூ.1.95 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய சிறுதொழில் கூடங்கள் நிறுவும் திட்டத்தின் கீழ் 57 நிறு வனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவும் திட்டத்தின் கீழ் 23 நிறு வனங்களுக்குச் சிறுதொழில் பதிவு மற்றும் குடிசைத் தொழில் பதிவுச் சான்று வழங்கப்பட்டுள்ளன. சிறு தொழில் பதிவுத் திட்டத்தின் கீழ் இம்மாதத்தில் 83 நிரந்தர மற்றும் 494 தற்காலிகச் சான்றுகள் வழங் கப்பட்டுள்ளன.

கைவினைத் தொழில் சான்று வழங்கும் திட்டத்தின் கீழ் 29 நபர் களுக்குச் சான்றுகள் வழங்கப் பட்டுள்ளன. குடிசைத் தொழில் சான்று வழங்கும் திட்டத்தின் கீழ் 27 நபர்களுக்குச் சான்றுகள் வழங் கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஒருவழிக் கருத்துக் குழுக் கூட்டத்தில் 18 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டது. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் பின்பு செலுத் தும் திட்டத்தின் கீழ் தகுதிச் சான்று இரண்டு நபர்களுக்கு ரூ.2.27 இலட்சத்திற்கு வழங்கப்பட்டது. தொழில் முனைவோர் ஊக்குவிப் புப் பயிற்சி முகாம்கள் மூன்று நடத்தப்பட்டுள்ளன.

—இரா. பா. கார்மேகம்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரியார் மாவட்டம்.

# மழைக்கால நோய்கள்

**மழைக்காலம் வந்துவிட்டது; இக்காலத்திற்கே உரிய சில நோய்கள் நம் வீட்டுக்கு அழையா விருந்தாளிகளாக வரக்கூடும். அப்படிப்பட்ட மழைக்கால நோய்கள் யாவை - அவை வராமல் தவிர்ப்பதும் - வந்த பின் நடந்துகொள்ளுவதும் எப்படி என்று விளக்குகிறார் டாக்டர் எம். பாஸ்கரன் செல்வபதி, எம்.எஸ்., எம்.என்.ஏ.எம்.எஸ்.,**

**வா**னத்திலிருந்து அமிழ்வதால்-மழையை அமிழ்தத்திற்கு ஒப்பானது என்று அந்தக் காலத்துத் திருவள்ளுவரும், அண்மைக் காலத்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரும் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் - மழைக்காலம், மனிதர்களுக்குச் சில வகைத் துன்பங்களைத் தரும் காலமாக அமைந்து விடுவதும் உண்டு என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ப சில நோய்கள் உண்டாகும்; அல்லது அதிக அளவில் வேகமாகப் பரவும்.

அந்த வகையில் மருத்துவக் கண் கொண்டு பார்த்தால், சிலவகை நோய்கள் நமக்குத் தெரியவரும். அப்படிப்பட்ட மழைக்கால நோய்கள் பற்றிய நம் வினாக்களும் டாக்டர் எம். பாஸ்கரன் செல்வபதி, எம்.எஸ்., எம்.என்.ஏ.எம்.எஸ்., அவர்கள் அளித்த விடைகளும் பின்வருமாறு:

**மழைக்காலத்தில் எப்படிப்பட்ட நோய்கள் மக்களிடையே பரவக் கூடும்?**

**ஒன்று:-** மழை நீரில் அசுத்தங்கள் மற்றும் மனிதக் கழிவுகள் கலந்து வரும் மாசுபட்ட நீரை அருந்துவதால் ஏற்படக்கூடிய தொற்று நோய்கள்; இதில் முக்கியமாக வயிற்றுப்போக்கு - அதாவது Diarrhoeal diseases; காலரா; டைபாய்டு ஜுரம்; மஞ்சள் காமாலை; போலியோ ஆகியவற்றைச் சொல்லலாம். இவற்றை நீர் மூலம் பரவும் நோய்கள் - அதாவது Water-bone Diseases என்கிறோம்.

**இரண்டாவதாக,** மழைநீர் தேங்குவதால் கொசுக்களும், ஈக்களும் பெருகி, அவற்றால் பரவும் நோய்களைச் சொல்லலாம்.

ஈக்களால் ஏற்கெனவே நான் கூறிய தொற்றுநோய்கள் அனைத்தும் பரவலாம்;

கொசுக்களினால் மலேரியா மற்றும் ஃபைலேரியாஸிஸ் எனப்படும் யானைக்கால் வியாதி ஆகியவை பரவலாம்.

மேற்கூறிய நீர்மூலம் பரவக்கூடிய நோய்கள் தவிர, மழைக் காலத்தில் ஈரத்தன்மையால் ஜலதோசம், இருமல், சளி, ஆஸ்த்மா போன்ற நோய்களும் அதிகமாக நம்மைப் பாதிக்கலாம்.

**இவ்வாறான நலக்கேடுகள் ஏற்பட அடிப்படைக் காரணங்கள் யாவை?**

உலகில் - பொதுவாக வளரும் நாடுகளில் ஏற்படும் நோய்கள் பலவற்றிற்கு, அடிப்படைக் காரணம் சுத்தமான குடிநீர் இல்லாமைதான் என்று கூறலாம்; உலகச் சுகாதார நிறுவனம் 1975-இல் நடத்திய ஓர் ஆய்வின்படி இந்திய நாட்டில், நகரத்தில் வசிக்கும் மக்களில் 80 சதவிகிதத்தினருக்கும் - கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களில்18 சதவிகிதத்தினருக்கும் மட்டுமே குடிக்கத் தகுந்த பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதாகத் தெரிகின்றது. போதிய நீர் வசதி இல்லாததால் மிகப் பெரும்பான்மையானோருக்குப் பாதுகாப்பான குடிநீர் இன்னும் அளிக்கமுடியவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும். இந்திய மக்களில் 80 சதவிகிதத்தினர் கிராமப் புறங்களில் வாழ்வதால் மாசுபட்ட நீரினால் ஏற்படும் நோய்களும் பெரும்பாலும் கிராமப்புற மக்களையே பாதிக்கின்றன.



**குடிக்கத் தகுந்த நீர் என்று எதைச் சொல்லலாம்?**

பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்பக் குடிநீரின் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. குடிக்கத் தக்க நீர் என்பது சில தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

நோய்க்கிருமிகள் அதில் இருக்கக் கூடாது.

தீங்கிழைக்கக்கூடிய வேதிப் பொருட்கள் (Chemicals) அதில் இருக்கக் கூடாது.

நீர் சுவையாக இருக்க வேண்டும்.

நீர் வீட்டு உபயோகத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

**மழைக்கால நோய்களில் முக்கியமான நோய் பற்றியும் அது அணுகாமல் தடுக்கும் முறைகள் பற்றியும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களேன்?**

மழைக்காலத்தில் பரவக்கூடிய தொற்றுநோய்களில் மிக முக்கியமானது வயிற்றுப்போக்கு நோய். இந்தியாவில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் குறைந்தபட்சம் 15 இலட்சம் பேர் ஒவ்வொரு ஆண்டும் வயிற்றுப்போக்கினால் இறக்கின்றனர். மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கான வார்டுகளில் 30 சதவிகிதக் குழந்தைகள் வயிற்றுப்போக்கிற்காகவே சேர்க்கப்படுகின்றனர்.

இந்தப் புள்ளி விவரங்கள் மூலம் இந்நோய் எவ்வளவு சமூக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். நோய்க் கிருமிகள் சிறுகுடலின் உட்புறத்தைச் சேதப்படுத்துவதால் நீர்ச்சத்து குடலுக்குள் உறிஞ்சப்படாமல் வெளியேறுகிறது. இதனால் வயிற்றுப்போக்கு - அதாவது Diarrhoea ஏற்படுகிறது.

**வயிற்றுப்போக்கு நோய் ஏற்பட முக்கியக் காரணம் என்ன?**

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. வைரஸ் கிருமிகள்தான் வயிற்றுப்போக்கு ஏற்பட மிகமுக்கியமான காரணமாகும். ரோட்டா வைரஸ், எக்கோ வைரஸ், காக்சாக்கி வைரஸ், அடினோ வைரஸ், பார்வோ வைரஸ், கொரோனோ வைரஸ் போன்ற பல வைரஸ்கள் குடலைச் சேதப்படுத்தி வயிற்றுப்போக்கு ஏற்படுத்துகின்றன. அதிலும் முக்கியமாக ரோட்டா வைரஸ்தான்




குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட மிகவும் முக்கியமான காரணமாகும்.

வைரஸ் கிருமிகள் மட்டுமின்றி E.Coli ஸால்மோனெல்லா, ஷிகெல்லா, Vibrio cholera போன்ற பாக்டீரியாக்களும் ஜியார்டியா மற்றும் அமீபா போன்ற நுண்ணுயிர்க் கிருமிகளும் வயிற்றுப்போக்கு ஏற்படுத்தலாம். இந்நோய்க் கிருமிகள் மனித மற்றும் மிருகங்களின் மலக்கழிவுகளின் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுகின்றன. மாசுபட்ட நீர், உணவு மற்றும் சரிவர கைகளைக் கழுவாமையால் இவை பரவுகின்றன. ஈக்களின் உடலில் ஒட்டிக்கொண்டும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இவை பரவுகின்றன. மழைக்காலத்தில் குடிநீரில் கழிவுகள் கலக்க வாய்ப்பு அதிகம். இதனால்தான் மழைக்காலத்தில் வயிற்றுப்போக்கு நோய் அதிகம் ஏற்படுகிறது. வயிற்றுப்போக்கு நோய் கண்டால் நோயாளி உடனே மருத்துவரை அணுக வேண்டும்.

கிருமிகளைக் கொல்ல நல்ல பல மருந்துகள் உள்ளன; மற்றும் Oral Rehydration Theraphy (ORT) என்ற முறையில் வயிற்றுப்போக்கினால் உடல் இழக்கும் நீர் மற்றும் பல்வேறு உப்புச் சத்துக்களை ஈடுசெய்யும் புதியதோர் சிகிச்சைமுறை உள்ளது. இது ஓர் உயிர்காக்கும் எளிய, செலவற்ற சிகிச்சை முறையாகும். இம்முறை 1971-இல் உலக சுகாதார நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்டது. இம்முறையில், குளுக்கோஸ், சோடியம் குளோரைடு, பொட்டாசியம் குளோரைடு, சிட்ரேட் போன்ற உப்புக்கள் கலந்த நீர் வயிற்றுப்போக்குள்ள நோயாளிக்கு அடிக்கடி கொடுக்கப்படுகிறது. இப்பொருட்கள் Oral Rehydration Mixture என்று பாக்கெட்டில் பவுடராக விற்கப்படுகின்றன. இப்பாக்கெட்டை ஒரு லிட்டர் நீரில் கரைத்து அடிக்கொருதரம் கொடுக்கலாம். இதை விலைகொடுத்து வாங்க முடியாதவர்கள், வீட்டிலேயே ஒரு லிட்டர் குடிநீரில் 5 கிராம் சமையல் உப்பையும், 20 கிராம் சர்க்கரையையும் கலக்கி உபயோகிக்கலாம். நீரைக் கொதிக்க வைக்க வேண்டிய அவசியம்கூட இல்லை.

அதிக அளவு வயிற்றுப்போக்கு ஏற்பட்டு உடலில் நீர்ச்சத்து குறைந்தால், 'நரம்பு ஊசி' எனப்படும் Intravenous திரவங்களை உடலில் ஏற்றும் சூழ்நிலை வரலாம்.

**காலரா நோய் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் நோயா?**

காலரா எனப்படுவது, விப்ரியோ காலரே Vibrio cholerae எனப்படும் நோய்க்கிருமிகளால் ஏற்படும் மிகக் கடுமையான வயிற்றுப்போக்காகும். தக்க தருணத்தில் மருத்துவக் கவனிப்பு இல்லாவிட்டால் காலரா நோய் கண்டவர்களில் 100-க்கு 30 முதல் 40 சதவிகிதம் பேர்வரை உயிரிழக்க நேரிடலாம். காலராவின்

### அட்டைப்பட விளக்கம்:

முதல் அட்டை

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் சென்னை விமான நிலையத்தில் வரவேற்றார்.**

(கட்டுரை: 2-ஆம் பக்கம்)

**மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார் (1.11.'91).**

கடைசிப்பக்க அட்டை:

**புதுடெல்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் கௌன்சில் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் பங்கேற்ற காட்சி.**

(மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை: 4-ஆம் பக்கம்)

அறிகுறிகள் கி.மு. 7-ஆம் நூற்றாண்டிலேயே நமது ஆயுர்வேத மருத்துவ நூலான 'அஸ்ருத சம்ஷிதா' வில் 'விஷுசிகா' என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

காலரா நோய் கண்டவர்களுக்குத் திடீரென, மிக அதிக அளவில், வயிற்றில் வலியின்றி, தெளிந்த நீர் போன்று அடிக்கடி வயிற்றுப்போக்கு ஏற்படலாம். ஒரே நாளில் ஏறக்குறைய 40 முறை வரை வயிற்றுப் போக்கு உண்டாகலாம். வாந்தி, கண்களில் குழிவிழுதல், நாவறட்சி போன்றவை உண்டாகலாம். அவசர மருத்துவக் கண்காணிப்பு இதற்குத் தேவை. நோய் ஓரிடத்தில் பரவத் துவங்கினால், பாதுகாப்புக்கெனத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளலாம்.

**டைபாய்டு, மஞ்சட்காமாலை நோய்க் கூறுகள் பற்றிக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்களேன்?**

டைபாய்டு நோய் சால்மனெல்லா எனப்படும் நுண்ணுயிர்க் கிருமிகளினால் ஏற்படும் ஒரு கொடிய ஜுர நோயாகும். பாதிக்கப்பட்ட நோயாளிகளின் சிறுநீர், மலக்கழிவின் மூலம் இந்நோய் பரவுகிறது. இந்நோயும் நீர், பால் உணவுப் பொருட்கள், மற்றும் ஈக்களின் மூலமாகப் பரவுகின்றது. டைபாய்டு நோய்க்குத் தக்க மருந்துகளும், நோய் வராமல் தடுக்கத் தடுப்பு ஊசியும் உள்ளன.

மஞ்சள் காமாலை நோய் பல்வேறு வைரஸ் கிருமிகள் ஈரலைத் தாக்குவதால் ஏற்படலாம். பொதுவாக Hepatitis-A வைரஸ் மூலமே நமது நாட்டில் இந்நோய் ஏற்படுகிறது.

இந்த வைரஸ் கிருமி மாசுபட்ட நீர் மூலம் பரவுகின்றது. குடிநீரை நன்கு கொதிக்க வைத்துக் குடிப்பதனாலும், முறையாகக் குளோரின் கலக்கப்பட்ட நீரைப் பருகுவதனாலும், சாப்பிடும் முன்னரும், சாப்பிட்ட பின்னரும், கழிவறை சென்று வந்த பின்னரும், கைகளை நன்றாகக் கழுவுவதன் மூலம் இந்த வைரஸ் பரவாமல் தடுக்க முடியும். நோய் ஏற்பட்டு விட்டால் முழுமையாக ஓய்வு எடுப்பதே இந்நோய்க்கு மிக முக்கியமானதும் முதலாவதுமான சிகிச்சையாகும்.

**போலியோ நோய் என்பது எப்படிப் பட்டது?**

மூன்று வகையான போலியோ வைரஸ்களினால் ஏற்படக்கூடிய இது ஒரு கொடிய நோய். Type 1 எனப்படும் வைரஸ்தான் அதிக அளவில் போலியோ நோய்க்குக் காரணமாக அமைகிறது. பொதுவாக நீர் மூலம் பரவும் இந்நோயும் மழைக்காலங்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. 4 வயதுக்குட்பட்ட குழந்தைகளையே அதிகம் தாக்கும் இந்நோயையும் பெருமளவில் கட்டுப்படுத்த முடியும். குழந்தைகளுக்குச் சரியான பருவத்தில் போலியோ சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ வராமல் தடுக்கலாம்.

**கொசுக்களால் பரவக்கூடிய நோய்கள் யாவை?**

கொசுக்கடியினால் ஏற்படும் இரண்டு முக்கியமான நோய்கள் மலேரியாவும், யானைக்கால் வியாதியும் (Filariasis) ஆகும். இந்நோய்களைப் பரப்பும் கொசுக்கள் தேங்கி நிற்கும் நீரில் பெருகி வளர்கின்றன. மேலும், மழைக்காலத்தில் சுற்றுப்புறத்தில் நிலவும் ஈரப்பதம் இக்கொடிய நோய்களைப் பரப்பும் கொசுக்களின் வளர்ச்சிக்குச் சாதகமாக அமைகின்றன.

**எந்த வகைக் கொசுக்கள் அந்நோய்களைப் பரப்பும் - அதிலிருந்து தப்புவதுதான் எப்படி?**

மலேரியாநோய், அனாபெலஸ் என்ற வகைக் கொசுக்கள் கடிப்பதனால் ஏற்படுகின்றது. மலேரியா நோய்க்கிருமிகள் பிளாஸ்மோடியம் என்ற இனத்தைச் சேர்ந்தவை.



பிளாஸ்மோடியம் வைவாக்ஸ், Falciparem, Ovale, Malariae என்ற 4 வகையான கிருமிகள் மூலம் மலேரியா ஏற்படலாம். இவற்றுள், நமது நாட்டில் பிளாஸ்மோடியம் வைவாக்ஸும் ஃபால்சிபேரமும் மட்டுமே மலேரியாவிற்குப் பெருமளவில் காரணமாக அமைகின்றன. கொசு மனிதனைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும் நேரம், கொசுவின் உமிழ்நீர் மூலம் மலேரியா நோய்க் கிருமிகள் மனித ரத்தத்தில் கலக்கின்றன. இவை இரத்த அணுக்களில் பெருகி, இரத்த அணுக்களைச் சிதைக்கின்றன. அவ்வாறு இரத்த அணுக்கள் சிதைவுறும்பொழுது வெளியேறும் சில நச்சுப் பொருட்களே ஜுரம் ஏற்படக் காரணமாக அமைகின்றது. இரத்த அணுக்கள் சிதைந்து, எண்ணிக்கையில் குறைவதால் இரத்தச் சோகை (Anemia) ஏற்படுகின்றது.

மலேரியா நோய்க்குத் தக்க மருந்துகள் பல உள்ளன; மலேரியாவைத் தடுக்க முக்கியமாக நாம் கொசுக்கடியைத் தவிர்க்க வேண்டும். கொசு வலைகள். ஜன்னல்களின் பொருத்தப்படும் வலைகள், பலவேறு கொசுவத்திச் சுருள்கள் மற்றும் வில்லைகள் இதற்கென உள்ளன. தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் கொசுக்களுக்கான மருந்தடிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரிகளுக்கு முழு ஒத்துழைப்புத் தருவது பொது மக்கள் கடமையாகும். தீவிரமாக முயன்றால் மலேரியாவை நிச்சயமாக நாம் முழுமையாக வென்று விடலாம்.

**யானைக்கால் வியாதி எதனால் வருகிறது?**

Filariasis எனப்படும் யானைக்கால் வியாதி Culex என்ற இனத்தைச் சேர்ந்த கொசுக்கள் மூலம் பரவுகின்றது. மழைநீரும், மழைக்காலத்தின் ஈரப்பதமும், மழைக்காலங்களில் ஏற்படும் கழிவுநீர்க் குழாய் அடைப்புகளும் Culex இனக் கொசுக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகின்றன! Pistia என்ற ஒரு வகை நீர்த்தாவரங்களும் இக்கொசுக்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவையாகும்.



## கலைவாணர் ஒரு சகாப்தம்!

—பேரறிஞர் அண்ணா



கலைவாணர் தனி ஒரு மனிதர் அல்லர்; அவர் ஒரு ‘சகாப்தம்’!

அவரோடு அந்தச் ‘சகாப்தம்’ முடிந்து விட்டது. அப்படிப்பட்ட ஒரு சகாப்தம் இனித் தோன்றுவது அரிது!

எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கமுடியும்; மக்களின் கை தட்டலையும், மாலைகளையும் பெற முடியும்; நல்லதோர் புகழையும் பெற முடியும். ஆனால், நம்முடைய கலைவாணரைப் போல, மற்ற எவரும் புகழ் பெற்றிருக்க முடியாது; புகழ் பெறவும் முடியாது.

கலைவாணர் - மக்களின் உள்ளத்தைத் தொட்டுச் சிரிக்க வைத்தவர்; உலகிலேயே இவர் ஒருவர்தான் மக்களிடம் தொடர்பு கொண்டு மக்களுக்காக உழைத்த கலைஞர் ஆவார். இவரைப் போன்ற நல்லுள்ளம் கொண்டோர் மிகச் சிலரே!

கலைவாணர் வெறும் நடிகராக மட்டும் வாழவில்லை. உலகத்தைத் திருத்திய உத்தமராக- தாமும் நல்லவராக - மற்றவர்களையும் திருத்துபவராக - கருத்துக் கருவூலமாக வாழ்ந்தார்.

மக்களின் மன அழுக்கு நீங்க - மூட நம்பிக்கை அகல - குருட்டுப் பழக்கவழக்கங்கள் ஒழிய - தாழ்ந்த மக்கள் தன்னுணர்ச்சி பெற - இதுவரை, இந்நாட்டில் எந்த நடிகரும் கலைவாணரைப் போல் பணியாற்ற முனைந்ததில்லை. இந்நாட்டில் மட்டும் அல்ல; வேறு எந்த நாட்டிலும் கூட இப்படிப்பட்ட நடிகர் ஒருவர் இருந்தது இல்லை; இனி இருக்கப் போவதும் இல்லை.

(கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் பிறந்த நாள்: நவம்பர்-29)

---

கொசுக்கடியைத் தவிர்த்தும், கொசுக்களை ஒழிக்கத்தக்க மருந்துகளைத் தெளித்தும், பிஸ்டியா வகை நீர்த்தாவரங்களை ஒழித்தும் யானைக் கால் நோய் பரவுவதைப் பெருமளவு தடுக்கலாம்! மலேரியாவுக்கு இருப்பது போன்றே தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் ஒன்றும் நமது நாட்டில் செயல்படத்தப்பட்டு வருகின்றது.

**மழைக்கால நோய்களிலிருந்து தப்ப வேண்டுமானால் எப்படிப் பட்ட நடவடிக்கைகளைக் கடைப் பிடிக்க வேண்டும்?**

மழைக்கால நோய்களைத் தடுக்க நாம் கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளலாம்:

- குழந்தைகளை மழைநீரில் விளையாடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- குடிநீரை நன்கு கொதிக்க வைத்து ஆறவைத்தே அருந்த வேண்டும்.
- சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்; குப்பைக் கூளங்களை அகற்ற வேண்டும்; நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்;
- ஈ, கொசு முதலியவை பெருகுவதை இது தடுக்கும்.
- கிணற்று நீரை உபயோகிப்பவர்கள் அவ்வப்பொழுது கிணற்றில் மாநகராட்சி ஊழியர்கள் மூலம் மருந்து தெளித்துக் கொள்ளலாம்.
- கொசு மருந்து அடிக்க வரும்பொழுது முழு ஒத்துழைப்புத் தர வேண்டும்.
- கொசுக்கடியிலிருந்து தப்பிக்க, கொசுவலை மற்றும் கொசுவத்திச் சுருள், வில்லைகள் முதலியவற்றை உபயோகிக்க வேண்டும்.
- உணவுப் பண்டங்களை, நன்கு மூடிவைக்க வேண்டும்.
- காய்கறிகள், பழங்களைச் சுத்தமாகக் கழுவிய பின்புதான் சாப்பிட வேண்டும்.
- சாப்பிடும் முன்னரும், கழிவறைக்குச் சென்ற பின்னரும் கைகளைச் சோப்புப் போட்டு நன்கு கழுவ வேண்டும்.
- சிறுவர்களை வீட்டில் வெளிப்புறங்களைக் கழிவிடங்களாக மாற்ற அனுமதிக்கக் கூடாது.
- சிறுவர்களானாலும் பெரியவர்களானாலும் வெளி இடங்களில், சுகாதாரமற்ற முறையில் விற்கப்படும் தின்பண்டங்களை வாங்கி உண்ணக்கூடாது.

- இவ்வாறான முறைகளைக் கையாண்டாலே போதும்; மழைக் கால நோய்கள் நம்மை அணுகாமல் நல்வாழ்வு வாழலாம்!

- சந்திப்பு: பி.எல்.ஆர்.

●●●

★ உனக்குப் பெருமை வேண்டுமானாலும், உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக்கொள். —தந்தை பெரியார்

# நானிலம் காத்த நேருவின் நடுநிலைக் கொள்கை



— ந. இளங்கோ

பண்டித நேரு யாரையும் வெறுக்காதவர். எவரையும் பகைக்காதவர். எந்த நாட்டையும் பகைத்து எந்த நாட்டுடனும் கூட்டுச் சேராதவர். படைபலம்மிக்க நாட்டைக் கண்டு பயப்படாதவர். பலமில்லாத நாட்டைப் புறக்கணிக்காதவர். அவர் தந்த கொள்கைதான் கூட்டுசேராக் கொள்கை.

### உலக நாடுகளின் நிலை

உலகம் இரண்டு அணிகளாகப் பிரிந்து முதலாளித்துவ அணி என்றும், பொதுவுடைமை அணி என்றும் பிளவுபட்டு பேதங்கொண்டு நின்றது. இரு பெரும் வல்லரசுகளான அமெரிக்காவும், ரஷ்யாவும் ஆயுதங்களைப் பெருக்கிக் கொண்டு ஆர்ப்பரித்து நின்றன. அகிலத்தை அழிப்பதற்குப் போட்டி போட்டு எழுந்தன.

அணுகுண்டுகளை அமெரிக்கா குவித்தது. நீர்வாயுக் குண்டுகளையும் ஏவுகணைகளையும் ரஷ்யா பெருக்கியது. அழிவின் உச்சத்திற்கே அவை சென்றுவிட்டன. அமெரிக்காவுடன் பல நாடுகள் நின்றன. ரஷ்யாவுடன் பல நாடுகள் இணைந்தன.

ஏனைய நாடுகளோ இந்த அணிகளில் ஏதாவது ஒன்றைப் பற்றினால்தான் வாழமுடியும் என்ற நிலை இருந்தது. வல்லரசுகளின் மோதலால் உலகமே அழியும் என்ற நிலை இருந்தது. வல்லரசுகளின் உதவியைச் சிறிய நாடுகள் நாடிச் சென்றால் அவை அடிமைப்பட்டே தீரும் என்று எச்சரித்து வல்லரசுகளுடன் சேர வேண்டாம் எனத் தடுத்தார் நேரு.

எந்த வல்லரசு அணியிலும் இந்தியா சேரவேண்டாம் என்பதை வலியுறுத்தி நேரு தனது கருத்தைக் கூறும்போது:

'நாம் ஒரு பலவீனமான அல்லது தரம் தாழ்ந்த நாட்டின் குடிமக்களல்ல. வல்லரசுகளைக் கண்டு பயந்து நமக்கும் படைபலம் வேண்டும் என்பதற்காக ஏதாவது ஒரு வல்லரசோடு நாமும் சேர்ந்தாக வேண்டும் என்று கருதுவதும், வல்லரசைக் கண்டு பயப்படுவதும் மடமையாகும். படை பலமிக்க ஒரு நாடு நமக்கு எதிராகக் கிளம்பினால் என்ன ஏற்படும் என்பதை உணராமல் நான் என்னை ஏமாற்றிக் கொள்ளவில்லை. நிச்சயமாக அது நமக்கு அழிவைத்தான் தரும். ஆனால் இதற்கு முன்பு, கடந்த காலத்தில், நாம் ஒரு தேசிய இயக்கமாக இயங்கியபோது உலகின் மிகப்பெரிய வல்லரசுகளில் ஒன்றைத்தான் எதிர்த்து நின்றோம். அந்த வல்லரசை நாம் நமக்கே உரிய வழிமுறையில் எதிர்த்து நின்றோம். அதே வழிமுறையில் வெற்றியும் பெற்றோம். ஒருவேளை ஒரு மோசமான படைபலத் தாக்குதலுக்கு நமதுநாடு உள்ளாக நேர்ந்தால், நாம் நமக்குரிய வழியிலேயே அதை எதிர்த்துப் போராடுவோம். நமது கொள்கைகளை விட்டுக் கொடுத்துக் பணிந்து போவதைவிட நாம் போராடுவோம். எனவே, இந்த அணி அந்த அணி என்று வல்லரசுகளின் அணிகளைக் கண்டு அஞ்சிக் கலங்கக் கூடாது. நான் அஞ்சவில்லை. இந்த நாடு எந்த அணியையும் கண்டு அஞ்சவில்லை என்பதை உலக நாடுகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது கொள்கை ஒதுங்கிப் போகிற, உறங்கிப் போகிற கொள்கை அல்ல. அது நிமிர்ந்து நின்று செயற்படுகிற கொள்கைதான்' நேருவின் கொள்கை என்னவென்பதை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டுகிறது இப்பகுதி.

### பல்வேறு நாடுகளின் கூட்டமைப்புகள்

உலக நாடுகள் நேருவின் காலத்தில் பல்வேறு குழுக்களாக இணைந்து நின்றன.

### நேட்டோ அமைப்பு நாடுகள்

வட அட்லாண்டிக் உடன்படிக்கை அமைப்பு 'நேட்டோ' அமைப்பு எனப்படுகிறது (NATO - North Atlantic Treaty Organisation)

இவ்வமைப்பு 1949-ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டிலுள்ள வாஷிங்டன் நகரில் உருவாகியது. பெல்ஜியம், பிரான்சு, நெதர்லாந்து, பிரிட்டன்,

கனடா, டென்மார்க், ஐஸ்லாந்து, இத்தாலி, நார்வே, போர்ச்சுகல் ஆகிய நாடுகள் அமெரிக்காவின் தலைமையில் அணிவகுத்து நின்றன. இந்நாடுகளுக் கிடையே சமாதானத்தை நிலைநாட்டவும், பாதுகாப்புக்கு உதவவும் உடன்படிக்கை செய்து கொண்டன.

### சீட்டோ அமைப்பு நாடுகள்

தென் கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்பாட்டு அமைப்பு 'சீட்டோ' அமைப்பு எனப்படுகிறது. (SEATO - South East Asia Treaty Organisation) இவ்வமைப் பில் ஆஸ்திரேலியா, பிரான்சு, நியூசிலாந்து, பாகிஸ்தான், பிலிப் பைன்ஸ், தாய்லாந்து, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் இடம் பெற்றிருந்தன. பிறநாட்டு ஆக்கிரமிப்பின் போதும், உள்நாட்டுக் குழப்பங்களின் போதும் உறுப்பு நாடுகள் ஒன்றுக் கொன்று உதவவேண்டும் என்பதும் கம்யூனிசக் கொள்கையை எதிர்ப்பது என்பதும் இவ்வமைப்பு நாடுகளின் உடன்படிக்கையாகும்.

வார்சா ஒப்பந்த நாடுகள் (Warsha Pact Countries) ரஷ்யா, அல்பேனியா, பல்கேரியா, செக்கஸ்லோவேகியா, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, போலந்து, ருமேனியா, ஆகிய நாடுகள் 1955-ஆம் ஆண்டு மே 15-ஆம் நாள் போலந்து நாட்டின் வார்சாவில் ஓர் உடன்படிக் கைக்கு வந்தன. பொருளாதார உதவி, பாதுகாப்பு உதவி ஆகியன இதில் அடங்கும்.

### சென்டோ அமைப்பு நாடுகள்

மத்திய உடன்பாட்டு அமைப்பு 'சென்டோ' அமைப்பு எனப்பட்டது. (CENTO - Central Treaty Organisation) இவ்வமைப்பு 1955-இல் துருக்கி, ஈராக் ஆகிய இரு நாடுகளாலும் பாக்தாத்தில் உரு வாக்கப்பட்டது. பின்னர் பாகிஸ்தான், ஈரான், பிரிட்டன் ஆகிய நாடுகள் இதில் உறுப்பினர்களாக இடம் பெற்றன. அமெரிக்கா இவ்வமைப்பில் உறுப்பு நாடாக இடம் பெறாமல் இவ்வமைப்பை ஆதரித்தது.

மேற்கண்ட நான்கு அமைப்புகளும் வல்லரசுகளின் சார்பு கொண்டே அமைந் திருப்பதைக் கண்ட நேரு இவற்றைப் புறக்கணித்தார்.

### இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை

''வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை, ஒன்றோடு ஒன்று மோதி நிற்கிற எந்த வல்லரசு அணியுடனும் சேராத தனியான கொள்கையை இந்தியா பின்பற்றும். அமைதிநாடுகிற நாடு களுடன் இணைந்து அனைத்து நாடுகளுக் கிடையேயும் ஒத்துழைப்பையும், நல லெண்ணத்தையும் உருவாக்க இந்தியா பாடுபடும். எந்த நாடும் எந்த நாட்டையும் சுரண்டாமல் தடுத்து நிறுத்த இந்தியா உழைக்கும்'

**உலக அமைதிக்காகப் போராடிய நேருவை 'மனித இனத்தின் மனச்சாட்சி அவர்' (Nehru is the expression of the Conscience of Mankind) என்று போற்றினார் எகிப்து அதிபர் நாசர்.**

என்று தம்முடைய வெளிநாட்டுக் கொள் கையை உலகுக்கு அறிவித்தார் நேரு. தாம் அறிவித்தபடி அதற்குச் செயல் வடிவமும் கொடுத்தார்.

### பஞ்சசீலக் கொள்கை

ஆசிய நாடுகளின் மாநாடு ஒன்று இந்தோனேசிய நாட்டிலுள்ள பாண்டுங் நகரத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் ஆசிய நாடுகளிடையே ஒற்றுமை நிலவ ஐந்து விதிகளை முன்வைத்தார் நேரு. அவை:

1. பிற நாட்டின் எல்லை அமைப்பை யும் அரசாண்மையையும் மதித்தல் (Respect for Territorial Integrity and Sovereignty)

2. பிற நாடுகளைத் தாக்காதிருத்தல் (Non-aggression)

3. பிற நாடுகளின் உள்நாட்டு விவ காரங்களில் தலையிடாதிருத்தல். (Non-interference in others' internal affairs)

4. நாடுகளுக்கிடையே சமத்துவம் நிலவச் செய்தல் (Equality).

5. அமைதியுடன் இணைந்து வாழ்தல் (Peaceful Co-existence) என்பனவாகும். இவற்றை ஆசிய நாடுகள் மகிழ்ச்சியோடு ஏற்றன. இக்கொள்கைகளே பின்னர் பஞ்சசீலக் கொள்கைகள் என்று போற்றப் பெற்றன.

### அணிசேரா இயக்கம் (Non-Aligned Movement)

வல்லரசுகளைக் கண்டிக்கவும் வலி வில்லாத நாடுகளைக் காப்பாற்றவும் இயக்கமொன்று தேவை என்பதை உணர்ந்தார் நேரு. யூகோஸ்லாவியா நாட்டின் பிரியோனி நகரில் யூகோஸ் லாவியா நாட்டுத் தலைவர் மார்ஷல் டிட்டோ, எகிப்து அதிபர் நாசர், நேரு ஆகிய மூன்று தலைவர்களும் ஒன்று கூடினர். நேருவால் பண்டுங் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பஞ்சசீலக் கொள்கை களுக்குச் செயல் வடிவம் கொடுக்க முனைந்தனர். ஜூலை 1956-ஆம் ஆண்டு இம்மூன்று தலைவர்களும் மேற்கொண்ட முடிவுகளின் அடிப்படை யில் அணிசேரா இயக்கம் பிறந்தது.

யூகோஸ்லாவியா நாட்டுத் தலை நகரான பெல்கிரேடில் 1961 செப்டம் பரில் முதல் அணிசேரா இயக்க மாநாடு நடைபெற்றது. இருபத்து ஐந்து நாடுகள் இம்மாநாட்டில் பங்கு பெற்றன. அன்று முதல் இவ்வியக்கம் படிப்படியாக வளர்ச்சி பெற்றுள்ளது.

அணிசேரா இயக்கத்தின் அடிப் படைக் கொள்கைகளைப் பின்வருமாறு விவரித்தார் நேரு: 'மோதுவதற்காகவே கூடிநிற்கும் வல்லரசு அணியிலிருந்து விலகி நிற்பதே நமது நோக்கம். எல்லா நாடுகளுடனும் நெருங்கி நட்பு கொள் ளவே நாம் விரும்புகிறோம், அவை தாமாகவே சிக்கல்களை உருவாக்காத வரை அமெரிக்காவுடன் நட்புக் கொண்டு ஒத்துழைப்பதே நமது எண்ணம். சோவியத் யூனியனுடனும் முழுக்க ஒத்துழைப்பதே நமது குறிக்கோள்'.

### அணிசேரா இயக்கத்தின் தற்போதைய நிலை

அணிசேரா இயக்கம் உலகத்தின் மிகப் பெரிய அமைதி இயக்கமாகத் திகழ்கிறது. உலகின் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகை கொண்ட 101 நாடுகள் இவ்வியக்கத்தில் இணைந்துள் ளன. நேரு பெருமகனின் பெருமுயற்சி யால் யூகோஸ்லாவியா நாட்டின் தலை நகரான பெல்கிரேடில் தொடங்கப்பட்ட அணிசேரா இயக்கம் தனது இருபத்தைந் தாவது வயதில், 1986-ஆம் ஆண்டு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான ஜிம்பாப்வேயின் தலைநகர் ஹராரேயில் கூடி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர் மானத்தை எழுச்சியோடு நிறைவேற்றியது. உலகின் பெரும்பான்மை மக்களின் மனச் சாட்சிக் குரலாக அந்தத் தீர்மானம் திகழ்ந்தது. அதுதான் தென்னாப்பிரிக்கா வின் வெள்ளையர் அரசின் இனவெறிக்கு எதிரான தீர்மானம்.

தென் ஆப்பிரிக்க அரசுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளையும், பிறதடை களையும் ஐக்கிய நாடுகள் அவை விதிக்க வேண்டும் என்று அம்மாநாடு ஒருமன தாக வலியுறுத்தியது. மேலும் தென் ஆப்பிரிக்காவுக்குப் பொறியியல் சாதனங்கள் வழங்குவது, எண்ணெய் ஏற்றுமதி, விமானத் தொடர்பு வசதி போன்ற எல்லா வற்றையும் உலக நாடுகள் நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப் பட்டது.

ஈரான், ஈராக் நாடுகளிடையே நடை பெற்றுவந்த போரினை நிறுத்த வேண்டும் எனவும், லெபனான், ஆப்கானிஸ்தான், நிகாரகுவா, லிபியா, இலங்கை, மொராக்கோ, வியட்நாம், கம்பூச்சியா

போன்ற நாடுகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்தியது.

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான நமீபியாவுக்கு விடுதலை வழங்கிட வலி யுறுத்தும் தீர்மானத்தை நிறைவேற்ற ஐ.நா. வின் பொதக்குழு சிறப்புக் கூட்டம் நடத்தவேண்டுமென இம்மாநாடு வலி யுறுத்தியது. நமீபியாவின் கோரிக்கையை ஐ.நா.வில் வலியுறுத்த அணிசேரா நாடுகள் சிலவற்றைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இப்படி, நாடுகளிடையே போரைத் தவிர்க்க, அடிமை நாடுகளை விடுவிக்க, இனவெறியை முறியடிக்க முனைந்து நிற்கிறது இந்த இயக்கம். உலக அமை திக்கு நேரு மேற்கொண்ட முயற்சிகளுக் குத் தக்க சான்றாக அமைந்துள்ளது இவ் வியக்கம்.

## அனைத்து நாட்டுப் பிரச்சினைகளில் நேருவின் நிலை

### சீனப்போர்

சீனப் பிரதமர் சூ.என்.லாய் நேருவின் பஞ்சசீலக் கொள்கையை ஏற்றுக் கொண்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். சீனாவை நேரு மிகவும் நம்பினார். ஆனால், 1962 செப்டம்பரில், இந்தியா மீது படையெடுத்தது சீனா. வடகிழக்கு எல்லையைக் கடந்து மக்மோகன் கோட்டைக் கடந்து தாக்கியது. 36,000 சதுர கிலோ மீட்டர் வடகிழக்கு எல்லைப் பகுதியைக் கைப்பற்றியது. அந்த நிலையிலும் நேரு தனது நடுநிலைக் கொள்கையைக் கைவிட வில்லை. வல்லரசுகளின் உதவியை நாட வில்லை. அமைதி வழியிலேயே முடிவு காண முயன்றார்.

### சூயஸ்கால்வாய் தேசியமயமாக்கம்

1956-இல் சூயஸ்கால்வாயை எகிப் திய குடியரசுத் தலைவர் நாசர் தேசிய மயமாக்கினார். அங்கு ஆதிக்கம் செலுத் திக் கொண்டிருந்த பிரிட்டன் படையை அனுப்பியது. பிரிட்டனின் பிரதமர் அந்தோணி ஈடன், நாசர் கருத்தை ஏற்க மறுத்தார். இப்பிரச்சனையில் நேரு பிரிட்டனுக்கு எதிராக, எகிப்துக்கு ஆதர வாக நின்றார்.

### ஹங்கேரியில் ரஷ்யத் தலையீடு

1956-இல் ஹங்கேரியில் கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு எதிராக உள்நாட்டில் எதிர்ப் புக் கிளம்பியது. வார்சா ஒப்பந்தத்தின் படி அந்தக் கிளர்ச்சியை அடக்க ரஷ்யா தனது படைகளை அனுப்பியது. ஹங்கேரி யின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலை யிடுவது தவறு என்று ரஷ்யாவை நேரு கண்டித்தார்.

### வடகொரியத் தாக்குதல்

1950-ஆம் ஆண்டு வடகொரியா தென்கொரிய நாட்டைத் தாக்கியது. இச்செயலை நேரு வன்மையாகக் கண்டித் தார். தென்கொரிய நாட்டுக்கு இந்திய இராணுவ மருத்துவக் குழு ஒன்றையும் அனுப்பி உதவினார்.

### நேருவின் வெறுப்பின்மை

பிரிட்டன் பல்லாண்டுக்காலம் இந்தி யாவை அடிமைப்படுத்தி வைத்திருந்தது. அதை எதிர்த்துச் சிறை சென்று பல்லாயிரம் பேரைச் சிறைக்கு அனுப்பியும் பல நூறு உயிர்களை இழந்தும், அண்ணல் காந்தி யின் அகிம்சை நெறி நின்று போராடி இந்தியா விடுதலை பெற்றது. தன்னை அடக்கி வைத்திருந்த பிரிட்டனின் தலை மையில் இயங்கிய காமன்வெல்த் (Commonwealth) நாடுகளின் கூட்டமைப் பில், கசப்பை மறந்து இந்தியாவும் இடம்பெற நேரு உதவினார். பலர் எதிர்த்தனர். ஆனால் நேரு உறவையே நாடினார். அதனால்தான் நேருவைப் பாராட்டினார் பிரிட்டனின் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில். 'நேரு அச்சமற்ற வர். வெறுப்பும் கொள்ளாதவர்' (Nehru is a man who knows neither fear nor hate) என்று கூறினார்.

### தன் நிலைபற்றிய நேருவின் கருத்துகள்

எந்த நாட்டு மக்களையும் புண்படுத் தாமல் உலக மக்களின் ஆதரவை நேரு வால் திரட்ட முடிந்தது.

'நீங்கள் எந்த அணியையும் சாராமல் நிற்பது நடைமுறைக்கு ஒத்துவராது. நடை முறைக்கு ஏற்றது எதுவோ நடைமுறை யில் நமக்குச் சாதகமானது எதுவோ அதைத்தான் பின்பற்ற வேண்டும். நீங்கள் அளவுக்கு மீறி இலட்சியவாதியாக இருக்கிறீர்கள். அதுநடைமுறைக்கு ஏற்ற தல்ல' என்றனர் பலர். இதற்கு விளக்க மாகப் பதிலளித்தார் நேரு.

**'நேரு ஒரு கம்யூனிஸ்ட் என்று சிலர் கூறுகிறார்கள். நேரு கம்யூனிஸ்டாக இருக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. நேரு நேரு வாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறேன்'** (Some say Nehru is a Communist. I do not want him to be a Communist I want Nehru to be Nehru) **என்றார் ரஷ்ய நாட்டுத் தலைவர் குருச்சேவ்.**

நடைமுறை, நடைமுறை என்றும், சாத்தியமானது, சாத்தியமானது என்றும் பார்த்துச் செயல்படுகிற மனிதர்களும், நாடுகளும் என்னவாகின்றன என்பது தெரிந்ததே. இந்த நடைமுறை அணுகு முறையினால் பல நாடுகள் இடைவிடாத போராட்டத்துக்கும், போருக்கும், வேதனைக் கும், சோதனைக்கும் உள்ளாகித் தவிப் பதைக் காண்கிறோம். சாதகமானது, சாத்தியமானது என்ற பெயரால் அல்லல் களையும், அவலங்களையுமே அடைய வேண்டியதிருக்கிறது. இதற்குப் பெயர் நடைமுறை அணுகுமுறை என்பது சரி யல்ல.

நமக்குச் சாதகமாக இருக்க வேண்டும். நமக்கு நன்மை தருவதாகவே இருக்க வேண்டும் என்று நினைத்தாலும், அதற் காக ஒரு பக்கம் சார்ந்தவராக இருக்க வேண்டும் என்பது சரியல்ல. அதற்கும் நேர்மையான, ஒளிவு மறைவற்ற, சுதந்திர மான நடுநிலை வழியே சிறந்தது. இந்த நடுநிலைப்போக்கு என்பது ஒரு குறிப் பிட்ட சூழ்நிலையில் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் நிகழ்ச்சிகளும், நிலைமை களும் மிகவும் விரைவாக மாறிக்கொண்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை யில் இரண்டு தீமைகளில், கடுமை குறைந்த தீமையே சிறந்தது என்று தெரிந் தெடுக்க வேண்டியதுவரும்.

இந்தியா மக்களாட்சி முறையையே நிலைநாட்ட விரும்புகிறது. எனவே, மக்களாட்சிக்கு எதிரான எதையும் இந்தியா எதிர்க்க வேண்டும்.

இந்தியா, தான் விரும்பியதைச் செய் வதிலும் உலக அமைதியைக் காப்பதிலும் உலக நாடுகளின் ஒற்றுமையை நிலை நாட்டுவதிலும் தனி உரிமையுடன் செயல்பட முடிந்தது. நடுநிலைமையுடன் நின்றதால், சூயஸ்கால்வாய் பிரச்சினை, ஹங்கேரி, சைப்ரஸ், காங்கோ, தென் வியட்நாம், ஆயுத ஒழிப்பு போன்ற எல்லா பிரச்சினைகளிலும் இந்தியா தனி யாகச் சொந்தமுடிவினை எடுக்கும் உரிமை யுடன் விளங்கியது.

நடுநிலைக் கொள்கை என்றால் எந்த நிலையிலும் பனிப்போரில்கூடப் பங்கு பெறுவது கிடையாது என்று பொருள். எந்தப் பக்கமும் சாயாத நிலையில் அரசு இருக்க வேண்டும். மக்கள் அமெரிக் காவை ஆதரிப்போராக இருக்கலாம் அல்லது சோவியத் யூனியனை ஆதரிக்க லாம். அவர்கள் பொதுவுடைமையை ஆதரிக்கலாம். ஆனால், அரசாங்கம் எந்தப் பக்கமும் சாயாது இருக்க வேண்டும்.

இந்திய அரசின் கொள்கை சில வேளைகளில் அமெரிக்காவை ஆதரிக் கிறது. சில வேளைகளில் ரஷ்யாவை

ஆதரிக்கிறது, என்று குறை கூறப்பட்டது உண்டு. ஐக்கிய நாடுகளின் அவையில் இந்தியா சுதந்திரமாக தனது கருத்துகளை எடுத்துரைக்கும்போது அமெரிக்கா ஐயம் தெரிவித்தது; சோவியத் யூனியன் சந்தேகப்பட்டது.

அமெரிக்கா 'சீட்டோ' (SEATO), 'சென்டோ' (CENTO),போன்ற அணிகளை உருவாக்கி, பாகிஸ்தானுக்கு உதவியபோதும் இந்தியா தனது நடு நிலைக் கொள்கையிலிருந்து நழுவ வில்லை. இது அன்றைய அமெரிக்க அதிபர் ஐசன் ஹோவருக்கு எரிச்சலூட்டி யது என்றாலும் இந்தியா எந்தப் பக்கமும் சாயவில்லை.



**தன்னலமற்ற சேவையின் அடிப்படையில் தோன்றிய தூய்மையான இயக்கத்தில் தகாத முறை யில் ஒரு சிலர் நடந்து கொள்வதால் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றித் தரக்குறைவான கருத்துக்கள் நாட்டில் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாசு துடைக்கப்பட வேண்டும். கூட்டுறவில் ஈடுபட் டோர் சுயநலத்தை ஒதுக்கித் தள்ளி, பொது நலத்தையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டும்.**

**—பேரறிஞர் அண்ணா**

சோவியத் யூனியனின் சோசலிசக் கொள்கை இந்தியாவுக்கு ஏற்றதாக இருந்தது. அதனை இந்தியா ஏற்றது. ஆனால் ஜனநாயக உரிமைகள் என்று பார்க்கும்போது, அமெரிக்காவின் கொள் கையை இந்தியா ஏற்று தனது அரசியல் அமைப்பில் அதற்கு இடம் கொடுத்தது.

இந்தியாவின் இந்த நடுநிலைக் கொள்கை அதன் கலப்புப் பொருளா தாரத்திலும் இடம் பெற்றது. புதிதாக விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகள், ஆசிய நாடுகள் இந்தியாவின் நடுநிலைக் கொள்கையை ஏற்றுக் கொண்டன.

நாளடைவில் அணிசேராக் கொள்கை யைக் கொண்ட இந்தியாவை, அமெரிக் காவும் ஆதரித்தது; ரஷ்யாவும் ஆதரித்தது ஆதரித்தது மட்டுமல்ல, நிதியுதவியுமளித்தன.

## இரும்புத் திரையை உடைத்தவர் நேரு

நேரு அமெரிக்காவுக்கு 1949-இல் சென்றார். 1954-இல் சீனாவுக்குச் சென்றார். 1955-இல் அவர் ரஷ்யா வுக்குச் சென்றார்.

1955 ஜூலைத் திங்களில் நேரு ரஷ்யாவுக்குச் சென்றபோது அவர் பெற்ற வரவேற்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது. வேறு எந்த வெளிநாட்டுத் தலைவருக்கும் அத்தகைய வரவேற்பு மக்களிடமிருந்து ரஷ்யாவில் கிடைத்ததில்லை. ரஷ்யா வுக்குச் சென்ற பிறகு நேருவின் புகழ் மிகவும் பரந்து விரிந்தது.

ரஷ்யாவுக்குச் சென்ற நேரு, ரஷ்யத் தலைவர்கள் குருச்சேவையும் புல்கானி னையும் இந்தியாவுக்கு வருமாறு அழைத் தார். 1955-ஆம் ஆண்டு இறுதியில் அவர்கள் இந்தியாவுக்கு வந்தனர். இரும்புத் திரை எனக் கருதப்பட்ட ரஷ்யாவின் திரையைக் கிழித்து அதன் தலைவர்களை வெளியுலகுக்குக் காட்டிய பெருமை நேருவையே சாரும். இந்திய நாட்டுக்கு வந்தபின்னர்தான் ரஷ்ய நாட்டுத் தலைவர்கள் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்றனர்.

நேருவின் அணிசேராக் கொள்கையை யூகோசுலேவியா அதிபர் டிட்டோ ஏற்றார் என்பது மட்டுமல்ல, சீனத்துத் தலைவர் களும் வரவேற்றனர். இப்படி அனைத்து நாடுகளும் அனைத்துத் தலைவர்களும் போற்றிய நேருவின் நடுநிலைக் கொள்கை தான் உலகில் போரைத் தவிர்த்து அவருக்குப் புகழைச் சேர்த்தது.

உலக அமைதிக்காகப் போராடிய நேருவை 'மனித இனத்தின் மனச்சாட்சி அவர்' (Nehru is the expression of the conscience of Mankind) என்று போற்றி னார் எகிப்து அதிபர் நாகர்.

'நேரு ஒரு கம்யூனிஸ்ட் என்று சிலர் கூறுகிறார்கள். நேரு கம்யூனிஸ்டாக இருக்க வேண்டும் என்று நான் விரும்ப வில்லை. நேரு நேருவாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறேன்' (Some say Nehru is a Communist. I do not want him to be a Communist. I want Nehru to be Nehru) என்றார் ரஷ்ய நாட்டுத் தலைவர் குருச்சேவ்.

'இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பலமும் பலவீனமும் ஒரே மாதிரிதான் ஆனால், இந்தியாவுக்கு ஒன்றே ஒன்று கூடுதல். அது நேருதான்' (India and Pakistan have the same strengths and weaknesses but India has one plus - Nehru) என்று இந்தியாவுடன் மோதிக் கொண்டிருக்கும்போதே, பாகிஸ்தான் அதிபர் காஜா நஜிமுதீன் கூறினார்.

நேருவை இப்படி நட்பு நாட்டாரும், நடுநிலை நாட்டாரும், பகை நாட்டாரும் பாராட்டிப் பேசக் காரணம் நேருவின் நடுநிலைக் கொள்கைதான்.

படைபலம் இல்லாத நாட்டின் தலை வரான நேரு படைபலமிக்க வல்லரசு களால் பெரிதும் மதிக்கப்பட்டார். அந்த நாடுகள் அவரது கருத்துக்கும் ஆலோ சனைக்கும் காத்துக்கிடந்தன. அவரது கருத் து ஆலோசனையாக மட்டுமல்ல; ஆணை யாகவே அமைந்தது. வல்லரசு நாடுகள் கூட அவரை வணங்கின. இந்தச் செல் வாக்கு வேறு எந்தத் தலைவருக்கும் இருந்த தில்லை.

இந்த உலகம் பண்புடையவர்களால் தான் வாழ்கிறது. பண்புடையவர்கள் இல்லை என்றால் இவ்வுலகு மண்ணோடு மண்ணாக மறைந்து போகும் என்றார் வள்ளுவர்.

'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்
அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'

என்றார் வள்ளுவர்.

உலகின் வல்லரசுகள் போர்க்கருவி களைப் பெருக்கிக் கொண்டே போகின் றன. அழிவுக்கு அழிவு எதிர் அழிவு என்ற நிலைதான் இன்றுள்ளது. எனவே யாராலும் அழிக்க முடியாத அரண் அறிவு என்னும் அரண் என்கிறார் வள்ளுவர். அழிவினைத் தடுக்கும் கருவி என்கிறார்.

'அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்'

என்றார் வள்ளுவர்.

வள்ளுவர் வழி நின்று அறிவு என்னும் அரண் கொண்டு உலகத்தை அழி வினின்றும் காத்தவர் நேரு. அவரது வெளிநாட்டுக் கொள்கை எந்த நாட்டை யும் வெறுக்காத கொள்கை. எல்லா நாடு களும் விரும்பிப் போற்றிய கொள்கை.

நேரு தனது நடுநிலைக் கொள்கை யால் உலக ஒற்றுமையை நிலைநாட்டி னார். உலக அமைதியைக் காத்தார். மூன்றாவது உலகப் போர் ஒன்று வராமல் தடுத்தார்; உலக அழிவினைத் தவிர்த்தார். அதற்குக் காரணம் அனைத்து நாடுகளும் போற்றிய அவரது நடுநிலைக் கொள்கையேயாகும்.

அழிவினின்றும் அகிலத்தைக் காக்க இன்று ரஷ்ய அதிபர் கார்பச்சேவ், அமெரிக்க அதிபர்கள் ரீகன், புஷ் ஆகியோர் நடுநிலையுடன் நின்று செயற் படுகிறார்கள். நேரு காட்டிய நேர்மை யான அன்பு வழி, அறவழியே அவர் களை இணைத்துள்ளது என்றால் அது மிகையாகாது. ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

Licence No. TN/MS(C)/PP-23

